48

# தமிழ்ப் பெருமாட்டி

மலர் II. 1935—ஆகஸ்ட் மீ இதழ் 4.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3-JAN 1936
MADRAS

(4)



வித்வான் கே. துரைஸ்வாமி ஐயங்கார் B. A.,

JL
2.211, 234 T8
N35.2.4
199436

## முதலாவது ஆ[illegible]ஞ்சிகைகள்

முதலாவது ஆண்டில் வெளியான பகுதிகள் அடியில் வருமாறு புஸ்தக ரூபமாய் பைண்டு செய்யப் பெற்றிருக்கின்றன.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| நாவல்-புஷ்பாங்கி அல்லது திடீர்ப்பிரவேச மகா ஜாலப் பரதேசியார் 1, 2 பாகங்கள் ... | 3 | 8 | 0 |
| சமய விளக்கம் ... ... ... | 0 | 8 | 0 |
| விக்ஞான் வினவிடை ... ... ... | 0 | 8 | 0 |
| தேக தத்துவ சாஸ்திரம் ... ... | 0 | 8 | 0 |
| ஆகமொத்தம் | 5 | 0 | 0 |

எல்லாவற்றிற்கும் ஆர்டர் செய்தால், தபாற் செலவு இல்லாமல், ரூ. 5-க்கு எல்லா புஸ்தகங்களும் அனுப்பப்படும். ஒன்றை அல்லது சிலவற்றை மாத்திரம் வாங்கினல், தபாற் செலவு சேரும்.

இரண்டாவது ஆண்டில் புதிதாய் சந்தாதாரராய்ச் சேருவோருக்கு இவையாவும் ரூ. 3-8-0க்கு தபாற் செலவின்றி அனுப்பப்படும். எற்கனவே இரண்டாவது வருஷத்திற்கு சந்தாத் தொகையை அனுப்பிவிட்டவர்கள் ரூ. 3-8-0 மணியார்டர் செய்வது போதுமானது. இனிமேல் சேருவோர் இரண்டு வருஷங்களுக்கும் சேர விரும்பினல் ரூ. 5-8-0 மணியார்டர் செய்யவேண்டும்.

## இனாம் புஸ்தகம்

இரண்டாவது வருஷத்திற்கு சந்தாத் தொகையை அனுப்புவோர், சந்தாத் தொகையோடு 8 அணு சேர்த்தனுப்பினல், ரூ. 1–8–0 விலை பெற்றதும், காலிகோ பைண்டு செய்ததும், இந்நூலாசிரியரால் எழுதப் பெற்றதுமான இங்கிலாந்து தேச சரித்திர மொன்று இனமாய் அனுப்பப்படும். நேரில் பணம் செலுத்துவோர் 4 அணு கொடுப்பது போதுமானது.

இந்த இனம் புஸ்தகம் 1935ஹு ஆகஸ்ட் மாதம் 30உ வரையில் சேருவோருக்கு மாத்திரமே கொடுக்கப்படும்.

எற்கனவே ரூ. 2 அனுப்பிவிட்டவர்கள் 8 அணுவுக்கு ஸ்டாம்பு அனுப்பினல், அல்லது, நேரில் 4 அணு செலுத்தினல், இந்த இனம் புஸ்தகம் கிடைக்கும்.

3 JAN 1933 MADRAS

## அத்தியாயம்—8

### கர்ணுமிருதம் வர்ஸஸ் கீதாமிருதம்

ஜில்லா ஜட்ஜ் கந்தசாமி பிள்ளையின் வீட்டிற்கு ஒருவர்பின் னொருவராய் மூன்று ஸ்திரீகள் வந்த தினத்தன்று இரவு 9-மணிக்கு சங்கரையருடைய சாப்பாட்டு ஓட்டலிலிருந்து ஒருவர் வெளியில் வந்தார். அவர் தமது வஸ்திரத்தைத் தலையில் போட்டுத் தம் அடையாளம் எவருக்கும் தெரியாதபடி வீதியை அடைந்த காலத்தில், எதிர்த்த வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்த வக்கீல் வயத்துநாதையர் ஓசையின்றி நடந்து வந்து அவரோடு சேர்ந்து கொண்டு, "ராமநாதா, நீ முன்னுகவே வந்து சாப்பிட்டுவிட்டுப் போயிருப்பாயோ என்று சந்தேகப் பட்டுக்கொண்டே நின்றேன்" என்றார்.

**ராமநாதன் :**—நான்தான் ஒன்பது மணிக்கு முன் வருகிறதில்லையே! இன்னம் எத்தனை தினங்களுக்கு நான் ஒளிந்துகொண்டிருக்கவேண்டுமோ தெரியவில்லையே!

**வக்கீல் :**—நீ இனிமேல் போலீஸாரைப்பற்றி பயப்பட வேண்டியதில்லை.

**ராமநாதன்:**—(வியப்போடு) ஏன்? ஏதாவது விசேஷம் நடந்ததா?

**வக்கீல் :**—ஜட்ஜ் கந்தசாமி பிள்ளையே இன்று போலீஸாரைக் கூப்பிட்டு சொல்லிவிட்டார். இப்போது நடந்த திருட்டில் நீ சம்பந்தப் படவில்லை யென்றும், இதற்குமுன் நடந்த திருட்டு விஷயத்தில்கூட நீ நிரபராதி என்றும், உன்னை இனி தேடவேண்டா மென்றும் சொல்லிவிட்டாராம்.

**ராமநாதன் :**—இதையெல்லாம் உங்களுக்கு யார் சொன்னது?

**வக்கீல் :**— நம்பிக்கையான ஒரு மனிதரிடம் ஜட்ஜியே சொல்லி யனுப்பினர். இது பொய்யான தகவல் அல்ல. இதை நீ நம்பலாம்.

**ராமநாதன் :**— போகட்டும். இப்போதாவது உண்மை வெளி யாயிற் றல்லவா. எனக்கு ஏதோ கொஞ்சத்தில் கொஞ்சம் நல்ல காலம் பிறக்கிற மாதிரி இருக்கிறது. நான் இந்த ஊரில் இருந்து

என்ன செய்கிறது. நீங்கள் கொடுத்த 100 ரூபாய்தான் கையிலிருக்கிறதே. நான் உண்மையிலேயே காசி முதலிய இடங்களுக்குப் போய்விட்டு வரலாமென்று நினைக்கிறேன்.

**வக்கீல்:**—சே! அப்படிச் செய்யாதே! இன்னம் சில முக்கியமான காரியங்கள் ஆகவேண்டி யிருக்கின்றன. நீ இன்னம் சொற்ப காலம் இந்த ஊரிலேயே இருக்கவேண்டும்.

**ராமநாதன்:**—நிற்க நிழலில்லை; படுக்கப் பாயில்லை; சத்திரா போஜனம், மடா நித்திரை என்பதுபோல் இருக்கிறது என் காலக்ஷேபம். ஒரு நாள் கழிவது நரக வேதனையா யிருக்கிறது.

**வக்கீல்:**—இனிமேல் நீ அப்படியெல்லாம் கஷ்டப்பட வேண்டியதில்லை. என்னுடைய ஜாகைக்கே உன்னை இப்போது அழைத்துக் கொண்டு போவதற்கு சில இடைஞ்சல்கள் இருக்கின்றன. ஆகையால் நீ தற்காலீகமாய் இருப்பதற்கு சௌகரியமான ஓர் இடம் அமர்த்தி இருக்கிறேன். ஓட்டலில் இருந்து ஒவ்வொரு வேளையிலும் உனக்கு அங்கேயே சாப்பாடு கொண்டு வரும்படி செய்துவிடுகிறேன். நீ கொஞ்ச காலம் அங்கேயே இரு.

**ராமநாதன்:**—இடம் எந்தத் தெருவில் இருக்கிறது?

**வக்கீல்:**—இதே தெருவோடு கொஞ்சம் போனால், குறுக்கில் ஒரு தெருவு வருகிறதல்லவா. அதில்தான் இடம் இருக்கிறது.

**ராமநாதன்:**—பிள்ளையார் கோவில் தெருவிலா?

**வக்கீல்:**—ஆம்.

**ராமநாதன்:**—அங்கே காலி இடம் ஏது? பெரிய மெத்தை வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு வீடு காலியா யிருந்ததாம். அதைக்கூட யாரோ ஒரு பாகவதர் சில தினங்களுக்குமுன் எடுத்துக்கொண்டாராம். அந்தத் தெருவில் வேறு இடம் ஏது?

**வக்கீல்:**—அந்த பாகவதர் அந்த வீட்டில் ஒரு சிறிய பாகத்தை வாடகைக்குக் கொடுத்திருக்கிறார். அங்கேதான் நீ இருக்கவேண்டும்.

**ராமநாதன்:**—பக்கத்திலிருக்கும் மெத்தை வீடு தாசி வீடுபோல் இருக்கிறதே!

**வக்கீல்:**—அவள் இருந்தால் நம்மை என்ன செய்கிறாள். அவள் பாட்டில் அவள் இருக்கிறாள். நம் பாட்டில் நாம் இருக்கிறோம்—என்றார்.

அவ்வாறு அவர்கள் இருவரும் சம்பாஷித்துக் கொண்டு பாக வதர் வாடகைக்கு எடுத்துக்கொண் டிருந்த வீட்டை அடைந்தனர். ராமநாதனுக்காக உத்தேசிக்கப் பட்டிருந்த பாகத்தில் இருந்த அறையின் கதவை வக்கீல் பூட்டியிருந்தா ராதலால், அவர் உடனே திறவு கோலை எடுத்துத் திறந்து விளக்கைக் கொளுத்தினர். உட் புறத்தில் ஒரு டிரங்க் பெட்டி, ஒரு படுக்கை, சில பாத்திரங்கள் முத லியவை புதியவைகளாய் வாங்கி வைக்கப் பட்டிருந்தன.

ராமநாதன் :—இவைகள் யாருடையவை?

வக்கீல் :—உனக்காகத்தான் நான் இவைகளை வாங்கினேன். பெட்டிக்குள் மாற்று வேஷ்டிகள் இருக்கின்றன.

ராமநாதன் :— அடேயப்பா! எனக்காக நீங்கள் எத்தனை ஏற்பாடுகள் பண்ணி இருக்கிறீர்கள்; எனக்கு இங்கே புதுக் குடித் தனம் ஆரம்பம்போல் இருக்கிறது.

வக்கீல் :—என்ன செய்கிறது. கிரகசாரம் யாரை விட்டது. மகாராஜாக்களான பஞ்ச பாண்டவர், நளன், ராமன் முதலியோர் காடு களிலும் அன்னியருடைய இடங்களிலும் போய் கொஞ்சகாலம் தங்கவில்லையா; நாம் எந்த மூலை. அந்த மாதிரி நினைத்து மனதை சமாதானப் படுத்திக்கொள்—என்றார்.

அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை முடிய, வக்கீல் தமக்கு நேரமாகிறதென்று சொல்லி ராமநாதனைத் தனிமையில் விட்டு விட்டு வெளியில் போய்விட்டார்.

ராமநாதன் பெட்டியைத் திறந்து படுக்கையைப் பிரித்து, அவைகளில் என்னென்ன சாமான்கள் இருந்தன வென்பதைப் பார்த்தபின், படுக்கையை விரித்துக்கொண்டு படுத்து அன்றைய இர வைக் கழித்தார். மறுநாள் காலையில், பின் புறத்திலிருந்த கிணற்றில் ஸ்நானம் முதலிய காரியங்களை முடித்துக் கொண்டிருக்க, காலக் கிரமப்படி சங்கரையருடைய ஓட்டலில் இருந்து அவருக்கு அவசிய மான சிற்றுண்டிகள், போஜனம் முதலியவை வந்து சேர்ந்தன வாகையால், ராமநாதன் தமது வியவகாரங்களை முடித்துக்கொண்டு அந்த வீட்டிலேயே சௌகரியமாய் இருந்தார்.

இரவில் ராமநாதன் தமது சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுக்கையை அறைக்குள் பிரித்துப்போட்டு அதில் படுத்துக்கொண் டார். அங்கு காற்றோட்டம் குறைவா யிருந்ததாகையால், புழுக்க

மும், வியர்வையும் ஏற்படவே, அவர் தமது படுக்கையை எடுத்துக் கொணர்ந்து திண்ணைகள் ஒன்றில் பிரித்துவிட்டு அதில் படுத்துக் கொண்டார். வீட்டில் இருந்த இன்னொரு குடித்தனக்காரர் வெளிக்கதவை மூடிக்கொண்டு உட்புறத்தில் படுத்தார். திண்ணையில் படுத்த ராமநாதனுக்கு தூக்கம் உண்டாகவில்லை யாதலால், அவர் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தார். அப்போது, "சங்கரா, மகாதேவா" என்று யாரோ உருக்கமாய் மிக சமீபத்தில் கூறிய சொற்களின் ஓசை உண்டாக, ராமநாதன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தார். அப்போது அந்த வீட்டின் இன்னொரு திண்ணையில் ஒரு மனிதர் உட்கார்ந்திருந்தது தெரிந்தது. அவர் மினுமினுப்பான சிவந்த சரீரமுடையவராயும் மிக படாடோபமான அலங்காரமுடையவராயும் காணப்பட்டார். அவர் ஓர் ஐயர் என்பது சந்தேகமறத் தெரிந்தது. அவர் சங்கீத வித்வானா, அல்லது, ஹரி கதை செய்யும் பாகவதரா என்ற இரண்டில் ஒன்று நிச்சயமானாலும், அது எது என்பது நிச்சயிக்கப்படக் கூடாததா யிருந்தது.

அவர் தமது இடுப்பில், சலவையிலிருந்து அப்போதே மடிப்பு பிரிக்கப்பட்டதும், அகலமான பட்டுக்கரை உடையதுமான ஒரு வேஷ்டியை பஞ்சகச்சமாய் உடுத்திக்கொண்டிருந்தார். வலது தோளின்மேல், ஏராளமான ஜரிகை வேலைப்பாடுகள் செய்த ஒரு சால்வையும், இடது தோளில் ஒரு ஜரிகை வேஷ்டியும் காணப்பட்டன. அவைகள் இரண்டிற்கும் நடுவில், கழுத்தில் அணியப் பெற்றிருந்த தங்கக் கொடியோடு கூடிய நகாஸ் உருத்திராக்ஷம் நெஞ்சுக் குழியில் பதிந்து பிரகாசித்துக்கொண் டிருந்தது. செவிகளில் வெள்ளைக் கடுக்கன்களும், இரண்டு கை விரல்களில் பல மோதிரங்களும் ஜிலு ஜிலென்று மின்னின. அவருடைய தலை முழுதிலும் ஸ்திரீயின் தலைபோல மயிர் அடர்ந்திருந்ததானாலும் அது நீளமாய் இராமல் குட்டையாய் வெட்டப்பட்டு, இராஜாக் குடுமியாய் பிடரியில் மேல் நோக்கிச் சுருண்டு தொங்கியது. அவருடைய தலை மயிர் முழுதும் இயற்கையிலேயே நெளிவுடையதா யிருந்தது அவருடைய முகத் தோற்றத்தை வசீகரமானதாகச் செய்தது. அவருடைய முகத்தில் மீசை காணப்படவில்லை.

அத்தகைய ஆடம்பர அலங்காரத்துடன் வந்து உட்கார்ந்தவர், படுத்திருந்தவரைக் கூப்பிடக் கூடாதென்ற கிலேசத்தைக்

கொண்டவர்போல், சுவாமியின் நாமஸ்மரணம் செய்பவர்போல் சங்கரா, மகா தேவா என்று உரக்கக் கூவினர்.

ராமநாதன் சரேலென்று எழுந்து உட்கார்ந்துகொண்டு, "யார் நீங்கள்?" என்று வினவினர்.

மற்றவர், "நான் இருப்பது மேற்கே உறையூர். ஜீவன காரியத்தை உத்தேசித்து இந்த ஊருக்கு வந்தேன். வந்த இடத்தில் அகால வேளை ஆய்விட்டது. எனக்கு இந்த ஊரில் யாரும் பரிச்சயமில்லை. எங்கேயாவது திண்ணையில் முடங்கிக்கொண்டிருந்து இராப்பொழுதைக் கடத்தலாமென்று நினைத்தேன். எந்தத் திண்ணையிலும் ஒருவர் கூடப் படுத்திருக்கக் காணேன். இந்தத் திண்ணையில்தான் நீங்கள் இருந்ததைக் கண்டு, பயமில்லாமல் படுத்துத் தூங்கலாமென்று உட்கார்ந்தேன். நான் இங்கே படுத்துக்கொள்ளலாமல்லவா? என்னுல் யாருக்கும் அசௌகரியம் ஏற்படாதே?" என்றார்.

ராமநாதன்:—காலியாய்க் கிடக்கும் திண்ணையில் நீங்கள் படுத்துக் கொள்வதில் யாருக்கு என்ன விதமான அசௌகரியம் ஏற்படப் போகிறது. நீங்கள் குசாலாய்ப் படுத்துக்கொள்ளலாம். ஆனல், உங்கள் உடம்பில் இருக்கும் நகைகளையெல்லாம் ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளுங்கள். இரவில் அயர்ந்து தூங்கும்போது எவனாவது கழற்றிக்கொள்ள முயற்சித்தாலும் முயற்சிப்பான். தூங்குவதை அரை விழிப்பாகவே தூங்குங்கள்.

மற்றவர்:—நான் ஏழைப் பிராம்மணன் என்பது திருடனுக்குத் தெரியும். என்னுடைய வியாபாரத்திற்கு இவைகள் உப லக்ஷணங்கள் என்பதும் திருடனுக்குத் தெரியும். இவைகளின்மேல் ஓர் ஈ, எறும்புகூட மொய்க்காது. அதைப்பற்றி எனக்குக் கவலையே இல்லை. அப்படியே போய்விட்டாலும், திருடன்தான் சந்தோஷப்படட்டுமே. அதோடு நாம் உயிரை விட்டுவிடவா போகிறோம். நம்முடையது அல்லவென்று நினைத்து சமாதானம் பண்ணிக் கொள்ளுகிறோம்.

ராமநாதன்:—நீங்கள் பெரியவர்கள். நான் சிறியவன். உங்களுக்குத் தெரியாததற்கு நான் சொல்லிக் கொடுக்கவா போகிறேன். உங்கள் யுக்தம்போல் செய்யுங்கள்.

மற்றவர்:—நீங்கள் இந்த கிரகத்தில் வஸிக்கிறவர்களா?

ராமநாதன் :—ஏன் கேட்கிறீர்கள் ?

மற்றவர் :—விச்சாதான் கேட்டேன். இதற்குப் பக்கத்தில் பிரம்மாண்டமான மெத்தை வீடிருக்கிறதே! இந்த ஊரிலேயே இது தான் பெரிய வீடுபோல் காணப்படுகிறது! இதில் இருக்கிறவர்கள் பெரிய தனிகர்களோ!

ராமநாதன் :—அந்த சங்கதி எனக்கு அவ்வளவு திட்டமாய்த் தெரியாது. நம்முடைய சொந்த வியவகாரங்களை கவனிப்பதற்கே நமக்கு நேரமில்லை. அப்படி இருக்க, அயலாரைப்பற்றி விசாரிக்க முடிகிறதா ? நான் என் காரியத்தோடு போகிறவனேயன்றி பிற ருடைய சங்கதியைத் தெரிந்து கொள்ளவோ, அதில் தலையிடவோ விரும்புகிறதில்லை.

மற்றவர் :—நீங்கள் சொல்லும் வார்த்தை அக்ஷர லக்ஷம் பெறும். உங்கள் வாய்க்கு கற்கண்டுதான் போடவேண்டும். கூடிய வரையில் நாம் அயலார் விஷயங்களில் தலையிடாதிருப்பதுதான் உத்தம லக்ஷணம். ஆனால், ஒரு விஷயம். நமக்குப் பக்கத்தில் இருப்பவர் இன்னார் என்பதைக்கூடத் தெரிந்துகொள்ளாமல் இருப் பது யுக்தமாகாது. நாம் அயலார் விஷயத்தில் தலையிடக் கூடா தென்பது சிறந்த வாக்கு. ஆனால் அவர்கள் யார், நல்லவர்களா, கெட்டவர்களா என்பதைக்கூடத் தெரிந்துகொள்ளாமல் இருந் தால், நாம் சுத்த மௌடீகர் என்று பிறர் நம்மை நினைக்க இடம் கொடுக்கும். ஆகையால், சகல விஷயங்களையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்; தெரிந்து கொள்ளாதவர்போல் எதிலும் சம்பந் தப்படாமல் இருக்க வேண்டும். களவும் கற்று மற என்று பெரி யோர் சொல்லியிருக்கிறார்களே! நான் உங்களுடைய சொந்தக்காரன் என்று வைத்துக்கொள்ளுவோம். நான் இந்த ஊருக்குப் புதியவன். உங்களைப்பற்றி நான் யாரிடத்தில் கேட்டாலும், ஒவ்வொருவரும் எனக்குத் தெரியாது எனக்குத் தெரியாது என்று சொன்னால், நான் எப்படி உங்களிடம் வந்து சேருகிறது. ஆகையால் அயலா ரைப்பற்றிய விவரங்களை நாம் தெரிந்துகொண்டு, அதை நல்லவழியில் பயன்படுத்த வேண்டும். அது அவருடைய விஷயத்தில் நாம் அநா வசியமாய்த் தலையிடுவதுபோல் ஆகாது. இதெல்லாம் உங்களுக்குத் தெரியாதென்று நான் நினைப்பதற்கில்லை. நான் இவ்வளவு தூரம் சொல்வது எதற்கென்றால், எல்லாம் சுயநலம் கருதித்தான். நான் ஹரிகதை செய்யும் பாகவதர். சுமார் 50 கதைகள் வரையில் நான்

செய்வேன். இந்த ஊரில் உள்ள பெரிய மனிதர் எவரையாகிலும் பரிச்சயம் பண்ணிக்கொண்டால், அவர் மூலமாக என் காலக்ஷேபம் இந்த ஊரில் கொஞ்ச காலத்திற்கு நடைபெறுமல்லவா. அதற்காகத்தான் கேட்டேன். பெரிய மனிதரை எப்படிக் கண்டு பிடிக்கிறது? பெரிய வீடாயிருந்தால், அதில் இருப்பவர் பெரிய மனிதராய்த்தா னிருப்பர் என்ற ஒரு குருட்டு நம்பிக்கை.

ராமநாதன்:—ஓ, அப்படியா! நான் இந்த இடத்திற்கு நேற்று தான் குடி வந்தேன். அதனால் நான் பக்கத்து வீட்டாரைப்பற்றி அதிகமாய்த் தெரிந்துகொள்ள எனக்கு அவகாசம் ஏற்படவில்லை. நான் வெளியில் போய் வந்தபோது, யாரோ ஒரு ஸ்திரீ என் கண்ணில் பட்டாள்; பார்வைக்கு அவள் பெரிய மனிதர் வீட்டுப் பெண்பிள்ளை மாதிரிதான் இருக்கிறாள். அவளைத் தவிர இன்னம் யார் யார் இருக்கிறார்களோ தெரியவில்லை. எல்லாவற்றிற்கும் நீங்கள் பொழுது விடிந்தவுடன் பக்கத்து வீட்டிற்குப் போய்ப் பேசி பாருங்களேன்.

பாகவதர்:— அதுதான் சரியான யோசனை. அப்படித்தான் செய்யவேண்டும். இந்த கிரகத்தில் நீங்கள் மாத்திரம் குடும்பத்தோடிருக்கிறீர்களா? நீங்கள் பிராம்மணாள் தானே?

ராமநாதன்:—இங்கே என்னைத் தவிர, இன்னொரு குடும்பத்தார்களும் இருக்கிறார்கள். நாங்கள் ஸ்மார்த்த ப்ராம்மணாள்.

பாகவதர்:—ஓ! அதுவரையில் பெரிய சந்தோஷம். கண்டவர்களுடைய வீட்டுத் திண்ணையில் படுக்காமல், நம் சுயஜாதியாருடைய வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொள்ளுகிறோமென்பது ஒரு பெரிய திருப்தி. சரி. உங்களுடைய நித்திரைக்கு இடையூறாக நான் பேசிக்கொண்டிருப்பது ஒழுங்கல்ல. நீங்கள் தூங்குங்கள். நானும் தூங்குகிறேன்—என்று கூறியபடி வஸ்திரத்தைக் கீழே போட்டுக்கொண்டு, சால்வையால் உடம்பைப் போர்த்திப் படுத்துக் கொண்டு குறட்டைவிடத் தொடங்கினார். ராமநாதன் அதற்கு மேலும் சிறிதுநேரம் விழித்துக்கொண்டிருந்து தூக்கத்தில் ஆழ்ந்து போனார்.

இராப்பொழுது எவ்வித சம்பவமுமின்றி கழிந்தது. காலை ஆறு மணிக்கு ராமநாதன் எழுந்தபோது, பாகவதர் காணப்படவில்லை. அவர் புறப்பட்டு பக்கத்து வீட்டிற்குப் போயிருப்பா

றென்று நினைத்துக்கொண்டு ராமநாதன் தமது படுக்கையை உள்ளே வைத்துவிட்டு, பின்புறம் போய்த் தமது காலைக் கடமைகளை முடித்துக்கொண்டு திண்ணைக்கு வர, அப்போது பாகவதர் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்.

ராமநாதன் :—பக்கத்து வீட்டிற்குப் போயிருந்தீர்களா ?

பாகவதர் :—பொழுது விடிவதற்குள் நாம் போய் நின்றால், சிலருக்குக் கோபம் வந்தாலும் வரும்; சில பெரிய மனிதர்கள் ஏழு மணி வரையில் தூங்குவார்கள். எதிராளியின் சந்தர்ப்பத்தைத் தெரிந்துகொள்ளாமல் நாம் திடும்பிரவேசமாய்ப் போய் நிற்பது தப்பு. காலையில் எழுந்து ஸ்நானம் அநுஷ்டானம் முதலிய காரியங்களை முடித்துக்கொண்டு வந்துசேர்ந்தேன். அது பிரதானமான தல்லவா. இனிமேல்தான் நான் பக்கத்து வீட்டுக்குப் போகப் போகிறேன்.

ராமநாதன் :—சரி, போய்ப் பாருங்கள். எனக்குக்கூட வெளியில் கொஞ்சம் வேலை இருக்கிறது. நான் போய்விட்டு அரை மணியில் திரும்பி வருவேன்—என்று கூறியபடி வெளியில் போய்விட்டார்.

உடனே பாகவதரும் எழுந்து தயங்கித் தயங்கி நடந்து அடுத்த வீட்டிற்குப் போய் நடையில் நின்றுகொண்டு இரண்டுதரம் கனைத்து ஓசை செய்து ஒரு நிமிஷம் பொறுத்துப் பார்த்தார். யாரும் பேசவில்லை. அவர் துணிந்து, "ஐயா, ஐயா," என்று மிக மிருதுவாகக் கூப்பிட்டார்.

உடனே தாசி லீலாவதி, "யாரது அது ?" என்று கேட்டுக்கொண்டு அங்கே வந்தாள். வந்தவள் பாகவதருடைய படாடோப வேஷத்தைப் பார்த்தவுடன் பயபக்தி விநயத்தோடு கைகுவித்தபடி, "சுவாமிகள் எந்த ஐயாவைத் தேடுகிறீர்கள் ?" என்றாள்.

பாகவதர் தமது இடது கையைத் தூக்கி மார்பின்மீது வைத்துக்கொண்டு, "நீ மகாராஜியாய் இருக்கணும்" என்று ஆசீர்வதித்துவிட்டு, "நான் இந்த வீட்டு எஜமானரோடு கொஞ்சநேரம் பேசவேண்டும். அதற்காக அவர்களைக் கூப்பிடுகிறேன்" என்றார்.

லீலாவதி :—(புன்னகையோடு) இந்த வீட்டிற்கு எஜமானர் இல்லை; எஜமானிதான் உண்டு.

பாகவதர் :—ஓகோ! அப்படியானல், போய் வருகிறேன் அம்மா—என்று கூறி, போவதற்கு முன்னறிகுறியாக இன்னொரு முறை தமது இடது கையை உயர்த்தினர்.

லீலாவதி :—(சந்தோஷ முகமலர்ச்சியோடு) ஏதோ காரணமாக வந்து, இந்த வீட்டு ஐயாவைத் தேடினீர்கள். இந்த வீட்டிற்கு அம்மாள்தான் இருக்கிருள் என்ற உடன், போகிறேன் என்கிறீர்களே! உங்கள் உத்தேசத்தை அம்மாளிடம் சொல்லக் கூடாதா, ஐயாவிடமேதான் சொல்ல வேண்டுமா?

பாகவதர் :—(மிக விநயமான குரலில்) அப்படி ஒன்றுமில்லை. ஐயா என்றால், யாரும் தாராளமாகப் பேசலாம்; உரிமையாக எதையும் சொல்லலாம். எங்கும் 'அம்மாள்' என்பது மகா பரிசுத்தமான வஸ்துவல்லவா; அவர்கள் அநுமதித்தாலன்றி, பிற புருஷர் அவர்களிடம் உரிமையோடு பேசுவது கிரமத் தவருன விஷயம். அதனல், போவதாகச் சொன்னேன். நீங்கள் கேட்கிறீர்களாகையால் சொல்லத் தடையில்லை. என் சொந்த ஊர் மேற்கே உறையூர். நான் சுமார் 50 ஹரி கதைகள் வரையில் செய்வேன். அதோடு சங்கீதம், பரத நாட்டியம், கெஞ்சின் முதலியவை எனக்குத் தலைகீழாய்ப் பாடம். நம்முடைய யோக்கியதையைக் கண்டு ரஸித்து, நம்மை ஆதரிக்கக் கூடிய பெரிய மனிதர் யாராவது இந்த மாடி வீட்டில் இருக்கலாமென்று நான் இந்த வீட்டிற்கு முதன் முதலாக வந்தேன். வந்தவுடன் சாக்ஷாத் மகாலக்ஷ்மி காட்சி கொடுப்பதுபோல நீங்கள் வந்து சுமுகமாய்ப் பேசுகிறீர்கள். அதுவே ஒரு பெரிய திருப்தி. அநேகம் பெரிய மனிதர்களுடைய மாளிகைகளில் முன்னல் ஒரு பயங்கரமான ஜெந்து படுத்திருக்கும். உள்ளே நுழையும்போதே அது லொள்ளென்று குலைத்துத் துரத்த ஆரம்பிக்கும். அதனிடம் கடி படாமல் அந்த இடத்தை விட்டுப் போவதே போதுமென்று ஆய்விடும். அப்படி நடக்காமல், நீங்கள் வந்து என்னை இவ்வளவு பூஜிதையாய் நடத்துவது ஒரு நல்ல சகுனம்.

லீலாவதி :—(புன்னகையோடு) நீங்கள் நடையில் நின்றே பேசுகிறீர்களே. உள்ளே வந்து ஊஞ்சல் பலகைமேல் உட்கார்ந்து பேசலாமே.

பாகவதர் :—(உள்ளே போய் கூடத்தில் தொங்கிய ஊஞ்சல் பலகையின்மேல் உட்கார்ந்துகொண்டு) சம்போ, மகாதேவா!

லீலாவதி :—உங்கள் பெயர் என்னவோ?

**பாகவதர்** :—என்னுடைய பெயரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக் கலாமென்கிற எண்ணம்போ லிருக்கிறது. நான் நாடக மேடை பாக வதராயோ, அல்லது, கிராமபோன் பிளேட் பாகவதராயோ இருந் தால் என் பெயர் பிராபல்ய மடைந்திருக்கும். நான் இன்னம் அவ் வளவு தூரம் உயரவில்லை. ஆகையால் என் பெயர் இந்த ஊர் வரையில் எட்டியிருக்காது.

**லீலாவதி** :—புலிக்குப் பசித்தாலும், அது புல்லைத் தின்னுதென் பார்கள். அதைப்போல நீங்கள் இருக்கிறீர்கள்போ லிருக்கிறது. நிறை குடத்தின் நீர் தளும்பாது என்று பழமொழி சொல்லுகிறார் களேயானாலும், சில நிறைகுடம் தளும்பித்தான் போகிறது. உங்கள் பெயர் இன்னதென்று புதிதாகத்தான் தெரிந்துகொள்ளுகிறேனே! சொல்லுங்களேன்.

**பாகவதர்** :—என் பெயரைச் சொல்வதைப்பற்றி எனக்கு எவ் வித ஆக்ஷேபனையும் இல்லை. என்னை **சங்கீத சாகித்ய பரத நாட்டிய பாகவத கேசரி, கர்ணாமிருத பாகவதர்** என்று குறிப்பார்கள். உறையூரிலும், அதைச் சுற்றி வெகுதூரம் வரையிலும் கர்ணாமிருத பாகவதர் என்றால், அது ஒரு குழந்தைக்குக்கூடத் தெரியும். இந்த வீட்டில் வேறே யாரையும் காணவில்லையே. நீங்கள் மாத்திரம் தனியா யிருக்கிறீர்களா? இந்த வீட்டின் எஜமானியே நீங்கள்தானா?

**லீலாவதி** :—ஆம். நான்தான் இந்த வீட்டின் எஜமானி; நான் இங்கே தனியாகத்தான் இருக்கிறேன். நான் இந்த ஊர் அம்மன் கோவில் சின்னமேளத்தில் சேர்ந்தவள்.

**கர்ணாமிருதம்** :—(சந்தோஷ முகமலர்ச்சியோடு) ஓகோ! அப் படியா சங்கதி! நீயும் என்னுடைய இலாகாவில் சம்பந்தப்பட்டவள் தான். நீ கேளிக்கை வாய்ப்பாட்டு முதலியவைகளில் கெட்டிக் காரியா யிருப்பாய்.

**லீலாவதி** :—ஏதோ உங்களைப்போன்ற பெரியவர்களுடைய அநுக்கிரகத்தினால் எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் பழக்கமுண்டு.

**கர்ணாமிருதம்** :—உனக்கு சிக்ஷை சொல்லிக் கொடுத்த வாத்தி யாருடைய பெயரென்ன?

**லீலாவதி** :—அவர் திராச்சினாப்பள்ளிக்காரர். அவர் எங்கள் ஜாதியார்தான். அவருடைய பெயர் கோவிந்தசாமி பிள்ளை. அவர் இறந்து போய்விட்டார்.

கர்ணமிருதம் :—(வியப்பும் குதூகலமும் அடைந்து) அடேடே! நம்முடைய கோவிந்தசாமியின் சிஷ்யையா நீ! அவன் என்னிடத்தில் தானே தயாரானன். அநியாயமாய் எமன் அவனைக் கொண்டுபோய் விட்டான். நான் இந்த ஊருக்கு வந்ததற்கு இந்த ஒரு பெரிய சந்தோஷ சங்கதி கிடைத்தது. என் சிஷ்யையா யிருந்தாலென்ன, என் கோவிந்தசாமியின் சிஷ்யையா யிருந்தாலென்ன! கொஞ்சமும் வித்தியாசமே இல்லை. எனக்கு இந்த ஊரில் காலணாகூட வருமானம் இல்லாமல் போனுல்கூட இனி நான் விசனமே அடையமாட்டேன். உன்னைப் பார்த்ததால் உண்டாகும் சந்தோஷம் இருக்கிறதே, அது ஒரு லக்ஷம் பெறும். கோவிந்தசாமி அருமையான பையன். மகா கெட்டிக்காரன். ஏக சந்தைக் கிராஹி என்பது அவனுக்கு நன்ருகப் பொருந்தும். அவனுல் அபிமானிக்கப்பட்டவளான நீ அவனை விட ஒரு படி மேலானவளாய்த்தா னிருப்பாய். அதைப்பற்றி சந்தேகமே இல்லை. ஈதினமே சுதினமே என்று பாட்டுப் பாடுவதுபோல், இன் றையதினம் நல்ல சுபதினம் என்றே நான் மதிக்கிறேன்.

லீலாவதி:—நீங்கள் பேசுவதைக் கேட்க என் மனதிலும் ஒருவித மான சந்தோஷம் பொங்குகிறது. இவ்வளவு பெரிய ஊரில் என்னு டைய வீட்டிற்கு நீங்கள் வந்தது தெய்வாதீனமென்றே நினைக்கிறேன்.

கர்ணமிருதம் :— ஆம். தடையென்ன. அப்படித்தான் சொல்ல வேண்டும். வித்தையின் மூலமோ, சரீரத்தின் மூலமோ, கொடுக்கல் வாங்கல் மூலமோ எந்தவிதத்திலாவது பழைய சம்பந்தம் இருந்தால் அவர்கள் இந்த ஜென்மத்திலோ அடுத்த ஜென்மங்களிலோ எப்படி யும் ஒருவரோடொருவர் மறுபடி சம்பந்தப்பட்டேதான் தீரவேண் டும். நம்முடைய கோவிந்தசாமி இறந்துபோய் விட்டானென்று நாம் நினைக்கிருேம். அவன் மறுபடி எங்கேயாவது பிறந்து, சிறு பையனுய் நம்மோடு பழகிக்கொண்டுதா னிருப்பான். அதைத் தெரிந்து கொள்ள நம்மால் முடிகிறதில்லை.

லீலாவதி :—நீங்கள் எங்கே ஜாகை வைத்துக்கொண் டிருக்கிறீர் களோ ?

கர்ணமிருதம் :—நான் இன்னம் எங்கேயும் ஜாகை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. நேற்று சாயரக்ஷைதான் நான் இந்த ஊருக்கு வந் தேன். இதற்குப் பக்கத்து வீட்டின் திண்ணையில் படுத்து இரவைக் கடத்தினேன்.

லீலாவதி:—சரி; நீங்கள் எனக்குப் பரமகுரு ஆகிவிட்டீர்கள். நான் என் குருவிற்கு என்னென்ன உபசரணை செய்யவேண்டுமோ, அவைகளை விடப் பன்மடங்கு அதிகமாய் உங்களுக்குச் செய்யக் கடமைப்பட்டவள். உங்களுக்கு என்னென்ன செளகரியங்கள் தேவையோ அவைகளை இங்கேயே செய்துகொள்ளலாம். காலை வேளை தவறிப்போகிறதே. காப்பி, பலகாரம் எல்லாம் வரவழைக்கிறேன். முதலில் வயிற்றுக் காரியத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள். அதற்குமேல் நாம் மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசுவோம்.

கர்ணாமிருதம்:— அடாடா! என்ன மனசு! என்ன மனசு! கோவிந்தசாமிகூட இப்படித்தான் உபசாரம் பண்ணுவான். நீ இவ்வளவு பிரியத்தோடு உபசாரம் பண்ணுவதை நான் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதைப் பற்றித்தான் நான் விசனமடைகிறேன். நான் இப்போதுதான் ஓட்டலுக்குப் போய், பலகாரம், காப்பி, எல்லாம் சாப்பிட்டு வந்தேன். வயிற்றில் கொஞ்சம்கூட இடமில்லை. இந்த வேளையோடு என்ன முழுகிப்போகிறது. ஒரு நாளைக்கு நாம் எத்தனையோ தடவைகள் நம்முடைய உடம்புக்கு மண்டகப்படி நடத்திக்கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறோம். அடுத்த வேளைக்கு நீ வரவழைப்பதை சாப்பிட்டால், உனக்கு திருப்தியாகிறது. அதிருக்கட்டும். இந்த ஊர் அம்மன் கோவிலில் எத்தனை காலம் பூஜை நடக்கும்?

லீலாவதி:—நாலு காலம் பூஜை.

கர்ணாமிருதம்:— நீ எப்போது போகவேண்டும்?

லீலாவதி:— காலை ஒன்பது மணிக்கு நடக்கும் காலை சந்தி பூஜைக்கும், சாயங்காலம் ஏழு மணிக்கு நடககும் சாயரக்ஷை பூஜைக்கும் நான் போகவேண்டும்.

கர்ணாமிருதம்:—அந்தக் கோவிலுக்கு நீ ஒருத்திதான் தேவதாசியா?

லீலாவதி:—என்னைத் தவிர இன்னம் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள்.

கர்ணாமிருதம்:—உங்கள் பெரியவர்கள் காலம் முதல் நீங்கள் பரம்பரையாய் அந்தக் கோவிலுக்கு தேவதாசிகளோ?

லீலாவதி:—ஆம்.

**கர்ணாமிருதம் :**—கோவிலார் உங்களுக்கு மானியம் ஏராளமாக விட்டிருக்கிறார்களா?

**லீலாவதி :**— அதெல்லாம் ஒன்று மில்லை. மாதச் சம்பளம் ரூ. 3–8–0; தினம் 1 படி அரிசி. ஏறுபடி காலங்களில், பிரஸாதங்கள் கிடைக்கும். கோவில் மரியாதையை விடக்கூடாதென்று இதை நான் வைத்துக்கொண்டிருக்கிறேன். கலியாண காலங்களிலும், வெளியூர்களில் உத்சவங்கள் நடக்கும்போதும், என்னை அடிக்கடி கேளிக்கைக் கச்சேரிக்குக் கூப்பிடுவார்கள். அப்போதுதான் எனக்கு ரொக்கமாக 100, 50 என்று கிடைக்கும்.

**கர்ணாமிருதம் :**—அப்படியா! இந்த வீடு ஓர் அரண்மனைபோல் பிரம்மாண்டமானதா யிருக்கிறது. உன்னைத் தவிர வேறே யாரையும் காணோமே. நீ தனியாகவா இருக்கிறாய்?

**லீலாவதி :**—நானும் என் வேலைக்காரியும் இங்கே இருக்கிறோம். என்னோடு பிறந்த அண்ணன் ஒருவனிருக்கிறான். அவன் வேறோர் இடத்தில் இருக்கிறான்.

**கர்ணாமிருதம் :**—அவன் நாகணம், தவில் முதலிய வித்தைகள் எதிலாவது தேர்ச்சி யடைந்திருக்கிறானோ?

**லீலாவதி :**— அவனுடைய சங்கதியைப்பற்றி மாத்திரம் என்னிடம் கேட்கவேண்டாம். எனக்கும் அவனுக்கும் மனஸ்தாபம்.

**கர்ணாமிருதம் :**—ஓ, அப்படியா! உலகத்தில் ஒரு தாய் வயிற்றில் பிறப்பவர் ஒருவருக்கொருவர் பகைத்துக்கொண்டு பிரிந்து போவதுதான் சகிக்க முடியாத விசனம்.

**லீலாவதி :**—என்ன செய்கிறது. மனதுக்குப் பிடிக்காவிட்டால், பிரிந்து போவதுதானே நல்லது.

**கர்ணாமிருதம் :**— ஆமம்மா. நீ சொல்வது நல்ல காரியந்தான். அப்படியானால் உன் அண்ணனுக்கும் உனக்கும் சொத்து விஷயத்தில்கூட சம்பந்த மில்லையா?

**லீலாவதி :**—இல்லை.

**கர்ணாமிருதம் :**—அவன் எங்கேதான் இருக்கிறான்?

**லீலாவதி :**—அதுகூட எனக்குத் தெரியாது.

**கர்ணாமிருதம் :**—உங்களுக்குள் அவ்வளவு மனஸ்தாபமா! வீட்டுக்கு வீடு வாசல் இருக்கவே இருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்

திலும் ஒரு விதமான சங்கடம் இருந்துகொண்டுதா னிருக்கிறது. சரி; நான் இங்கே வந்தது அநேக விதங்களில் அநுகூலமானதாய் முடிந்தது. இந்த ஊரில் உள்ள முக்கியமான தனிகர்களையெல்லாம் நீ தெரிந்துகொண்டிருப்பாய். என்னை ஆதரிக்கக்கூடிய பெரிய மனிதர்கள் யாராவது இருக்கிறார்களா என்பதை நீ சொல்ல வேண்டும். பெரிய மனிதர்களில், உடம்பினால் பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள், வயதினால் பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள், குணத்தினால் பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள், வித்தையினால் பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள், பணத்தினால் பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள். இந்த மாதிரி பல தினிசு பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள். நமக்கு வேண்டியவர்கள் பணத்தினால் பெரிய மனிதர்கள்; அதோடு அவர் நம்முடைய வித்தைகளில் சுலபத்தில் ஈடுபடக் கூடியவர்களாயுமிருக்கவேண்டும்.

**லீலாவதி :—** (சற்று யோசனை செய்து) இந்த ஊரில் தனிகர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்தவரையில் சங்கீதத்திலோ, ஹரி கதைகளிலோ பிரியமுடையவர்கள் யாருமில்லை என்றே நினைக்கிறேன்.

**கர்ணாமிருதம் :—** ஓகோ! அப்படிப்பட்ட நிரக்ஷர குக்ஷியான தனிகர்களைக் கொண்ட ஊரா இது! இதைக் கேட்டவுடன் எனக்குப் பழைய சங்கதியொன்று நினைவிற்கு வருகிறது. சில மாதங்களுக்குமுன் நான் வேலூருக்குப் போயிருந்தேன். அந்த ஊரில் பல பெரிய உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சுய ஜாதி மனிதர்கள் யார் யார் என்று விசாரித்தேன். போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் வேலை பார்க்கிறார் ஒருவர் என்று சொன்னார்கள். அவருடைய பெயர் சமய சஞ்சீவி ஐயரோ என்னவோ என்று சொன்னார்கள். அந்த உத்தியோகம் வெள்ளைக்கார துரைகளுக்கே கிடைக்கக்கூடிய உத்தியோகமாம். நம் ஜாதியானுக்கு அது எப்படிக் கிடைத்திருக்கும் என்ற சந்தேகம் என் மனதில் உதித்தது.

**லீலாவதி :—** நம்முடைய மனிதர் என்றால், அவரிடம் அபாரமான திறமை இருக்கலாம்.

**கர்ணாமிருதம் :—** நான் அப்படி நினைக்கவில்லை. இந்தக் காலத்தில் பிராம்மணீகத்தை ஒருவர் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாய் விடுகிறாரோ அவர் அபாரமான யோக்கியதை யுடையவர்; எவர், அப்

படி விட்டது மாத்திரமன்றி, அதை பகிரங்கமாய் தூஷித்து அதற்கு எதிரிடையான பிரசாரம் செய்கிறுரோ, அவர் இன்னம் ஒரு படி அதிகமான யோக்கியதை வாய்ந்தவர். அந்த மாதிரி யோக்கியதையில் அவர் முதல் தீர்த்தக்காரரா யிருக்கலாமென்றும், அதனுல்தான் மற்ற எவருக்கும் கிடைக்காத பதவி அவருக்குக் கிடைத்ததோ என்றும் நான் நினைத்தேன். அவர் அப்படிப்பட்டவரா யிருந்தால், ஹரி கதைக்கும் அவருக்கும் வெகுதூர மல்லவா. நான் நினைத்துக் கொண்டு போனது நிஜமாய்விட்டது. அது மாத்திரமல்ல. அவருக்கு சங்கீதத்தில் ஒரு செல்லாக் காசுக்குக்கூட ஞானம் இல்லை என்பதும் தெரிந்தது. இந்த விஷயம் முன்னுகவே எனக்குத் தெரியவில்லை. நான் போய் அநுபவித்த பிறகுதான் அது தெரிந்தது. அவரைப் பார்க்க வேண்டுமென்று நான் போனுல், வாசற்படியில் வழி மறிச்சான் ஒருவன் இருந்தான். அவன் என்னை உள்ளே விட மறுத்தான்; நான் அவனிடம் வினயமாய்ப் பேசப் பேச, அவனுக்குக் கோபம் அதிகரிக்கிறது. அவன் குபீரென்று என் கழுத்தில் கையைக் கொடுத்துத் தள்ள ஆரம்பித்துவிட்டான். நான் போகும்போதே கையோடு காவலாய் நான் மடியில் ஒரு ரூபாய் பணத்தை சொருகிக்கொண்டு போயிருந்தேன். அவன் பிடித்துத் தள்ள முயற்சித்தபோது, அவனுடைய கையைப் பிடித்துக்-கேட்டுக்கொள்வதுபோல, அவனுடைய கையை என் மடியில் இருந்த பணத்தில் வைத்தேன். அவன் என்ன செய்தான் தெரியுமா? அவன் உடனே என் கருத்தைத் தெரிந்து கொண்டு, என் மடியில் சொருகப்பட்டிருந்த ரூபாயை தாராளமாய் எடுத்துக்கொண்டான்; உடனே அவனுடைய முகம் சந்தோஷத்தினுல் மலர்ந்து போய்விட்டது. அவன் உடனே என்னைப் பார்த்து, "நீங்கள் வந்திருப்பதாக நான் போய் முதலில் சொன்னுல், அவர் விட வேண்டாமென்று சொல்லி விடுவார். நீங்கள் தடதடவென்று உள்ளே நுழைந்துவிடுங்கள். அவர் என்னைக் கூப்பிட்டுக் கேட்டால், 'உங்களுக்கு சொந்தமானவரா யிருக்கலாமென்று நினைத்து விட்டு விட்டேன்' என்று சமாதானம் சொல்லி விடுகிறேன்" என்றுன். பார்த்தாயா ஒரு ரூபாய் செய்த வேலையை?

**லீலாவதி:**—எங்கே போனுலும் தக்ஷிணை இல்லாவிட்டால் வழி பிறக்காது என்பது தெரிந்த விஷயந்தானே. உலகை யெல்லாம் துறந்த சந்நியாசிகள்கூட தங்கள் பாதகாணிக்கையை மாத்திரம் துறக்காமல் அதை நூற்றுக்கணக்கில் விகிதப்படுத்தி வைத்திருக்

கிறார்களே. மற்றவர்களைப்பற்றி சொல்லவேண்டுமா! சேவகன் சொற்ப சம்பளக்காரன்தானே. அவன் என்ன செய்வான்.

**கர்ணாமிருதம்:**—(சந்தோஷ மலர்ச்சியோடு) நான்கூட அப்படித்தான்; நீகூட அப்படித்தான். உலகமே அப்படித்தான்.

**லீலாவதி:**—சரி; மேலே என்ன நடந்தது? மூலஸ்தானத்திற்குப் போனீர்களா இல்லையா?

**கர்ணாமிருதம்:**— ஒரு ரூபாயைக் கொடுத்த பிறகு போகாமல் வருவேனா! மளமளவென்று உள்ளே நுழைந்தேன். உள்புறத்தில் ஒருவர் உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண் டிருந்தார். பார்வைக்கு அவர் வெள்ளைக்காரர்போல் இருந்தாரே யன்றி, பிராம்மணர்போல் இல்லை. நான் போனவுடன் அவர் சரேலென்று நிமிர்ந்து பார்த்து, "யாரையா நீர்? எங்கே வந்தீர்?" என்று அதட்டினார். நான் ஹரி கதை செய்யும் பாகவதர் என்றும், சங்கீத வித்வான் என்றும், அவர் தக்க கனவான் என்று கேள்வியுற்று, அவருடைய ஆதரவை நாடி வந்ததாகவும் சொன்னேன். அவருக்கு உடனே அபாரமான கோபம் உண்டாயிற்று. அவர் எழுந்து குதிரைச் சவுக்கை எடுத்து என்னை அடித்துத் துரத்த நினைக்கிறாரோ என்று நினைக்கும்படி அவருடைய முகம் மாறியது. ஆனாலும், அவர் சட்டைப்பையிலும், மேஜையிலும் எதையோ தேடியபின், எங்கிருந்தோ ஓர் அணாவை எடுத்து எனக்கெதிரில் எறிந்து, "எடுத்துக்கொண்டு போம். நிற்கவேண்டாம். நான் அவசர வேலையை கவனிக்கவேண்டும்" என்று சொல்லி, மறுபடி குனிந்துகொண்டு எழுதவாரம்பித்தார். நான் அப்படியே பிரமித்துப் போய்விட்டேன். "சுவாமிகளே, நான் சங்கீத வித்வான்; பகவத் விஷயத்தில் ஈடுபட்ட பாகவதன். நான் யாசகன் அல்ல" என்றேன். அவர், "அடே ஓய் அதெல்லாம் தெரியுங்காணும்; இரவு முழுதும் உம்முடைய பாட்டையோ கதையையோ கேட்டுவிட்டு, ஐம்பது, நூறு கொடுக்கவேண்டு மென்கிறீர். அத்தனை மணி நேரத்தையும் இழந்து ஐம்பது ரூபாய் அபராதமும் கொடுக்க நான் விரும்பவில்லை. இப்போது ஐந்து நிமிஷத்தை இழந்து ஓர் அணா அபராதம் கொடுத்ததே போதுமானது. நீ ஓர் அணாவோடு திருப்தியடையும் அற்ப சொற்பமான யாசகனல்ல. ஒரே காலத்தில் ஐம்பது நூறாகத் தட்டும் பகாசூர யாசகன். இப்போது சரிதானா? போம். நிற்காதேயும்" என்று பிடிவாதமாக மறுமொழி சொன்னார். நான், "இவைகள் உங்களைப்போன்ற மேதாவிகளுடைய வாயிலிருந்து வரக்கூடிய

வார்த்தைகள் அன்று" என்று மேலே பேசுவதற்குள், அவர், "டேய், பியூன்" என்ருர். நான், "நான் பிராம்மணன்; உங்கள் சுயஜாதியைச் சேர்ந்த கௌரதையான மனிதன்; வயதில் உங்களுக்கு மூத்தவனுய்க்கூட இருக்கலாம். நீங்கள் என்னை" என்று மேலும் பேசுவதற்குள் அவர், "பியூன், கொடு கல்த்தா; இவனை ரஸ்தாவில் கொண்டுபோய் விடு" என்ருர். அதே நிமிஷத்தில், "யாரு சாமீ நீ? நானு ஒண்ணுக்குப் போன சமயத்துலெ தடதடன்னு உள்ளற நொளஞ்சிட்டியே. போ வெளியே" என்று அதட்டியபடி, என்னுடைய ஒரு ரூபாய் நண்பன் கூசாமல் என் கையைப் பிடித்து என்னைப் பரபரவென்று இழுத்துக்கொண்டு போய் ரஸ்தாவில் விட்டு, நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்து, எனக்கு ஒரு கும்பிடு போட்டு, "எம்மேலே கோவிச்சுக்காதீங்க சாமீ; நானு அப்பவே சொன்னேனல்ல. இவன் பொல்லாத போக்கிரி சாமி. நீங்க போயி யாராச்சும் ஏழைக்கிட்ட கையை நீட்டுங்க; அவுங்க இல்லேங்காமே ஏதாச்சும் குடுத்து மரியாதெயா அனுப்புவாங்க. பெரியவங்கள்ளாம் இப்பிடித்தான்" என்று சொல்லிவிட்டு, மள மள வென்று அவன் நிற்க வேண்டிய இடத்திற்குப் போய்விட்டான். கையிலிருந்த ஒரு ரூபாயையும் இழந்து அவமானப்பட்டதே லாபமாய் நான் வந்து சேர்ந்தேன். அந்த மனிதன் பெரிய மேதாவியாம்; சங்கீத ஞான மென்பதே இல்லாத சுத்த சுண்டைக்காயன் அந்த மாதிரி மகா மகா பெரிய பூஜ்யராய் விளங்குகிருர். அது என்னுடைய சொந்த ஊராக மாத்திரம் இருந்தால், வந்தது வரட்டுமென்று அவனை சரியானபடி மோடனம் பண்ணி அனுப்பி இருப்பேன். அவன் இப்போது இந்த ஊருக்கு வந்து முகாம் செய்திருப்பதாகச் சொல்லிக் கொண்டார்கள். எப்படியாவது ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு, எல்லா ஜனங்களுக்கும் முன்னுல் அவனை பங்கப்படுத்திவிட வேண்டுமென்ற என் மனம் துடிக்கிறது. ஒரு பாட்டுக்கச்சேரியோ சதிர்க்கச்சேரியோ ஏற்படுத்திக் கொண்டு, அவனையும் மற்றவர்களையும் வரவழைத்து வைத்துக்கொண்டு, அவன் சுத்த முட்டாள் என்று பகிரங்கப் படுத்தி கை கொட்டி யனுப்பிவிட வேண்டும். இந்த விஷயத்தில் நீ கூட எனக்குக் கை கொடுத்து உதவவேண்டும். என் அந்தரங்க சிஷ்யனை கோவிந்தசாமி இருந்தால், அவன் தன்னுடைய உயிர் போவதைக்கூடப் பார்க்க மாட்டான்; ஏதாவது பிரமாதமான காரியத்தைச் செய்துவிடுவான்—என்ருர்.

அப்போது, "அம்மா இருக்கிறார்களா?" என்று மிக விநய மாக கேட்டுக்கொண்டு இன்னொருவர் நடையிலிருந்து மெதுவாகத் தாழ்வாரத்தில் வந்து நின்றார். சரேலென்று லீலாவதி திரும்பிப் பார்த்தாள். அவரும் ஒரு பிராம்மணர். அவர் தாடி, குங்குமப் பொட்டு முதலியவற்றுடன் யோகீசுவரர் போல் காணப்பட்டார். அவருடைய மற்ற அலங்காரங்கள் பாகவதருடைய அலங்காரங்கள் போலவே இருந்தன. அவர் லீலாவதியை நோக்கி மந்தஹாஸத்தோடு பேசத் தொடங்கி, "யாரோ பெரியவாளுடன் சம்பாஷித்திருக்கும் சமயம்போ லிருக்கிறது. நான் அதற்கு இடையூறாக வந்தேன். உங்கள் கடிகாரத்தில் மணி என்னவாகிறது? என் கடிகாரம் சரியாய்ப் போகவில்லை. அதனால் கேட்கிறேன்" என்றார்.

**லீலாவதி:**—(அதிருப்தியோடு அவரைப் பார்த்து) நீங்கள் யாரா யிருந்தாலும், இப்படி திடீரென்று உள்ளே வருவது சரியல்ல. நான் ஒரு பெரிய மனிதர்களோடு பேசிக்கொண் டிருக்கிறேன். இவர்களை விட்டுப் போவது மரியாதைக் குறைவு. பக்கத்து வீட்டில் கடிகாரம் இருந்தாலும் இருக்கலாம். அங்கே போய்க் கேட்டு சரிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**வந்தவர்:**—நான்தான் பக்கத்து வீட்டில் இருக்கிறவன். உங்களிடம் வந்த ஒருவரைப் பக்கத்து வீட்டிற்கு நீங்கள் உரிமையோடு இப்போது அனுப்பினீர்க ளல்லவா; அதே உரிமையை நான் வகித்துக்கொண்டு இங்கே வந்ததாக வைத்துக் கொள்ளுங்களேன். அப்போது உங்கள் கோபம் தணிந்துபோகிறது. அண்டை வீட்டுக் காரர்கள் எப்போதும் பரஸ்பரம் உரிமை உடையவர்கள்.

**கர்ணாமிருதம்:**—(சிரித்துக் கொண்டு) எந்த விஷயத்தில்? தன் வீட்டில் பிச்சைக்காரன் வந்து நின்று கூச்சலிட்டால், "பக்கத்து வீட்டிற்குப்போ, அவர்கள் போடுவார்கள்" என்று சொல்லி, தன் உபத்திரவத்தை பக்கத்து வீட்டுக்காரனுக்கு மிக சுலபத்தில் மாற்றும் உரிமை சாதாரணமாய் எங்கும் இருந்துவருகிறது.

**புதிதாய் வந்தவர்:**—அந்த மாதிரி பிச்சைக்காரனை அனுப்பும் உரிமையை, இந்த வீட்டம்மாள் மணி கேட்க வந்தவர் விஷயத்திலும் உபயோகப் படுத்தினார்கள்போல் இருக்கிறது. அம்மாள் அதிதிகளிடம் நிரம்பவும் பக்தியுடையவர்கள். நீர் வந்திருக்கையில், உம்மை விட்டுப் போவது மரியாதையல்ல வென்று நினைத்து அப்

படிச் சொன்னார்கள்போல் இருக்கிறது. ஆனால் நானும் உம்மைப் போல் ஒரு பாகவதர் - சங்கீத வித்வான் என்பது அம்மாளுக்குத் தெரிந்தால், என்னிடத்திலும் அம்மாள் அதே விதமான பிரியத் தோடுதான் நடந்துகொள்வார்கள்.

கர்ணாமிருதம்:—ஆனால் உமக்கும் எனக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. நான் இந்த ஊருக்கு வந்தவுடன் இந்த அம்மாளுக்கு முதல் மரியாதை கொடுத்து இங்கே வந்தேன். நீர் சில தினங்களாய் பக்கத்து வீட்டில் இருந்து கொண்டே இங்கே வரவில்லை; ஏதோ சுய காரியத்தை உத்தேசித்தே இப்போதும் நீர் வந்தீர்; அதிருக்கட்டும். என்னைப்போல் என்று சொன்னீரே. நான் பாகவதர், சங்கீத வித்வான் என்பது உமக்கு எப்படித் தெரிந்தது? நாங்கள் பேசியதை, மறைவில் இருந்து கேட்டீரா?

மற்றவர்:—அந்த மாதிரி ஒரு வேளை நீர் செய்வீரோ என்னவோ. எனக்கு அதில் அவ்வளவு திறமை இல்லை. நீர் நேற்றிரவு என் வீட்டுத் திண்ணையில் இன்னொருவரோடு பேசினீரல்லவா. அப்போது நீர் இருந்த இடத்திற்குப் பக்கத்தில் ஜன்னலுக்கு அப்புறம் தான் நான் படுத்துக்கொண் டிருந்தேன். நீரும் அவரும் பேசியதெல்லாம் என் காதில் பட்டது. அதனால் உம்முடைய பிரவரங்களை யெல்லாம் நான் தெரிந்து கொண்டேன்.

கர்ணாமிருதம்:—ஓ! அப்படிச் சொல்லும். நீரும் பாகவதர் என்றீரே! உம்முடைய சொந்த ஊர் எது? இந்த ஊரில் ஏதாவது கதை செய்ய உத்தேசமா?

மற்றவர்:—என்னைப் பற்றிக் கேட்ப திருக்கட்டும். உமக்கு ஏதாவது காலக்ஷேபத்திற்கு ஏற்பாடாயிற்றா? யாரையாவது பார்த்தீரா?

கர்ணாமிருதம்:—எங்கே! நேற்றிரவுதான் வந்தேன். உங்கள் திண்ணையில் சொஸ்தமாய்த் தூங்கினேன். இப்போதுதான் பொழுது விடிந்திருக்கிறது. இந்த அம்மாளுடன் அதைப்பற்றித்தான் பிரஸ்தாபித்துக்கொண் டிருக்கிறேன்.

மற்றவர்:—நான் அசிகையினால் சொல்லுகிறேன் என்று நீர் நினைத்தாலும் அதைப்பற்றி அக்கரை இல்லை. இந்தக் காலத்தில் பாகவதரை ஆதரிக்கிறவர்களே அகப்படுவது அரிதாய் விட்டது. புஸ்தகங்கள் அச்சில் வராத பழைய காலத்தில் நம்முடைய சரக்

கெல்லாம் கிராக்கியாய் விற்பனையாயிற்று. இப்போது அது எடுபட மாட்டேனென்கிறது. அதுவும் இந்த ஊரில் ஜனங்கள் இவ்வளவு முழுமோசமாய் நடந்துகொள்வார்களென்று நான் நினைக்கவே இல்லை. ஏனடா இந்தப் பைத்தியக்கார ஊருக்கு வந்தோமென்று நான் எண்ணிக்கொண் டிருந்தேன். எனக்குத் துணையாக நீர் ஒருவர் வந்து சேர்ந்தீர். நேற்றிரவு நீர் சொன்னதைக் கேட்டபோது, எனக்கு சிரிப்பு வந்துவிட்டது. அதை நான் மிகவும் பாடுபட்டு அடக்கிக்கொண்டேன்.

**கர்ணாமிருதம்:**—அடேடே! என்னால் உமக்கு அவ்வளவு பிரயாசை ஏற்கனவே ஏற்பட்டு விட்டதா? நான் அக்கம் பக்கங்களைப் பார்த்துப் பேசி இருக்க வேண்டும். அப்படிச் செய்யாதது என்மேல் தவறுதான்.

**அடுத்த வீட்டுக்காரர்:**— (புன்னகையோடு) **பகலில் பக்கம் பார்த்துப் பேசவேண்டும்** என்பார்கள்.

**கர்ணாமிருதம்:**—அப்படியானால் இரவில் எந்தப் பக்கத்திலும் பார்க்காமல் பேசவேண்டு மென்கிறீர்போ லிருக்கிறது. அது போகட்டும். இந்த ஊரின் பெருமையைப்பற்றி இவ்வளவு தூரம் சொன்ன நீர் உம்முடைய சொந்த ஊர் எது என்று இன்னமும் சொல்லவில்லை! உம்முடைய பெயரையும் சொல்லவில்லை.

**அடுத்த வீட்டுக்காரர்:**—என் சொந்த ஊர் மதுரை. என்னை சங்கீத சிங்க, பரதநாட்டிய சாம்ராட், பாகவத சிரோரத்னம், கீதாமிருத பாகவதர் என்று குறிப்பார்கள். சுருக்கமாய் கீதாமிருத பாகவதர் என்றே எல்லோரும் அழைப்பார்கள். ஷை பட்டங்கள் உடையவருக்கும், அவைகள் இல்லாதவருக்கும் இந்த ஊரில் வித்தியாசம் இல்லை. இங்கே எல்லோரும் சமமானவர்களே.

**கர்ணாமிருதம்:**—ஓ! அப்படிப்பட்ட ரஸிக ரத்னங்கள் இருக்கும் ஊரா இது! சரி; இந்த ஊரில் கச்சேரியோ, காலக்ஷேபமோ நடத்தும் அபிலாசையை நான் விட்டுவிட வேண்டியதைத் தவிர வேறு வகையில்லை. ஆனால் ஒரு திருப்தி. எண்சாண் உடம்பையும் ஒரு சாணாய் ஒடுக்கிக்கொண்டு, பல பெரிய மனிதர்களிடம் சமுகம் பார்த்துப் போய், முகத்தடி, சொல்லடி, கல்த்தா அடி முதலிய பெற்று, அதற்குமேல் இந்த விஷயத்தைத் தெரிந்துகொள்ளாமல், பிரயாசை இல்லாமல் உங்களிடம் தெரிந்துகொண்டது ஒரு பெரிய

அநுகூலம். வந்தது தான் வந்தோம். இந்த ஊரில் வந்திருக்கும் சமய சஞ்சீவி ஐயரை இன்னொருதரம் பார்த்து, எப்படியாவது மோடனப் படுத்திவிட்டுத்தான் போகவேண்டும்.

**கீதாமிருதம்:**—(வியப்போடு மற்றவரைப் பார்த்து) நீர் பேசுவது ஆச்சரியமா யிருக்கிறதே! போலீஸ் சமய சஞ்சீவி ஐயரை நீர் மோடனம் செய்கிறதாவது! அவர் எப்பேர்ப்பட்ட ரஸிகர்; நம்மைப் போன்றவர்களை ஆதரித்து சன்மானிப்பதில் அவர் கர்னனல்லவா. நான் ஒவ்வொருவரிடமும் நடையாய் நடந்து அலுத்து, கடைசியில் அந்த மகாநுபாவரிடம் போனேன். அவர் இருந்த இடத்திற்கு வெளியில் காத்திருந்தவர்கள், அவர் பாகவதர்களையும் சங்கீத வித்வான்களையும் நிரம்பவும் ஆதரிக்கக்கூடியவர் என்று என்னிடம் சொன்னது மாத்திர மல்லாமல், உடனே உள்ளே போய் என்னைப் பற்றிச் சொல்ல, அவர் உடனே எழுந்து வெளியில் வந்து என்னை அழைத்துக்கொண்டு போய் ஆசனம் கொடுத்து, உட்காரச் செய்து, என்னுடைய யோக க்ஷேமங்களைப்பற்றி விசாரித்தார். சரியாக ஒரு மணி சாவகாசம் நான் அவரோடிருந்தேன்; இரண்டு சிட்டாக்கள் பாடிக் காட்டினேன். அவர் ஒரு வெள்ளித் தாம்பாளத்தில் ஏராளமான அப்பிள், ஆரஞ்ச், திராக்ஷை முதலிய பழங்களையும், ஒரு நூறு ரூபாய் நோட்டையும் வைத்து எழுந்து நின்றுகொண்டு என்னிடம் நீட்டினர். நான் அதைப் பெற்றுக்கொண்டு வந்து சேர்ந்தேன். அவரிடம் உம்மை அனுப்பலாமென்று நான் நினைத்த சமயத்தில் நீரே அவரைப்பற்றி பிரஸ்தாபித்து அவரை மோடனம் செய்யப் போவதாய்ச் சொல்லுகிறீரே. இது எனக்கு பெரிய ஆச்சரியமா யிருக்கிறதே!

**லீலாவதி:**—(வியப்போடு கர்ணாமிருத பாகவதருடைய முகத்தைப் பார்த்து) இது நீங்கள் சொன்னதற்கு நேர் விரோதமானதா யிருக்கிறதே!

**கீதாமிருதம்:**—(லீலாவதியை நோக்கி) இவர் என்ன சொன்னர்?

**லீலாவதி:**—சமய சஞ்சீவி ஐயருக்கு சங்கீத ஞானமே இல்லையென்று அர்த்தமாகும்படி இவர்கள் பேசினர்கள்.

**கீதாமிருதம்:**—சேச்சே! அது சுத்த தப்பு! இவர் அவரிடம் போனல், தெரியும்.

லீலாவதி:— இவர்கள் ஒரு தரம் போயிருந்தார்களாம். அவர் ஓர் அணுவை எறிந்து, சேவகனை அழைத்து கழுத்தைப் பிடித்து வெளியில் கொண்டுபோய் விடச் சொன்னாராம்; ஓரணு வாங்குகிறவர் சாதாரண யாசகர் என்றும், பாகவதர்கள் ஒரே தடவையில் 100, 50 அடிக்கும் பெரிய பகாசூர யாசகர்கள் என்றும் சொன்னாராம்.

கீதாமிருதம்:— இவர் அவரிடம் போயிருக்கவே மாட்டார். இதெல்லாம் வெறும் கட்டுக்கதை. அவர் எத்தனையோ பாகவதர்களையும், சங்கீத வித்வான்களையும் ஆதரித்தது எனக்கு நேரிலேயே தெரியும். ஒரு சமயம் நான் வேலூருக்குப் போயிருந்தேன். அப்போது, அந்த ஊரார் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள். சமய சஞ்சீவி ஐயர் வாங்கும் சம்பளத்தில் அரைப்பங்கு தான தர்மம் வழங்குவதற்கு சரியாய்ப் போகிறதென்றும், அதற்கு இரண்டு தினங்களுக்குமுன்கூட உறையூரிலிருந்து யாரோ ஒரு பாகவதர் வந்தாரென்றும், அவருடைய பெயர் கர்ணாமிருத பாகவதரென்றும், அவருக்கு சமய சஞ்சீவி ஐயர் நூறு ரூபாய் சம்பாவனை செய்தனுப்பினாரென்றும் ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள்.

கர்ணாமிருதம்:—(கீதாமிருத பாகவதருடைய முகத்தை உற்று நோக்கியபடி) நீர் சொல்வது ஆச்சரியமாயிருக்கிறதே! இப்போது நாங்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்து, வேண்டுமென்றே நீர் சில தகவல்களை நேர் விரோதமாய் மாற்றிச் சொல்லுகிறீர் என்று நான் நினைக்கிறேன். நீர் குறிக்கும் கர்ணாமிருத பாகவதர் நான்தான் ஐயா. அங்கே நடந்ததை நானேதான் இந்த அம்மாளிடம் இப்போது சொன்னேன். நீர் வேலூருக்குப் போயிருக்கவே மாட்டீர்! என்னை இந்த அம்மாள் பொய்யன் என்று நினைப்பதற்காக நீர் இப்படிக் கயிறு திரிக்கிறீர் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. அதற்காகத்தான் கடிகாரத்தில் மணி என்னவென்று கேட்டுக்கொண்டு மெல்ல உள்ளே நுழைந்தீரோ! தெரிகிறது தெரிகிறது! வித்வான்கள் என்றால், ஒருவரிடத்தொருவர் உடனே சருஷை உண்டாகிவிடுவது உலக இயற்கைதான்.

கீதாமிருதம்:— அடேடேடே! அப்படியானால் நான் சுத்த அயோக்கிய மனிதன் என்று நீர் இந்த அம்மாளிடம் சொல்லாமல் சொல்லுகிறீர். நான் வேலூரில் கேட்டதாகச் சொன்னது பொய்யானால், நீர் வேலூரில் சமய சஞ்சீவி ஐயரைப் பார்த்ததே பொய்.

அது நிஜமென்றும், அவர் ஓர் அணுவை எறிந்தது உண்மையென்றும் வாயடி யடிப்பீரானால், உம்மிடம் எவ்வித சரக்கும் இல்லாமையால், அவர் அந்த மாதிரி ஓர் அணு கொடுத்தார் என்று அர்த்தம் ஆகிறது.

**கர்ணமிருதம்:**—ஓய், போதும், நிறுத்தும்; என் உடம்பில் சரக்கு இல்லை என்பதை நானே ஒப்புக்கொள்ளுகிறேன். அதை என் உடம்பின் பரிசுத்த தேஜஸே நிதரிசனமாய்க் காட்டும். அதற்கு எவருடைய சாட்சியமும் தேவையில்லை. உம்முடைய உடம்பில் ஒரு கப்பல் கொள்ளக்கூடிய சரக்கை ஏற்றிக்கொண் டிருக்கிறீர் என்பதும் பிரத்தியக்ஷமாகத் தெரிகிறது. ஆகையால் சரக்கைப்பற்றி நாம் ஒருவருக்கொருவர் பெருமை யடித்துக்கொள்வதற்கு இது சரியான இடமல்ல; சந்தர்ப்பமுமல்ல.

**கீதாமிருதம்:**—ஓகோ! உம்முடைய பெருமைக்கு இது கூடவா! சரக்கு என்பதை நான் ஒரு கருத்தில் உபயோகப் படுத்தினால், அதை நீர் தூஷணையாக மாற்றி என்னை இழிவு படுத்துகிறீரோ! இந்த சிலேடை வித்தையில் நான் உமக்கு சளைத்தவன் என்று நினைத்து விடாதேயும். உம்முடைய சல்லடைக் கடையைக் கட்டும். சல்லடையில் சர்வாங்கமும் பொத்தல் என்பது உமக்குத் தெரிந்த விஷயம்தான் காணும். நீர் இவ்வளவு தூரம் அளக்கிறீரே, சங்கீதத்தில் முதலில் அரிச்சுவடிக் கேள்வி ஒன்று கேட்கிறேன். அதற்கு நீர் சரியான உத்தரம் சொல்லும். மத்தியமாவதி ராகத்திற்கும் ஸ்ரீராகத்திற்கும் என்ன வித்தியாசம். யோசிக்காமல் சொல்லும் பார்ப்போம்.

**கர்ணமிருதம்:**—அடேடே! ஏதேது, இவர் பெரிய பரீட்சகர் ஆய்விட்டாரே! அடேயப்பா, இனி நான் பயந்துகொண்டு ஊரை விட்டு ஓடிப்போவதைத் தவிர வேறு வழி இல்லை. நீர் என்னைக் கேட்பதிருக்கட்டும். ஓப்பாரி ராகத்திற்கும், அழுகை ராகத்திற்கும் முதலில் நீர் வித்தியாசம் சொல்லும். அதற்குமேல் நீர் என்னிடம் கேள்வி கேட்கலாம்.

**கீதாமிருதம்:**—நான் கேட்பதற்கு உத்தரம் சொல்லத் தெரியாவிட்டால், அதற்கு இந்த மாதிரி கோணல் கழி வெட்டுகிறீர் என்பது பிரத்தியக்ஷமாய்த் தெரிகிறது. அடே போங்காணும் போம். இப்பேர்ப்பட்ட பாகவதர்களை நான் ஏராளமாய்ப் பார்த்திருக்கிறேன்.

**கர்ணாமிருதம்:**—அடே நீர்தான் போகணும். நான் இந்த வீட்டின் எஜமானியம்மாளுடைய அநுமதியின்மேல் இங்கே இருக்கிறேன். நீர் மணி கேட்டீர்; அம்மாள் சொல்ல மறுத்துவிட்டாள். நீர் போமேன். அநாவசியமாய் அயலார் விஷயத்தில் நீர் ஏன் தலையிடுகிறீர்?

**கீதாமிருதம்:**—(கோபத்தோடு) நான் போகாமல் இங்கே இருந்துவிடுவேன் என்று நினைக்கிறீரா! நான் போவதற்கும் இருப்பதற்கும் உம்முடைய உத்தரவு அநாவசியம்.

**லீலாவதி:**—(கீதாமிருத பாகவதரை நோக்கிக் கை குவித்து) சுவாமீ, ஏன் உங்களுக்கு இவ்வளவு கோபம் வருகிறது. ஒருவருக்கொருவர் யாரும் பேச்சில் விட்டுக் கொடுக்கமாட்டார்கள். போதும் இதோடு வாக்கு வாதத்தை நிறுத்திக் கொள்ளுங்கள். எங்கள் வீட்டில் யாரும் கூச்சலிட்டே பேச, நான் விடுகிறதில்லை. அது எனக்கு கொஞ்சமும் ஒத்துக்கொள்ளுகிறதில்லை; நீங்கள் தயவு செய்து வீட்டுக்குப் போங்கள். உங்கள் கோபம் தணிந்தபிறகு, நாம் மறுபடி பேசுவோம்.

**கீதாமிருதம்:**—நான் வீட்டிற்குப் போகாமல், இங்கே எனக்கு என்னவேலை இருக்கிறது. இந்த மனிதன் யாரோ வேஷக்காரன். இவர் ஸ்ரீராகத்திற்கும், மத்தியமாவதிக்கும் வித்தியாசம் தெரியாத பெரிய சங்கீதப்புலி. விழிப்பா யிருங்கள். ஓய் கர்ணாமிருதமே. அம்மாளுடைய காதில் அமிர்தத்தை அதிகமாய் ஊற்றிவிடப் போகிறீர். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் என்பது நினைவிருக்கட்டும். சமய சஞ்சீவி ஐயரைப்பற்றி இன்னொருதரம் அந்தமாதிரி கயிறு திருக்காதேயும். அது போலீஸார் காதில் பட்டால், உம்மை உண்டு இல்லை என்று பார்த்து விட்டுவிடுவார்கள்—என்று பேசிக்கொண்டே வெளியில் போய்விட்டார்.

அவர் போனபிறகு லீலாவதியும், கர்ணாமிருத பாகவதரும் சுமார் இரண்டு நிமிஷகாலம் கீழே குனிந்தபடி மௌனத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

பிறகு கர்ணாமிருத பாகவதர், "இந்த மனிதர் நாம் பேசிக்கொண்டிருந்ததை யெல்லாம் கேட்டுக்கொண்டு நடையிலேயே நின்றுகொண் டிருந்திருக்கிறார்; மணி எவ்வளவென்று கேட்கிறவர்போல் வந்து, வேண்டுமென்றே என்னைப் பொய்யனாக்க முயற்சித்திருக்

கிறார். என்னைப்பற்றி நீ இளப்பமான அபிப்பிராயம் கொள்ள வேண்டுமென்று இந்த மனிதர் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு சாமர்த்தியம் செய்துவிட்டார். ஆனாலும் மனிதருக்கு இவ்வளவு பொறுமையும், அழிபுத்தியும் இருக்கக்கூடாது. இருக்கட்டும். எல்லாருக்கும் ஒரு நிலைமையில் இருக்கும் பகவான் ஒருவன் இருக்கிறான். அவனுக்கு நான் எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்து விடுகிறேன். எனக்கு வெளியில் கொஞ்சம் ஜோலி இருக்கிறது. அதைப் பார்த்துக்கொண்டு வருகிறேன்" என்று கூறியபடி எழுந்தார்.

லீலாவதி அதிகமாய்ப் பேசாமல், "சரி; போய் வாருங்கள்" என்றாள். அவ்வளவோடு கர்ணாமிருத பாகவதர் அந்த வீட்டை விட்டு வெளிப்பட்டு வாசற்படியில் நின்றபடி அப்புறம் இப்புறம் மாறி மாறி இரண்டு மூன்றுதரம் பார்த்துவிட்டுக் கீழே இறங்கி, பக்கத்து வீட்டிற்குப் போய், "ராமநாதையர், ராமநாதையர்" என்று இரண்டு தடவை கூப்பிட, அவர், "வாருங்கள்; உட்காருங்கள். போன காரியம் ஏதாவது பலித்ததா?" என்றார். அப்போது இருவரும் கூடத்தில் இருந்தனர்.

கர்ணாமிருதம் கூடத்தில் நின்றுகொண்டு, "நான் பக்கத்து வீட்டிற்குத்தான் போயிருந்தேன். வேறு எங்கேயும் போகவில்லை. இந்த ஊரில் நான் வருமானம் எதையும் எதிர்பார்க்க முடியாதென்பது நிச்சயமாய்விட்டது. இதற்குள் என் விஷயத்தில் பொறுமை கொண்டு கிருக்கிரமம் பண்ணக்கூடிய ஆள்கள் மாத்திரம் இந்த ஊரில் விக்தமாயிருக்கிறார்கள் என்பதும் பிரத்யக்ஷமாய்த் தெரிந்தது. போதும் இதோடு இந்த சுயமரண புரத்தின் அநுபவம். நான் ஊருக்குப் போகிறேன். உம்மிடத்தில் சொல்லிக் கொள்ளாமல் போகிறது மரியாதையல்லவென்று வந்தேன். இல்லாவிட்டால் இங்கே வந்தே இருக்கமாட்டேன்" என்றார்.

ராமநாதன்:— (வியப்போடு) நீங்கள் சொல்லுவதின் மறைபொருள் எனக்கு விளங்கவில்லையே; இங்கே வந்தே இருக்கமாட்டேன் என்று ஏன் சொல்லுகிறீர்கள்? அங்கே அப்படி என்ன நடந்தது?

கர்ணாமிருதம்:— அப்படியொன்றும் நடந்துவிட வில்லை. இந்த வீட்டில் இன்னொரு பாகத்தில் குடி இருப்பவரும் ஒரு பாகவதராம். நான் பக்கத்து வீட்டு அம்மாளோடு பேசிக்கொண்டிருந்தபோது,

இவர் அங்கே வந்து சேர்ந்து குறுக்கில் விழுந்து தாறுமாருய்ப் பேசினுர். எனக்கும் இவருக்கும் பேச்சு தடித்தது; அதற்குள் அந்த அம்மாள் இவரை அனுப்பி விட்டாள். அதனுல்தான், நான் இங்கே வந்திருக்கமாட்டேன் என்றது. சரி; நான் போய்வருகிறேன்—என்று கூறியபடி விரைவாக நடந்து வெளியில் சென்று விட்டார்.

ராமநாதன் அன்றைய பகல் முழுதும் தமது அறையிலேயே இருந்தார். மாலை சுமார் ஐந்து மணிக்கு, "சாமீ, சாமீ, ஆருசாமீ வூட்டே" என்று கேட்டுக்கொண்டு ஒரு கிழவன் அவருடைய அறைக்கெதிரில் வந்து நின்றுன். அவனுடைய முதுகு கூனலாயிருந்ததாகையால், அவன் ஒரு மூங்கில் தடியை ஊன்றிக்கொண்டிருந்தான். நரைத்துப் போன தலைமயிர், தாடி, மீசைகள் முதலியவைகளும், (டிராமோலாவில் பேசிய) அவனுடைய நடுக்கமான குரலும் அவனுக்கு 90 வயதிற்குமேல் ஆயிருக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்தை உண்டாக்கின.

அவனைப் பார்த்த ராமநாதன், "யாரப்பா நீ? யாரைத் தேடுகிருய்?" என்றுர்.

கிழவன்:—எனக்குக் காது கொஞ்சுண்டு மத்திமங்க. ஓரச்சப் பேசணுங்க. இங்கிட்டுத்தானே அந்த நீலாமதி அம்மா கிறுங்க?

ராமநாதன்.:—யாரது? நீலாமதி அம்மாளா? லீலாவதி அம்மாளையா தேடுகிருய்?

கிழவன்:— ஆம்பொ. நீலாமதியோ லீலாவிதியோ அது எனக்கு அம்பிட்டு நல்லா தெரியாதுங்க! நானு பட்டிக் காட்டாந்தானே.

ராமநாதன்:—நீ என்ன ஜாதியானடா? வெளியில் இருந்து கேட்காமல், தடதடவென்று உள்ளே வந்துவிட்டாயே.

கிழவன்:—நாங்க படாச்சிமாரு சாமீ, தீண்டாப்பேரு கிண்டாப் பேரு இல்லீங்க. அஞ்சாறு வூட்டுக்கு அன்னுண்டெ கேட்டத்துக்கு இந்த வூட்டெக் காட்டினுவளே. நீங்க இல்லேண்டிறிங்களே. பின்னெ எங்கூடு சாமியாரே?

ராமநாதன்:—அந்த மாதிரி பெயருடைய அம்மாள் இந்த வீட்டில் யாருமில்லை. நீ போய் பக்கத்து வீட்டில் விசாரி—என்றுர்.

கிழவன் :—பக்கத்து ஊட்டுலெ கிருவளா அந்த அம்மா? மாடி ஊடு-டெயா சொல்றீங்க?

ராமநாதன் :—ஆமா; அந்த வீட்டில்தான் போய் விசாரி; அங்கே ஓர் அம்மாள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு ஒருவேளை சங்கதி தெரிந்திருக்கலாம். போ—என்றார்

உடனே கிழவன் லொட்டு லொட்டென்று தடியை ஊன்றி தள்ளாடித் தள்ளாடி நடந்துபோய் தாசி லீலாவதியின் வீட்டையடைந்து நடையில் நின்றபடி இரண்டொரு தரம் கனைத்துக் கொண்டு, "யம்மா, ஆரம்மா ஊட்டே? ஏம்மா, இக்கிறீங்களா?" என்று கேட்டான்.

அடுத்த நிமிஷம் லீலாவதி அங்கே தோன்றி, "யாரப்பா நீ? யாரைத் தேடுகிறாய்?" என்றாள்.

கிழவன் :—எம்மா லீலாமதி அம்மாண்ட்றவங்க நீங்கத்தானா?

லீலாவதி :— (சிரித்துக் கொண்டு) ஆமா நான்தான், சங்கதியைச் சொல்லு. யார் உன்னை இங்கே அனுப்பியது?

கிழவன் :—அவுருதான் யம்மா, அந்த அவுரு. இஞ்சே காத்தாலெ பொத மொத வந்தாரே, ஒங்கிளுக்குக் காபக மில்லியா? அவுரோடெ பேரு பாடவரோ, பாதகரோ என்னமோன்னு சொன்னாரு. அவுரு அய்பிரு. அவுரு திரியும் நாளைக்கிக் காத்தாலே இங்கிட்டு வாறேன்னு சொல்லச் சொன்னாரு.

லீலாவதி :—இதற்காகவா அவர் உன்னை அனுப்பினார்?

கிழவன் :— சொல்றத்துக் குள்ளற அவசரப்பட்டா நானு என்னு செய்யறதுங்க. ஊர்லெ களவாணிங்க ரெண்டுபேரு வந்து திரியறானுவளாம். அவுங்க அந்தமாந் தீவுலெயிருந்து தப்பிச்சு ஓடியாந்துட்டானுவளாம். அவுங்க இந்தூரு டப்பாலு கச்சேரியே கொள்ளை யிட்டுட்டாங்களாம். எந்த ஊட்டுலெ எப்ப தூந்து யாரெக் களுத்தறுப்பானுவளோண்டு பூலீசாரு பயந்து நடுங்குறானுவளாம். நீங்க கோயிலுக்குக் கீயிலுக்குப் போனா, நவைநட்டுங்களை அதியமாப் போட்டுக்கிட்டுப் போவாதீண்டு சொல்லி எச்சரிச்சுப்புட்டு வரச் சொன்னாரு. ஊட்டுலெ நீங்க தனியா இக்கிறீங்களாம்; ஒங்களெ சாக்கிர்தெயா இருக்கச் சொன்னாரு.

லீலாவதி :— (முகமாறுபாடடைந்து) ஓகோ! அப்படியா! அந்த ஐயர் இப்போது எங்கே இருக்கிறார்?

கிழவன் :—இதோ இஞ்செதான் எதுருலெ கிருரு; எதுத்த வாடெயிலே ஒரு சோத்துக்கடை இக்குதல்ல. அதுலெதான் தங்குராரு.

லீலாவதி :—நீ யாரப்பா ?

கிழவன் :—என்னெ அவுரு வேலேக்கி அமுத்திக்கிட்டாரு. எதாச்சும் துணி மணி தோய்க்க, கடை கண்ணிக்கிப் போவ, இல்லியா இப்டி அப்பிடி சொல்ற பேச்செக் கேக்க ஒரு ஆளு வோணுமாம். அதுக்காவ என்னேப் பேசி வச்சிக்கிட்டாரு.

லீலாவதி :—ஓ! அப்படியா சங்கதி! அந்தமான் தீவிலிருந்து யார் வந்தால் எனக்கு என்ன ? எனக்குக் கெடுதல் செய்ய அவர்களால் ஆகாதென்று ஐயரிடம் சொல்லு.

கிழவன் :—அப்பிடியே சொல்றேனுங்க தாயே. என்னமோ அவுரு சொல்லச் சொன்னத்தெ நானு ஒங்ககிட்ட சொன்னேனுங்க. மத்தது ஒங்க சவுட்டமுங்க; ஊர்லெ சனங்கள்ளாம் நடுங்குருக. ரெண்டு களவாணிங்களோடெ அடையாளங்களெல்லாம் அல்லாப் பூலீசாரும் கண்டுகெகிட்டாகளாம்; ஊரு முளுதும் ஜல்லடை போட்டு சலிச்சுப் பாக்கருவளாம். ஊரு திமிலேபப் படுதாம். அவிங்க ரெண்டு பேரும் இன்னேக்கி ராவுக்குள்ளற அப பிட்டுக்கடுவானுவளாம். ஒடனே அவிங்களேத் திரியும் அககரைச் சீமைக்கே அனுப்பிடுவாகளாம்.

லீலாவதி :—இதைக்கூட அந்த ஐயர்தான் சொன்னுரோ ?

கிழவன் :—அவுரு சொல்லலீங்க. ஊர்லே பேசிக்கறத்தெ நானு சொல்றேனுங்க. இன்னெரு சேதி கூடச் சொல்லிக்கிருவ.

லீலாவதி :—என்ன சேதி ?

கிழவன் :—ஆரோ ஐபிராம். அவுரு அஞ்சாறு சில்லாவுக்கு பூலீசு எசமானும். அவுருக்கு அவசரத் தந்தி வந்திச்சாம். ஓடனே களம்பி அந்தமான் தீவுக்குக் கப்பலேறிப் போயித்தாராம்.

லீலாவதி :—அவர் பெரிய பிரகஸ்பதியா யிருக்கிருரே; அந்த ஊரில இருந்து தப்பிவந்தவர்கள் இந்த ஊருக்கு வந்து கொள்ளே நடத்துகிருர்கள் என்கிருய்! அப்படி இருக்க, அந்த ஐயர் கப்பலேறி அந்தமானுக்கு எதற்காகப் போகிருர் ? அவர்களே இங்கேயல்லவா தேட வேண்டும்.

கிழவன் :—அந்த வெவரமெல்லாம் நம்பிளுக்கு எப்பிடித் தெரியுங்க. ஆனு ஊருலெ சனங்க பலமாதிரி பேசிக்கிறுவ; கள வாணிங்க இஞ்செ வந்திருக்க மாட்டானுவ, அங்கெயே எங்கிட் டாச்சு மறைஞ்சிக்கிட் டிருப்பானுவ, இல்லாங் காட்டியும் தண் ணிமேல கிண்ணிலே உளுந்து மாண்டு போயிருப்பானுவ இன்னும் பல மாதிரியாப் பேசிக்கிறுக. நெசமான சேதி ஆருக்குத் தெரியு துங்க. அல்லாம் ஊகந்தானுங்களே.

லீலாவதி:—அந்தமான் தீவிலிருந்து வந்தவர்கள் யார் என்பது உனக்குத் தெரியுமா?

கிழவன் :— அது எனக்கெப்பிடித் தெரியுங்க யம்மா; நீங்க நல்ல கேவி கேக்கிறீங்க!

லீலாவதி :—உங்கள் ஐயர் நாளைக்குக் காலையில் வரும்போது இந்த விஷயத்தைப் பற்றி விவரமாய் விசாரித்துக்கொண்டு வரச் சொன்னேன் என்று சொல்லு.

கிழவன் :—ஓ, அப்பிடியே சொல்றேனுங்க.

லீலாவதி :—சரி; நீ போ—என்றாள்.

உடனே கிழவன் வெளியில் போய்விட்டான்.

அன்றைய தினம் மாலையில் லீலாவதி தனது வழக்கப்படி சாயரக்ஷை பூஜைக்கு அம்மன் கோவிலுக்குச் சென்றாள்.

அம்மனுக்கு சாயங்கால வேளையில் அபிஷேகம், தீபாராதனை, கற்பூர ஆரத்தி முதலியவை நடந்தபின் சம்பாச்சாதம் நிவேதனம் செய்யப்படுவது வழக்கம். அந்தமாதிரி, கற்பூர ஆரத்தி காட்டப் பட்ட காலத்தில் ஏராளமான ஜனங்கள் நின்று அம்மன் தரிசனம் செய்து, ஆரத்தியைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு, விபூ திப் பிரஸாதம் பெற்றுக்கொண்டு போவது வழக்கம். அதேபோல, நாம் குறித்த தினத்திலும் கற்பூர ஆரத்தி காட்டப்பட்ட காலத்தில் ஜனங்கள் கும்பலாய் நின்றனர். பூஜை முடிந்தவுடன் தீபக்குடத்தை எடுத்துக்கொண்டு தாசி பிராகாரத்தை சுற்றி வரவேண்டுமாதலால் நம் லீலாவதியும் அங்கு நின்றுகொண் டிருந்தாள். அவள் தற்செய லாய் ஜனங்களை கவனித்ததில், அடுத்த வீட்டு கீதாமிருத பாக வதர் பிராம்மணக் கும்பலில் நின்றுகொண்டிருந்தது அவளுடைய திருஷ்டியில் பட்டது. அவர் கீழ்ப்பார்வையாகத் தன்னையே கவ

ளித்துக் கொண்டிருந்ததாகவும் அவளுடைய மனதில் ஒருவித எண்ணம் உதித்தது. ஆயினும் அவள் அதை சட்டைசெய்யாமல் தனது கடமைகளைச் செய்து தீபக்கூடப் பிரதக்ஷிணத்தை முடித்து விட்டு அப்புறம் இப்புறம் திரும்பிப் பார்த்தாள். தீபாராதனை தரிசித்த ஜனங்கள் திரும்பிச் சென்றுகொண் டிருந்தனர். அப்போது தயங்கித் தயங்கி நின்றுகொண்டிருந்த இன்னொரு மனிதர் அவளிடம் நெருங்கி வந்தார். அவர் பள பளப்பான ஒரு ஜரிகை வஸ்திரத்தை இரண்டாய் மடித்து தட்டாடையாய் இடுப்பில் கட்டிக் கொண்டும் புதுச்சேரிப் பட்டு உருமாலையால் தமது உடம்பை மூடிக்கொண்டும் இருந்தார். அவருடைய குடுமி முடிச்சு ஒரு பெரிய தேங்காயளவு காணப்பட்டது. முகத்தில் ஊசி மிளகாய் போல் இருந்த மீசைகள் காணப்பட்டன. நெற்றியில் இரண்டணா வட்டத்தில் சந்தனப்பொட்டு காணப்பட்டது. அவர் தவில அடிப்பவரோ, அல்லது, ஒரு பெரிய மிராசுதாருடைய செல்லக் குமாரரோ என்பதில் இரண்டிலொன்று நிச்சயிக்கப்படக் கூடாததாயிருந்தது.

லீலாவதியின் திருஷ்டி அவர்மேலும் சென்று, அந்த மனிதர் கபடப் பார்வையாகத் தன்னைப் பார்த்ததிலிருந்து அவர் தன்னிடம் மோகம் கொண்டு, பேசுவதற்கு கிலேச மடைந்து தவிக்கிறாரோ என்ற சந்தேகத்தை அவள் கொள்ளும்படி செய்தது. அந்த யௌவனப் புருஷர் மேலே பார்ப்பதும், கீழே பார்ப்பதும், கனைப்பதும், இருமுவதுமாய் சிறிதுநேரம் பிரஸவ வேதனைப்பட்டு மெல்ல மெல்ல அவளிடம் நெருங்கி, "என்ன, உன்னைத் தானே, அர்த்த ஜாம பூஜை நடப்பதற்கு இன்னம் எவ்வளவு நேரம் பிடிக்கும?" என்று தரையைப் பார்த்தபடி வினவினர்.

லீலாவதி :—9 மணி ஆகும்.

மற்றவர் :—இதற்குமுன் உன்னை நான் எங்கேயோ பார்த்திருப்பதாக ஞாபகம் உண்டாகிறது. நீ எப்போதாவது திருச்சினப் பள்ளிக்கு வந்திருக்கிறாயோ?

லீலாவதி :—(அவரை ஏற இறங்கப் பார்த்து) நானும் உங்களை எங்கேயோ பார்த்தமாதிரிதான் தெரிகிறது. உங்களுடைய ஊர் திருச்சினப் பள்ளியா?

மற்றவர் :—ஆம். என்னுடைய ஊர் அதுதான்.

லீலாவதி:—அங்கே எந்தத் தெருவு?

மற்றவர்:—அந்த ஊரில் கோவிந்தசாமி பிள்ளை என்று ஒரு சங்கீத வித்வான் இருந்து இறந்துபோய்விட்டார். அவர் தாசிப் பெண்களுக்கு சிக்ஷை சொல்லிக் கொடுப்பார். அவர் இருந்த தெருவிற்குப் பின்புறத் தெருவில் நான் இருப்பவன்.

லீலாவதி:— ஓகோ! அப்படியானால் நீங்கள் என்னை அவருடைய வீட்டில் பார்த்திருப்பீர்கள். எங்கள் குருவுக்கும் உங்களுக்கும் பழக்க முண்டா?

மற்றவர்:—இல்லாமல் என்ன? கோவிந்தசாமி பிள்ளையின் குரு உறையூரில் இருக்கும் ஒரு பாகவதர். அவரிடம் நானும் கொஞ்ச காலம் சங்கீதம் கற்றுக்கொண்டேன்.

லீலாவதி:—ஓகோ! அப்படியா! அந்த பாகவதருடைய பெயர் என்ன?

மற்றவர்:—கர்ணாமிருத பாகவதர் என்று சொல்லுவார்கள்.

லீலாவதி:—அவர் இந்த ஊருக்கு வந்திருக்கிறாரே!

மற்றவர்:—(வியப்போடு) எப்போது வந்தார்?

லீலாவதி:—நேற்று வந்தாராம்; இன்று காலையில் என்னுடைய ஜாகைக்குக்கூட வந்திருந்தார்.

மற்றவர்:—அவர் இப்போதும் உன் வீட்டில்தான் இருக்கிறாரோ?

லீலாவதி:—இல்லை, நாளைக்குக் காலையில் வருவார்.

மற்றவர்:— ஓகோ! அப்படியா! அவரை நான் அவசியம் பார்த்தே ஆகவேண்டும். அவர் ஜாகை வைத்துக்கொண் டிருக்கும் இடம் உனக்குத் தெரியுமோ?

லீலாவதி:—எங்கள் தெருவுக் கோடியில் ஐயர் ஓட்டல் ஒன்று இருக்கிறது. அங்கே இருக்கிறாராம்.

மற்றவர்:—உங்கள் தெருவு எது?

லீலாவதி:—பிள்ளையார் கோவில் தெருவு.

மற்றவர்:—சரி; சந்தோஷம். நான் ஏதோ பழைய நினைவை வைத்துக்கொண்டு உன்னோடு பேசியதும் ஒருவிதத்தில் நன்மையாகவே முடிந்தது. நான் இப்போதே போய் அவரைப் பார்க்க

வேண்டும். பல சமயங்களில் நான் அவரைத் தேடிக்கொண்டு உறையூருக்குப் போனேன். அவர் வீட்டில் இருப்பதே இல்லை. நல்ல வேளையாக அவர் இங்கு அகப்பட்டார்.

லீலாவதி :—அவ்வளவு ஆவலாக அவரை எதற்காகத் தேடு கிறீர்கள் ?

மற்றவர் :—சில நவீன இந்துஸ்தான், பார்ஸி ராகங்களின் ஆரோகண அவரோகண ஸ்வரங்களைப்பற்றி சில சந்தேகங்களை நான் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்காகத்தான் அவரைப் பார்க்க விரும்புகிறேன்—என்றார்.

"அவருக்கே சர்வ சாதாரண ராகங்களைப்பற்றி சந்தேக மாயிற்றே. அவர் அபூர்வ ராகங்களைப்பற்றி உம்முடைய சந்தேகங் களை எப்படித் தீர்த்து வைக்கப் போகிறார்" என்று யாரோ சமீபத் தில் கூறிய குரலோசை கேட்டது. லீலாவதியும், இன்னொருவ ரும் திடுக்கிட்டு வியப்போடு திரும்பிப் பார்த்தனர். அப்போது, சிரித்த முகத்தோடு பக்கத்து வீட்டு கீதாமிருத பாகவதர் அவர்க ளுக் கருகில் நின்றது தெரிந்தது.

உடனே கர்ணாமிருத பாகவதரின் சிஷ்யரான யௌவனப் புருஷர் கோபத்தோடு கீதாமிருத பாகவதரைப் பார்த்து உருட்டி விழித்து, "யாரையா நீர் ? என்ன வாய்த்துடுக்கு இது ?" என்றார்.

கீதாமிருதம் :—நானும் ஒரு பாகவதர்தான் ; நான இந்த லீலா வதியம்மாளுடைய வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் இருப்பவன் தான். இன்று காலையில் இவர்களுடைய வீட்டில் எனக்கும் அவ ருக்கும் வாக்குவாதம் நடந்தது. அப்போது என்ன நடந்ததென்று இந்த அம்மாளிடம் கேட்டால், உமக்கு விஷயம் தெரியும்.

கர்ணாமிருத பாகவதரின் சிஷ்யர் :—(கோபத்தோடு) இன்று காலையில் எதைப்பற்றி வாக்குவாதம் நடந்தது ?

கீதாமிருதம் :—ஸ்ரீராகத்திற்கும், மத்தியமாவதிக்கும் என்ன வித்தியாசம் என்று நான் கேட்டேன். அதற்குப் பதில் சொல்ல அவரால் முடியவில்லை. அவர் அவமானப்பட்டு இந்த ஊரை விட்டே போய்விட்டார். அவர் எந்த ஓட்டலில் இருக்கப் போகி றார் ? அவராவது நாளைக்கு இந்த அம்மாளுடைய வீட்டிற்கு வரு கிறதாவது! அவர் வரப் போகிறதுமில்லை ; அவர் வந்தாலும் உம் முடைய சந்தேகம் தீரப் போகிறதுமில்லை.

சிஷ்யர் :—நீரும் ஒரு பாகவதரோ ? அப்படியானால், நீர் அவரைப்பற்றிச் சொல்வதெல்லாம் அவசியம் உண்மையாகவே இருக்கும். அதை நான் நம்பியேதான் தீரவேண்டும்.

கீதாமிருதம் :—நீர் நம்பத்தான் வேண்டுமென்று நான் கட்டாயப்படுத்தவில்லையே! நீர் அவருக்கு சிஷ்யரென்பது தெரிகிறது. ஆகையால், அவருக்கு விரோதமான விஷயம் எதையும் நம்பக் கூடாது என்னும் சங்கற்பம் உமக்கு அவசியம் இருந்தே தீரும். அதுதான் சிஷ்யனுடைய லட்சணம். ஆனாலும், இன்று காலையில் எனக்கும் அவருக்கும் நடந்த வாக்குவாதத்தைப்பற்றிய விவரமும் இந்த லீலாவதியம்மாளுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால், நீர் எனக்கெதிரில் கேட்காவிட்டாலும், நான் போன பிறகாவது கேட்டுத் தெரிந்துகொள்ளும்.

சிஷ்யன் :—நான் எதைப்பற்றியும் யாரிடத்திலும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. நீர் பேசும் தோரணையிலிருந்தே நீர் என் குருவை வேண்டுமென்றே இழிவு படுத்துகிறீர் என்பது தெரிகிறது. உம்முடைய பேச்சு ஒரு செல்லாத காசின் மதிப்பிற்கும் உரியதாயில்லை. சங்கீதத்தில் அரிச்சுவடி கற்றவனுக்கும், ஸ்ரீராகத்திற்கும், மத்தியமாவதிக்கும் வித்தியாசம் தெரியும். என் குருவிற்கு அது தெரியவில்லையென்று நீர் சொல்வது கேவலம் பைத்தியக்காரனுடைய பேச்சேயன்றி வேறல்ல. உம்மை நான் இலேசில் விட்டு விடுவேனென்று நினைக்கவேண்டாம். இருக்கட்டும். என் கை வரிசையைக் காட்டுகிறேன்.

கீதாமிருதம் :—(லீலாவதியை நோக்கி), அம்மா, நீ சாதாரணமானவள் அல்ல; நல்ல ஆழ்ந்த புத்தியுடையவள். நீ ஒரு விஷயத்தை நன்றாய்க் கவனிக்க வேண்டும். நேற்றையதினம் இவருடைய குரு வந்தார்; வந்தவர் அடுத்த வீட்டுத் திண்ணையில் படுத்திருந்து இன்று காலையில் உன்னிடம் வந்தார்; சாமர்த்தியமாய்ப் பேசி கோவிந்தசாமி பிள்ளையைப்பற்றி பிரஸ்தாபித்தார். சிஷ்யர் மாலையில் கோவிலுக்கு வந்து, இங்கே நீ வருவாயென்று ஜோசியத்தினால் தெரிந்துகொண்டு இந்த ஜனக்கும்பலில் உன்னைப் பொறுக்கி சாமர்த்தியமாய் உன்னிடம் பேச்சுக் கொடுத்து, தம்முடைய தெருவின் பெயரைச் சொல்வதில் கோவிந்தசாமி பிள்ளையைக் கொண்டு வந்து நுழைக்கிறார். இதிலிருந்து உனக்கு எந்த அநுமானமும் ஏற்படவில்லையா ?

லீலாவதி:—(வியப்படைந்து யோசனையில் ஆழ்ந்தவளாய்) என்ன அநுமானம் ஏற்பட வேண்டுமென்கிறீர்கள்?

கீதாமிருதம்:—அதை நானே எடுத்து விளக்கவேண்டு மென்கிறாயா? அதையும் சொல்லிவிடு. நானே விளக்குகிறேன்—என்றார்.

அதுவரையில் சாந்தமாக நின்ற சிஷ்யர் உடனே ஒருவித ஆவேசத்தைத் தோற்றுவித்தவராய்; "சரி; இந்த மனிதர் மகா துர்ப்புத்தியுடைய மனிதரா யிருக்கிறார். நான் உடனே போய் என் குருவைக் கண்டு கையோடு அழைத்து வருகிறேன். அதற்குப் பிறகு இவருக்குத் தக்க மரியாதை நடத்தலாம்—என்று கூறியபடி சரேலென்று அவ்விடத்தை விட்டு வெளியில் போய்விட்டார்.

உடனே கீதாமிருத பாகவதர் லீலாவதியை நோக்கி, "லீலாவதியம்மா. இவர்கள் இருவரும் ஒருவரோடொருவர் சம்பந்தப் படாமல் வந்தவர்கள்போலக் காட்டிக்கொண்டு ஏதோ கபடமான எண்ணத்தோடு உன்னிடம் வந்து நெருங்கிப் பழக முயற்சிக்கிறார்கள். நீ ஜாக்கிரதையாக நடந்து கொள்" என்று கூறிவிட்டு தாமும் அவ்விடத்தை விட்டுப் போய்விட்டார்.

லீலாவதி மனக்கலவரத்தைக் காட்டிய முகத் தோற்றத்தோடு அங்கு மேலும் கால் நாழிகை காலம் நின்றிருந்தபின், கோவிலில் தான் செய்யவேண்டிய இதர கடமைகளையும் நிறைவேற்றிக்கொண்டிருந்தாள். அப்போது அவளுடைய மனது பலவித எண்ணங்களால் சலனமடைந்துகொண்டே இருந்தது. கீதாமிருத பாகவதர் குறிப்பிட்டதுபோல கர்ணாமிருத பாகவதரும், அவருடைய சிஷ்யரும் தன்னை நாடி வந்ததில், ஏதாவது கபடக்கருத்து அடங்கி இருக்குமா, அல்லது, அவர்கள் நாணயமானவர்களா என்னும் சம்சயமே முக்கியமாய் அவளுடைய மனதை உலப்பியபடி இருந்தது. அவள் தனது வழக்கத்திற்கு மாறாய் அன்று கோவிலில் எட்டு மணி வரையில் இருந்து பார்த்துவிட்டு அதன் பிறகு வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

அன்றைய இராப்பொழுது எவ்வித சம்பவமுமின்றிக் கழிந்தது. மறுநாளைய காலையில், அவள் தனது காலை வேளை சிற்றுண்டி வேலையை முடித்துவிட்டு ஊஞ்சற் பலகையில் உட்கார்ந்துகொண்ட காலத்தில், கர்ணாமிருத பாகவதருடைய ஆளான கூனல் கிழவன்

தனது ஊன்றுகோலை லொட்டு லொட்டென்று தரையில் வைத்துக் கொண்டு வந்து, "அம்மா, கிறிங்களா?" என்றான்.

லீலாவதி:—வா, இன்று காலையில் ஐயர் வருவாரென்று சொன்னாயே! ஏன் உன்னை அனுப்பி விட்டார்?

கிழவன்:—இப்ப வர முடியலியாம்; முடிஞ்சா, பொளுது சாய அவசியம் வர்றேன்னாரு; அத்தெ ஒங்கிட்ட சொல்லிப்புட்டுப் போவலாமுன்னுதான் வந்தேன் தாயே.

லீலாவதி:—இன்னொரு சங்கதியைப்பற்றி விவரமாக விசாரித்துக்கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனாயே. நிச்சயமான சங்கதி ஏதாவது தெரிந்ததா?

கிழவன்:— அதுக்கின்னு வெசாரிச்சா, கொஞ்சத்துக்குக் கொஞ்சம் தெரியாமலா போவுது. பூலீஸு சஞ்சீவி ஐயிரு கப்பலேறி அந்தமான் தீவுக்குப் போயித்தாராம். தப்பி ஓடியாந்த களவாணிங்க ரெண்டு பேரும் இந்தூருலெதான் எங்கிட்டோ ஒளிஞ்சிக்கிட்டிருக்கானுவளாம். அவுரு கப்பலேறிப் போனத்துக்குப் பொறவாலெதான் இவிங்க இஞ்சே இருக்கறது இந்தூருப் பூலீசாருங்களுக்குத் தெரிஞ்சிச்சாம். இது ஒரு சேதி. இன்னொரு முக்கியமான சேதி என்னான்னா, எங்க எசமான் கிறாரே அந்த ஓட்டல்லெ பூலீசுக்கார ஐயிரு ஒருத்தரும் சாப்பிட்டு ராவுலெ தங்காரு. அவுரும், ஓட்டலுக்கார ஐயிரும் ரகஸியமா ஒரு சேதியைப் பத்திப் பேசிக்கிட்டாக. அத்தெ நானு கேட்டுக்கிட்டிருந்தேன். அது ஒனக்கு அவசியமாத் தெரிபவேண்டிய சேதி. அவுங்க பேசிக்கினது என்னான்னா, "இந்த ஊருப் புள்ளாரு கோயிலுத் தெருவுலெ லீலாவதியின்னு ஒரு தேவிடியா இக்குறா. அவுளுக்கும் அந்தமாந் தீவுலேருந்து தப்பிச்சு ஓடியாந்த ரெண்டு களவாணிங்களுக்கும் என்னமோ உக்குமத்து இருக்குது. அவுனுவ மொத மொத அந்தப் பொம்புளெ வூட்டுக்குத்தான் வந்தானுவ. அவுனுவளெ அவ எங்கிட்டோ மறைச்சு வச்சிருக்கா. பூலீசாரு அந்த வூட்டுமேலேயே கண்ணாயிருக்காங்க" இன்னு பூலீசு ஐயிரு ஓட்டலுக்கார ஐயிருக்கிட்டச் சொன்னாரு. "எந்த லீலாவதி?" இன்னு ஓட்டலுக்கார ஐயிரு கேட்டாரு. "அந்தத் தெருவுலெ அவ வூடுதான் மாடி வூடு" இன்னாரு மத்தவரு. அத்தெயெல்லாம் கேட்ட மொத எனக்குக் கொலை நடுக்கம் உண்டாயிப் போச்சு. ஒடனே நானு

எங்க எசமாங்கிட்ட ஓடி அல்லாத்தியும் சொன்னேன். இதோடெ நெசம் பொய்யி தெரியணும்னு, அதுக்காவ எசமான் என்னே இப்ப இஞ்சே அனுப்பிச்சாரு.

லீலாவதி :—அடேடே! அப்படியெல்லாம் பேசிக் கொண்டார்களா! இந்த ஊர்ப் போலீஸார் சுத்த ஆத்திர புத்திக்காரர்கள். திருடர்கள் தங்களுக்கு வேண்டிய ஒரு பெண் பிள்ளை எங்கே இருக்கிறாள் என்று யாரோ ஒருவனிடம் கேட்டார்கள். அவன் பகைமையினாலோ, குறும்புக்காகவோ, அல்லது, தப்பான அபிப்பிராயத்தினாலோ அவர்களை என் வீட்டிற்கு அனுப்பினான். அவர்கள் இங்கே வந்து விசாரித்தார்கள்; தாங்கள் வந்தது தப்பான இடத்திற்கு என்று அவர்களே தெரிந்துகொண்டு உடனே போய்விட்டார்கள். அப்படி வந்தவர்கள் இன்னார் என்பது எனக்குத் தெரியாது. போலீஸார் என்மேல் சந்தேகப்படுகிறார்களோ! அது நல்ல காரியந்தான். மடியில் கனமிருந்தாலல்லவா, வழியில் பயம். அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்துகொண்டு போகட்டும். யாரால் என்னை என்ன செய்ய முடியும்.

கிழவன் :—ஓகோ! அப்பிடியா சேதி! மத்தவிங்க தவறுதலா ஒருத்தரை நம்பூட்டுக்கு அனுப்பிச்சா, நாம்ப என்ன பண்றது. அதுக்காவ நம்பளெச் சொல்லிப்புட்றதா! இது நல்ல நாயங்கறேன் இது. நீ சொல்றுப்புலெ நம்புளுக்கு என்ன பயம். அந்தக் களவாணிங்க நம்பூட்டுலெ இருந்தாக் காட்டட்டும். அவுனுவளெப் புடிச்சுக்கட்டும். நம்பளேயும் தெண்டிக்கட்டும். அவுனுவ எங்கனெ யாச்சும் ஒளிஞ்சிக்கிட்டிருந்தா, அதுக்கெல்லாம் நாம்பளா பொணே. அந்தமானுலெயிந்து தப்பி வந்தானுவளே அப்பகூட நாம்ப சொல்லித்தான் வந்தானுவ இன்னுகூட சொல்லிப்புடலாம். என்னத்தெத்தான் சொல்லப்படாது—சரி, அப்பிடியானு நானு போயி, எசமாங்கிட்ட என்னன்னு சொல்றது?

லீலாவதி :—போலீஸ்காரர் சொன்னது முழுதும் பொய்யென்று சொல்லு—என்றாள்.

அவ்வாறு அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு பிராம்மண ஸ்திரீ அங்கே வந்து சேர்ந்தாள். அவளுடைய வயது 25-க்கு மேற்பட்டும், 30-க்கு உள்பட்டும் இருக்க

லாம். அவள் லீலாவதியை நோக்கி, "நீதான் லீலாவதியா?" என்றாள்.

லீலாவதி :—(மிகுந்த ஆச்சரியத்தோடு அந்த அம்மாளை உற்று நோக்கி) ஆம்; என் பெயர் அதுதான். நீங்கள் யார் என்பது தெரியவில்லையே!

வந்த அம்மாள் :—உறையூரிலிருந்து ஒரு பாகவதர் நேற்று இங்கே வரவில்லையா. அவருடைய தங்கை நான். நானும் என் புருஷரும் இந்த ஊருக்கு ஒரு காரியமாய் வந்து இந்த ஊர் சத்திரத்தில் தங்கி இருக்கிறோம். என் தமயனார் எங்களை சந்தித்தார். அவரும் இப்போது எங்களோடுதான் சத்திரத்தில் இருக்கிறார். நான் பக்கத்துத் தெருவில் உள்ள எங்கள் ஊர் மனிதர்களைப் பார்த்துவிட்டு வரலாமென்று புறப்பட்டேன். அப்போது என் தமயனார் உன்னிடம் ஒரு தகவல் சொல்லிவிட்டுப் போகச் சொன்னார்.

லீலாவதி :—என்ன தகவலோ?

வந்த அம்மாள் :—அவர் நேற்று காலையில் இங்கே வந்து விட்டுப் போனவர் மறுபடி வரவில்லையாம். அதைப்பற்றி நீ வித்தியாசமாக நினைத்துக்கொள்ள வேண்டாமென்றும், இன்று சாயங்காலம் அவசியம் வருவதாகவும் சொல்லிவிட்டுப் போகச் சொன்னார்.

லீலாவதி :—அவர் உங்களோடு சத்திரத்திலா இருக்கிறார்! அப்படியானால் இந்தக் கிழவன் யார்? இவன் அவருடைய வேலைக்காரனும்! இவனும் அவரும் ஓட்டலில் தங்குகிறதாகவும், அவர் இப்போதுதான் இவனை என்னிடம் அனுப்பியதாகவும் என்னிடம் சொன்னானே. இதே மாதிரி நேற்று சாயங்காலமும் இவன் வந்து என்னிடம் சில சங்கதிகளைச் சொல்லிவிட்டுப் போனான்.

வந்த அம்மாள் :—(வியப்போடு கிழவனைப் பார்த்து) யாரப்பா நீ? என் தமயனாருடைய வேலைக்காரனா நீ? உன்னை நான் இதுவரையில் பார்க்கவே இல்லையே! அவர் நேற்று முதலே சத்திரத்தில் இருக்கிறாரே!

கிழவன் :—நீங்க ஆரைப்பத்திச் சொல்றீங்களோ! ரெண்டு பேரும் வேறே ஐபரா இருக்கலாமில்ல.

லீலாவதி :—(வந்த அம்மாளைப் பார்த்து) உங்கள் தமயனாருடைய பெயரென்ன?

வந்த அம்மாள் :—கர்ணாமிருத பாகவதர்.

லீலாவதி :—(கிழவனைப் பார்த்து) இப்போது என்ன சொல்லு கிறாய்? அதே பெயருடைய ஐயரைப்பற்றித்தானே நீயும் நேற்று முதல் என்னிடம் பேசிக்கொண்டிருக்கிறாய்.

வந்த அம்மாள் :—இவன் ஒருவேளை திருட வந்தவனா யிருக் கலாம்; ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லிக்கொண்டு வந்திருக் கிறான். உடனே போலீஸாரைக் கூப்பிட்டு இவனை அவர்களிடம் ஒப்புவித்து விடுங்கள். அவர்கள் குட்டைத் தடியால் அடிக்கிற அடியில் வளைந்து போயிருக்கும் முதுகெல்லாம் ஒரே நிமிஷத்தில் நிமிர்ந்து போகும்.

கிழவன் :—அப்பிடியெல்லாம் எங்கிட்ட வீறாப்புப் பேச வாணாம்மா. நானு படாச்சி சாதியானுங்க. இப்ப நானு சாக்கிரி வேலே செயறேன்னு நெனைச்சிக்கிடாதீங்க. எங்க பெரியவங்க சோள ராசாவுங்களோடெ படைங்களுக்கு எசமானாயிந்து சண்டை நடத் தினவங்க அம்மா. பூலீசுக்காரா இந்தா மாத்தரம் அக்கிருமமா என்னெ நடத்தினா, நானு சாவப்போற களவனாயிந்தாலும், குத் திக் கொன்னு போட்டுடுவேன்! நானு அந்த ஐயரோடெ வேலே யாளுங்கறத்தை ருசுப்படுத்த எத்தினி சாக்கி வோணாலும் கொண் டாறேன். இந்த அம்மா அவுரோடே தங்கச்சிங்கறத்துக்கு சாக்கி வுடட்டும் பாக்கறேன்.

லீலாவதி :—உன்னுடைய சாட்சிகளில் யாராவது ஒருவரைக் கூப்பிடேன்.

கிழவன் :—இதா பக்கத்து வூட்டெ இன்னொரு பாகவதரு கீறாரு. அவுரு பேரு கீத்தாமருதை பாகவதராம். நானும் எங்க எசமானரும் காத்தாலெ கடைத்தெருவுலெ நிண்டத்தெப் பாத் தாரு; நானு யாருண்டு எங்க ஐயருக்கிட்டக் கேட்டுத் தெரிஞ்சிக் கிட்டாரு. அவுரைக் கேட்டா நெசம் புரிஞ்சு போவும்.

லீலாவதி :—பொய் சொல்வதைப் பொருந்தச் சொல்லப்பா. இந்த இரண்டு பாகவதர்களுக்கும் சண்டையல்லவா. இவர் உங்கள் ஐயரோடு பேசி இருக்க மாட்டாரே! நீ சொல்வது நம்பிக்கைப்பட வில்லையே.

கிழவன் :—நீங்க இப்பிடியெல்லாம் பேசறது நல்லதில்லீங்க. ரெண்டு பேருக்கும் பகை யிந்தா, நடுப்பாதையிலே கண்டா ஒப்புக்

குப் பேசறதில்லியா! நானு இப்பவே போயி அவுரை அளெச்சா றேன். அவருக்கிட்டக் கேட்டுத்தான் பாருங்களேன்.

லீலாவதி:— சரி; அதையும் பார்த்துவிடுவோம். போய் அழைத்து வா; அவரிடம் போகாமல் அப்படியே கம்பி நீட்டி விடாதே.

கிழவன்:—அந்த மாதிரியெல்லாம் சொல்லாதே யம்மா; நானு தாள மாட்டேன். இதோ வர்றேன் பாரு பாக்கடிக்கற நேரத்துலெ—என்று கூறியபடி அவ்விடத்தை விட்டு வீராவேசத் தோடு வெளியில் பாய்ந்து சென்றான்.

உள்ளே இருந்த இரண்டு ஸ்திரீகளும் மௌனமாகவே இருந்தனர். சுமார் கால்மணி காலம் கழிந்தது. கனைத்துக் குரல் கொடுத்துக் கொண்டு கிதாமிருத பாகவதர் அங்கே வந்து சேர்ந் தார். வந்தவர் லீலாவதியைப் பார்த்து, "ஏன் அம்மா கூப்பிட் டாய்?" என்றார்.

லீலாவதி:—அவன் எங்கே?

பாகவதர்:—எவன் எங்கே?

லீலாவதி:—அந்தக் கூனல் கிழவன்?

பாகவதர்:—(வியப்போடு) எந்தக் கூனல் கிழவனைப்பற்றிக் கேட்கிறீர்கள் என்பது தெரியவில்லையே!

லீலாவதி:— கர்ணாமிருத பாகவதருடைய வேலையாளாகிய கூனல் கிழவனைப்பற்றிக் கேட்கிறேன்.

பாகவதர்:—என்னிடம் கூனல் கிழவன் யாரும் வரவில்லையே. கொஞ்ச நேரத்திற்குமுன் என்னிடம் வந்தவன் நன்றாக நிமிர்ந்து விரைப்பாக நின்றானே. அவன் கூனலாயில்லையே?

லீலாவதி:—(வியப்போடு) அவன் உங்களிடம் என்ன சொன் னான்?

பாகவதர்:—நீங்கள் தனியா யிருப்பதால் ரகஸியங்கள் பேச இது சரியான சந்தர்ப்பம் என்றும், அதற்காக உடனே புறப்பட்டு வரவேண்டுமென்றும் நீங்கள் சொன்னீர்கள் என்றான்.

லீலாவதி:—(திடுக்கிட்டு) அடெ போக்கிரி நாயே. ஒரு நிமி ஷத்தில் அவன் என்னென்ன பித்தலாட்டமெல்லாம் பண்ணி

இருக்கிறான்! அவன் இப்போது உங்கள் வீட்டில் இருந்தால், கையோடு பிடித்துக் கொண்டு வாருங்களேன்.

பாகவதர்:—சங்கதியை அவன் சொன்னவுடனே, தன்னை நீங்கள் எங்கேயோ அவசரமாய் ஓடி ஏதோ ஒரு சாமான் வாங்கிவரச் சொன்னதாகச் சொல்லிக் கொண்டே பறந்து போய்விட்டான். அவன் சும்மாவா போனான்? போன போது இன்னொரு சேதியையும் சொல்லிக்கொண்டே போனான். அந்தமான் தீவிலிருந்து வந்திருக்கும் இரண்டு கைதிகளை லீலாவதியம்மாள் எங்கேயோ மறைத்து வைத்திருக்கிறாள், மூன்று பேரும் சீக்கிரம் ஜெயிலுக்குப் போய் விடுவார்கள், ஆகையால் அதற்குள் அம்மாளை சந்தோஷப் படுத்தி அகப்படுவதைத் தட்டிக்கொள் என்று அவன் சொன்னான். அதைக் கேட்டவுடன் எனக்கு ஆச்சரியம் அபாரமாய்ப் பெருகி விட்டது. அதனால் உடனே புறப்பட்டு ஓடி வந்தேன்.

லீலாவதி:—(கடுமையான கோபத்தோடு) அப்படியா சொன்னான் அந்த நாய்! அப்படியே பிடித்து இங்கே இழுத்துக்கொண்டு வந்திருக்கக் கூடாதா?

பாகவதர்:—இந்தத் தடவை ஏமாறிப் போனேன். இன்னொரு தடவை அவசியம் அப்படியே செய்கிறேன். சரி; இவ்வளவு தானே விஷயம்? நான் போகிறேன். நீ யாரோ விருந்தாளியுடன் பேசிக்கொண் டிருக்கிறாய். சில தினங்களாய் உன்பாடு யோகந் தான். விருந்தாளிமேல் விருந்தாளியாய் வந்துகொண் டிருக்கிறார்கள்.

லீலாவதி:—வரட்டும். எல்லாம் உங்களைப் போன்ற பெரியவர்களுடைய ஆசீர்வாதந்தான். உங்களுக்கு மனக்குறைபா யிருந்தால், என்னிடம் வரும் விருந்தாளிகளை இனி உங்களுடைய வீட்டிற்கும் அனுப்பி வைக்கிறேன்.

பாகவதர்:—எனக்கு வேண்டா மம்மா விருந்தாளிகள். நீ பணக்காரி, எவ்வளவு பளுவானாலும் சுமப்பாய்; நான் ஏழை; நானும் உன்னைப்போன்றவர்களிடம் விருந்தாளியாய் வரக்கூடிய நிலைமையில்தான் இருக்கிறேன். அது போகட்டும். நேற்று சாயங்காலம் கோவிலில் நான் உனக்குச் சொன்ன ஜோசியம் எப்படிப் பலித்தது பார்த்தா யல்லவா?

லீலாவதி:—என்ன ஜோசியம் சொன்னீர்கள்?

கீதாமிருதம் :—கர்ணாமிருத பாகவதருடைய சிஷ்யரென்று சொல்லிக்கொண்டு வந்தவர் தன் குருவை அழைத்துக் கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனாரே. அவர் திரும்பிவரவே இல்லையல்லவா!

லீலாவதி :—உலகமே வேஷ மயமாய்த்தா னிருக்கிறது. நாம் மெய் பொய் கண்டுபிடிப்பது கூடாததா யிருக்கிறது; இன்று சாயங் காலம் கர்ணாமிருத பாகவதரே இங்கு வரப்போகிறாராம்; அவரிடம் கேட்டால் சிஷனுடைய உண்மை விளங்கிப்போகிறது.

கீதாமிருதம் :—ஓகோ, அவர் இனி வரப் போகிறாரோ, ஸ்ரீராகத் திற்கும், மத்தியமாவதிக்கும் உள்ள வித்தியாசத்தை எவரிடமாவது கேட்டுத் தெரிந்துகொண்டார்போ லிருக்கிறது. அதற்கு, நேற்று காலை முதல் இன்று மாலை வரையில் அவகாசம் வேண்டி யிருந்தது போல் இருக்கிறது.

லீலாவதி:—ஐயா, நீர் பெரியவர்; உம்மோடு பேச எனக்கு அவ் வளவு திறமை இல்லை. நீர் போய் வாரும்.

பாகவதர் :—ஓ அவசியம் வருகிறேன். கர்ணாமிருத பாகவதர் வரும்போது நான் மறக்காமல் அவசியம் வருகிறேன். உலகமே வேஷ மய மென்றாயே. இதோ பக்கத்தில் இருக்கும் அம்மாள்கூட அதில் சேர்ந்தவர்கள்போ லிருக்கிறது? (போக முயலுகிறார்)

வந்த அம்மாள் :—நான் வேஷக்காரி என்கிறீரா?

கீதாமிருதம் :— (திரும்பிப் பார்த்து) என்னிடமா கேள்வி கேட்கிறீர்கள்?

வந்த அம்மாள் :—ஆம்.

கீதாமிருதம் :— நான் போகும் போது எனக்குள் ஏதோ பேசிக் கொண்டே போனால் உங்களுக்கேன் இப்படி மூக்கின்மேல் கோபம் வருகிறது? இந்த லீலாவதி அம்மாள் உலகமெல்லாம் வேஷமயம் என்று சொன்னபோது அதில் நீங்கள் அடங்கவில்லையா! அதைத் தானே நான் எடுத்துச் சொல்லிக்கொண்டே போகிறேன். உள்ள தைச் சொன்னால் கொள்ளையனுக்கு கோப்பாளம் என்பார்கள். அது சரியாய்த்தா னிருக்கிறது. உங்களோடு சண்டைபோட நான் தயாரா யில்லை—என்று கூறியபடி அவ்விடத்தை விட்டு வெளியில் போய் விட்டார்.

போனவர் தமது வீட்டிற்குள் நுழைந்து ராமநாதனுடைய அறையைப் பார்த்தார். அப்போது அவர் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். கிதாமிருத பாகவதர் அங்கிருந்து தமது பாகத்தை அடைந்து, கூடத்தில் உட்கார்ந்து எதைப் பற்றியோ சிந்தித்தபடி இருந்தார்.

அவ்வாறு சுமார் கால்மணி நேரம் கழிந்தது. அப்போது, கர்ணமிருத பாகவதருடைய தங்கை என்று சொல்லிக்கொண்டு லீலாவதியிடம் வந்த ஸ்திரீ அவருக்கெதிரில் பிரஸன்னமாய், "என்ன பாகவதரே, நிஷ்டையி லிருக்கிறீரா?" என்று குறும்பாக வினவினள்.

அதைக் கேட்டு கிதாமிருத பாகவதர் திடுக்கிட்டு நிமிர்ந்து அவளை உற்று நோக்கி, "ஏன் அம்மா, எங்கே வந்தாய்? திறந்திருக்கும் வீட்டிலெல்லாம் நுழைவதே உனக்கு உத்தியோகம் போல் இருக்கிறது?" என்றார்.

அம்மாள்:—அந்த வித்தையில் உம்மை யாரும் வெல்ல முடியாதென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அடுத்த வீடு திறந்திருக்கும் போதெல்லாம், மணி என்ன என்றும், இன்னம் வேறு பலவிதமாகவும் கேட்டுக்கொண்டு நீர் அங்கே நுழைகிறீரே; உமக்கும் அந்த தாசிக்கும் என்ன சம்பந்தம்?—என்றாள்.

பாகவதர்:—(அவள் பேசின முறுக்கைக் கண்டு திகைத்துப் போனவராய்) அந்த விஷயத்திற்கும் உனக்கும் என்ன சம்பந்தமென்பதை முதலில் நீ சொல். அதற்குமேல் நான் உனக்கு உத்தரம் சொல்லுகிறேன்.

அம்மாள்:—நீர் அவளுடைய பாடிகார்டா? (மெய் காப்பாளரா?) அவளுடைய வீட்டிற்கு யார் வந்தாலும், நீர் உடனே அங்கே வந்து, அவர்களை அவமானப்படுத்திக்கொண்டும், வக்கீல் மாதிரி கிராஸ் கேள்விகள் கேட்டுக்கொண்டும் இருக்கிறீரே! வயணம் இன்னதென்று பிரியவில்லையே!

பாகவதர்:— (வியப்போடு உற்றுப் பார்த்து) ஏன் அம்மா உனக்கு இவ்வளவு கோபம் உண்டாகிறது? நீ ஸ்திரீ என்பதும், இது அயலாருடைய வீடு என்பதும் கவனம் இருக்கட்டும்.

அம்மாள்.—அந்த மிரட்டலை யெல்லாம் உம்முடைய சம்சாரத்திற்கு வைத்துக்கொள்ளும். கேட்பதற்கு ஜெவாப் சொல்

னும். நேற்று காலையில் கர்ணாமிருத பாகவதர் வந்த போதும், நேற்று சாயங்காலம் அவருடைய சிஷர் வந்தபோதும், நீர் குறுக்கில் விழுந்து நாரதர் வேலை செய்யவேண்டிய காரண மென்ன ?

பாகவதர்:—ஸ்திரீ ஜாதியா யிருக்கிறாயே என்று கொஞ்சம் சாந்தமா யிருந்தால், தலைக்குமேல் ஏறுகிறாயே. நீ கேட்பதற்கு ஜெவாப் சொல்ல நான் தயாராய் இல்லை. நீ வெளியில் போ. என் னுடைய வீட்டில் இருக்க வேண்டாம்.

அம்மாள்:—நீர் உம்முடைய சாந்த குணத்தை விட்டு பெரிய புலியாக மாறினால் கூட நான் பயப்படபோகிற தில்லை. நான் ஸ்திரீ என்று ஏன் நினைக்கிறீர் ? நானும் ஆண்பிள்ளை என்றே நினைத்துப் பேசும் ?

பாகவதர்:—அப்படியானால் நீ பகல் வேஷக்காரனா ?

அம்மாள்:—நான் உன்னைப்போல் இருக்கும் குறும்பர்களு டைய துஷ்டத்தனத்தை அடக்க ஏற்பட்டிருக்கும் ஸி. ஐ. டி இன்ஸ்பெக்டர்.

பாகவதர்:—(திடுக்கிட்டு நடுங்கி) ஓ, அப்படிச் சொல்லும். நீர் ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டரா ? உம்முடைய பெயர் என்னவோ ?

அம்மாள்:—என்னுடைய பெயர் உமக்கு அவசியம் தெரிய வேண்டுமா ? நான் என் பெயரை உம்மிடம் சொல்லத் தடையில்லை. இனிமேல் நீர் நான் சொல்வதுபோல் செய்வதா யிருந்தால், என் பெயரைச் சொல்லுகிறேன்.

பாகவதர்:—அப்படியே செய்கிறேன். சொல்லும்.

அம்மாள்:—என்னுடைய பெயர் சுப்பையா; நாங்கள் ஒரு கேஸ் சம்பந்தமாய் வேலை செய்துகொண் டிருக்கிறோம். நானோ, மற்றவரோ, லீலாவதியிடம் வந்து ஏதாவது விசாரணை செய்தால, நீர் அங்கே தலை காட்டக்கூடாது. தவறி, வருவீரானால், அவளோடு உடந்தைக் குற்றவாளியாய் உம்மையும் சேர்த்து எழுதிவிடுவேன்; தெரிகிறதா ?

பாகவதர்:—பக்கத்து வீட்டில் எனக்கென்ன வேலை இருக் கிறது. இனி நான் அங்கே போகவே மாட்டேன்.

அம்மாள்:—ஜாக்கிரதை. ஏதாவது வாலை யாட்டினால், நறுக்கி விடுவோம். அதிருக்கட்டும். இப்போது இந்த வீட்டில் ராமநாதன் என்பவன் இருக்கிறானே. இவன் என்ன செய்கிறான் ?

பாகவதர் :—சாப்பிட்டுவிட்டுத் தூங்குகிறான்.

அம்மாள் :—(சிரித்துக்கொண்டு) ஏதாவது தொழில் செய்கிறானா என்றல்லவா கேட்கிறேன்.

பாகவதர்:—அவன் எவ்விதமான தொழிலும் செய்யவில்லை. ஓட்டலில் இருந்து சாப்பாடு வருகிறது; சாப்பிட்டுவிட்டுத் தூங்குகிறான்.

அம்மாள் :—இவன் விஷயத்திலும் நீர் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். இவன் எங்கே போகிறான், என்ன செய்கிறான், இவனைப் பார்ப்பதற்கு யார் யார் வருகிறார்கள் என்னும் தகவல்களைத் தெரிந்துகொண்டு நீர் எனக்குச் சொல்லவேண்டும்.

பாகவதர் :—ஆகட்டும்; அப்படியே செய்கிறேன்.

அம்மாள் :—நான் இன்னான் என்பதையும், இவர்களை கவனிக்கச் சொன்னேனென்பதையும் லீலாவதி யிடத்திலோ, ராமநாதனிடத்திலோ தெரிவிக்கக் கூடாது.

பாகவதர் :—நான் ஏன் அதை யெல்லாம் வெளியிடுகிறேன். உங்களிடம் தகவல்களைத் தெரிவிக்கவேண்டு மென்றீர்களே. நீங்கள் எப்போதும் இதே மாதிரி வேஷத்தில் இருப்பீர்களா? நான் உங்களை எங்கே பார்க்கிறது? அல்லது, நீங்கள் இங்கே வருவீர்களா? உங்களுடைய சுயரூபம் தெரியாவிட்டால், நான் உங்களுடைய அடையாளத்தை எப்படிக் கண்டுபிடிக்கிறது?

அம்மாள் :— ஸ்ப்-இன்ஸ்பெக்டர் சுப்பையா அனுப்பினார் என்று யார் வந்து கேட்டாலும் நீர் சங்கதியைச் சொல்லலாம்— என்றார்.

அவ்வாறு அவர் கூறியபோது, ராமநாதன் அங்கு வந்தாராதலால், அதற்குமேல் அந்தப் போலி அம்மாள் தனது பேச்சை நிறுத்திக்கொண்டாள். யாரோ ஸ்திரீ நின்றதைக் கண்ட ராமநாதன் தயங்கித் தயங்கி வந்தார்.

பாகவதர் :—(ராமநாதனை நோக்கி) என்ன, ஐயரவாள், என்ன வேண்டும்?

ராமநாதன் :—நான் தூங்கிக்கொண் டிருந்தேன். திடீரென்று தூக்கம் கலைந்தது. அப்போது இங்கே புதுக்குரலில் யாரோ பேசியது கேட்டது. அது சண்டை போடுவது போலவும் இருந்தது. ஆகையால், யாரென்று பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.

வேறு காரியம் ஒன்றுமில்லை. சரி; நான் போகிறேன்—என்று கூறி விட்டுத் தமது அறைக்கு மறுபடி போய்விட்டார்.

உடனே அந்தப் போலி ஸ்திரீ பாகவதருடைய முகத்தைப் பார்த்தாள். பாகவதர், "நாம் பேசியது இவருடைய காதில் விழுந் திருக்காது" என்றார்.

போலி ஸ்திரீ, "காதில் விழுந்தால், என்ன செய்துவிடு வான். அதைப்பற்றி கவலை இல்லை. சரி; நான் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே வெளியில் போனாள்.

போனவள் சில தெருவுகளைக்கடந்து முடிவாக ஒரு தெருவை அடைந்து கதவின் இலக்கங்களைப் பார்த்துக்கொண்டே போக, ஒரு கதவில் 144 என்ற எண் காணப்பட்டது. அதைப் பார்த்த வுடன் அந்தப் போலி ஸ்திரீயின் முகம் சரேலென்று மாறுபட்டது. அவள் எதையோ நினைத்துக்கொண்டவள்போல அந்தக் கதவண்டை சென்று, தன் வலது கையை முஷ்டி செய்துகொண்டு இரண்டு மூன்று தடவைகள் தட்டினாள். அடுத்த நிமிஷம் கதவு திறந்து கொண்டது. உள்ளே நின்ற ஓர் ஆள், "யாரம்மா நீ? ஏன் கதவைத் தட்டுகிறாய்?" என்றான்.

போலி ஸ்திரீ:— தெருவில் நின்றபடியே யாராவது விஷயத் தைச் சொல்லுவார்களா! உள்ளே வந்தல்லவா சொல்லவேண்டும்— என்று மெதுவாய் மறுமொழி கூறியபடி உள்ளே நுழைந்தாள். நடையில், மாடிப் படிக்கட்டு ஒன்று காணப்பட்டது. அதைப் பார்த்துக்கொண்ட போலி ஸ்திரீ அந்த ஆளை நோக்கி, "மாடியில் ஐயா வியாதியாய்ப் படுத்திருந்தாரே. அவருக்கு இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?" என்றாள்.

ஆள்:—இங்கே யாருக்கும் எந்த விதமான வியாதியும் இல் லையே. நீ யாரம்மா?

போலி ஸ்திரீ:— நான் லீலாவதியம்மாளிடமிருந்து வந்திருக் கிறேன். அந்த அம்மாள் என்னுடைய சிநேகிதை. அந்த அம்மாள் வீட்டை விட்டு வரமுடியாதபடி சில அசௌகரியங்கள் ஏற்பட் டிருக்கின்றனவாம். ஆகையால், ஐயாவுக்கு உடம்பு எப்படி இருக்கிற தென்று பார்த்துக்கொண்டு வரும்படி என்னை அனுப்பினார்கள்.

ஆள்:—எந்த லீலாவதி அம்மாள் அனுப்பினார்கள்?

போலி ஸ்திரீ:—பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள அம்மாள்தான் அனுப்பினார்கள்.

ஆள்:—அவர்கள் யார் என்பது எனக்குத் தெரியவில்லையே! ஏதாவது கடிதம் கொடுத்தனுப்பினார்களா?

போலி ஸ்திரீ:—என்னிடம் கடிதம் கொடுத்தனுப்ப அந்த அம்மாள் பயப்படுகிறார்கள். ஏனென்றால், அந்த அம்மாள் இந்த வீட்டிற்கு வந்துவிட்டுப் போனதை எப்படியோ போலீஸார் அறிந்து அந்த அம்மாளுடைய வீட்டைச் சுற்றிலும் நின்று கவனித்துக்கொண்டிருக்கிறார்களாம். என்னிடம் கடிதம் கொடுத்தனுப்பினால், என்னை யாராவது மடக்கிக்கொண்டு சோதனை செய்தால், அது துன்பமாய் முடியுமென்று நினைத்து, என்னிடம் கடிதம் கொடுக்கவில்லை; வாய் மூலமாகவே செய்தி சொல்லி அனுப்பினார்கள். ஓர் அடையாளம்கூட சொல்லச் சொன்னார்கள்.

ஆள்:—என்ன அடையாளம்?

போலி ஸ்திரீ:—சில தினங்களுக்குமுன் மோட்டார் வண்டியில் சில ஸர்ஜன்களை இங்கே அழைத்துக்கொண்டு வந்தீர்களாம்.

ஆள்:—நீ சொல்வது எதுவும் எனக்கு விளங்கவில்லை. வீட்டு எஜமானர் மேலே இருக்கிறார். நான் போய் இதையெல்லாம் அவரிடம் சொல்லி, மறுமொழி கேட்டுக் கொண்டு வருகிறேன். அது வரையில் நீ இங்கேயே இரு—என்று கூறிவிட்டு படிகளின் வழியாக ஏறி மேலே சென்று மறைந்து போனான்.

அவன் மறைந்து போனவுடன் போலி ஸ்திரீ விரல்களை ஊன்றிபபடி ஓசையின்றி நடந்து படிக்கட்டின் மேல் ஏறி உச்சியிலிருந்த வாசற்படிக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு, உள் பக்கத்தில் என்ன பேசுகிறார்கள் என்பதை கவனிக்க முயன்றாள். உள்புறத்தில் மனிதர்கள் மிக தூரத்தில் இருந்து தணிவான குரலில் பேசினார்களாதலால், போலி ஸ்திரீக்கு அது கேட்கவில்லை. ஆகையால், அவள் மெதுவாகத் தனது தலையை நீட்டி உட்புறத்தில் எட்டிப் பார்த்தாள்.

அதே காலத்தில் படிக்கட்டின் அடியில், அதாவது, நடையில் ஒரு மனிதர் வந்து நின்று கொண்டு, "யார் மேலே நிற்கிறது?" என்று வினவிய குரல் கேட்டது. உச்சியில் நின்ற போலி ஸ்திரீ திடுக்கிட்டு நடுங்கிக் கீழே குனிந்து பார்த்தாள். அது வரையில்

இருளாயிருந்த அந்த இடத்தில் குபீரென்று ஒரு மின்சார விளக்கு பற்றிக்கொண்டு பிரகாசிக்கத் தொடங்கியது. அப்போது கீழே நின்ற மனிதருடைய வடிவம் அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. அந்த ஸ்திரீ, "ஆ! நீயா?" என்று என்ன காரணத்தினாலோ வியப்போடு கேட்டபடி அவசரமாய்க் கீழே இறங்கிவர முயல, கதவின் நிலையிலிருந்த நாதாங்கியில் அவளுடைய புடவை மாட்டிக் கொண்டதாகையால், அவளுடைய காலடி தவறிப் போய் விட்டது. அவள் மூன்றாவது படியில் போய் விழுந்து, அங்கிருந்து வழுக்கி விடப் பெற்று, உருண்டு புரண்டு அடியில் போய் விழுந்தாள். அப்படி விழுந்ததால், அவளுடைய மூளையில் பலமான அதிர்ச்சி தாக்கவே, அவள் தனது பிரக்ஞையை இழந்து பிணம்போலாய்விட்டாள். அதற்குமேல் அங்கே என்ன நடந்ததென்பதை அவள் உணரவில்லை. அவ்வாறு விழுந்ததில் அவருடைய கிருப் தலையின்மேல் கட்டப்பட்டிருந்த டோப்பா மயிர் விலகி அப்பால் விழுந்து விட்டது. ஸ்பிரிங் மூலமாய் காதுகளில் சொருகப் பெற்றிருந்த தோடுகளில் ஒன்றும் கழன்று தரையில் விழுந்து விட்டது. அது ஆண்பிள்ளை என்பது பிரத்யக்ஷமாகத் தெரியும்படியான பல மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன.

அந்த வேஷதாரி விழுந்ததால் ஏற்பட்ட ஓசையைக் கேட்டு மேலே இருந்தும் சிலர் வியப்போடு கீழே ஓடி வந்து, "இந்தப் பெண்பிள்ளை ஏன் இப்படி விழுந்து கிடக்கிறாள்?" என்றனர். நடையில் நின்ற மனிதர் அதற்குள் அந்த வேஷதாரியின் அடையாளத்தைக் கண்டுகொண்டாராதலால், "அவர், "ஓகோகோ! இவன் ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் சுப்பையா அல்லவா! இவன் ஏதோ மோசக் கருத்தோடு பெண்பிள்ளைபோல் வேஷம் போட்டுக் கொண்டு வந்திருக்கிறான்!" என்றார்.

அதற்கு முன் வந்த ஆள், "தான் லீலாவதியம்மாளுடைய சிநேகிதை என்றும், போலீஸாருக்கு பயந்து அந்த அம்மாள் கடிதம் கொடுக்காமல் தன்னை அனுப்பியதாகவும் இந்த வேஷதாரி சொன்னானே; மேலே தூக்கிக்கொண்டு போய் இவனுக்குத் தகுந்த தண்டனை கொடுப்போம" என்றான். உடனே எல்லோரும் சேர்ந்து, சுப்பையாவைத் தூக்கி மேலே எடுத்துக்கொண்டு போய்விட்டனர்.

* * * * *

அன்றையதினம் மாலை சுமார் ஆறு மணிக்கு, பிள்ளையார் கோவில் தெருவில் கிதாமிருத பாகவதர் தமது வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு அன்றைய மாலைப் பத்திரிகையொன்றைக் கையில் வைத்துப் புரட்டிக்கொண்டும், முக்கியமான விஷயங்களைப் படித்துக்கொண்டு மிருந்தார். அப்போது அடியில் காணப்பட்ட விஷயம் அவருடைய திருஷ்டியில் பட்டது :—

# ஒரு பரிதாபகரமான மரணம்?

## சமய சஞ்சீவி ஐயர் கத்தியால் குத்தப்பட்டு காலகதி யடைந்தார்

### குற்றவாளியின் பயங்கர முடிவு

சென்னை,
வருஷம், மாசம், தேதி.

இன்றையதினம் அதிகாலையில் சென்னையிலிருந்து அந்தமான் தீவிற்குப் புறப்பட்ட அழகு நடை அன்னம் என்னும பெய ருடைய கப்பலில் போலீஸ் இலாகா டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலான ராவ் ஸாகேப் சமய சஞ்சீவி ஐயர் ஒரு பிரயாணி யாகச் சென்றார். சில தினங்களுக்கு முன் அந்தமான் தீவி லிருந்து தப்பி யோடிவந்த இரண்டு கைதிகளைப் பிடிக்கும் பொருட்டு, போர்ட் பிளேர் தலைமை அதிகாரி மிஸ்டர் பம்ப் கின்ஸ் தந்தியனுப்பியதற் கிணங்க, ராவ் ஸாகேப் ஐயர் சென்றார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

கப்பல் சென்னையை விட்டு சுமார் ஐம்பது மயில் தூரம் சென்ற சமயத்தில் ராவ் ஸாகேப் ஐயர் உலாவுவதற்காகவோ, வேறு என்ன காரணத்திற்காகவோ, கப்பலின் மேல் தட்டிற் குச் சென்றார். அப்போது மேல் தட்டில் இருந்த ஒரு மனி தன் அவர் எதிர்பார்க்காத நிலைமையில் கத்தியும் கையுமாய் ஓடி வந்து அவர்மீது பாய்ந்து அவரைப் பல இடங்களில் குத் திப் படுகாயப்படுத்த, அவர் கூச்சலிட்டுக்கொண்டு கீழே விழுந்தார். உடனே அவருடைய உயிர் நீங்கிவிட்டது.

அவர் கூச்சலிட்டதைக் கேட்டு பலர் மேலே ஓடி வந் ததை உணர்ந்த குற்றவாளி உடனே ராவ் ஸாகேப் ஐயரின் சவத்தை இழுத்து சமுத்திரத்தில் தள்ளிவிட்டு தானும் சமுத்திரத்தில் குதித்து மறைந்து விட்டான் என்னும் தகவல் பல சான்றுகளால் சந்தேகமற அநுமானிக்கப்பட்டது.

உடனே கப்பல் நிறுத்தப்பட்டது. கடல் முழுகி ஆள் களில் சிலர் தண்ணீரில் இறங்கித் தேடினர். இருவரில் எவ ருடைய உடம்பும் அகப்படவில்லை. குற்றவாளியும் தண்ணீரில் இறந்து போய்விட்டான் என்றே எல்லோரும் நம்புகின்றனர். ராவ் ஸாகேப் ஐயரின் அகால மரணத்தைப்பற்றி அபாரமாய் விசனிக்காதவர் எவருமில்லை.

—என்னும் செய்தியைப் படித்து முடித்தவுடன் கீதாமிருத பாகவதரின் முகம் பலவிதமான மாறுதல்களை அடைந்தது. அப்போது அவர் லீலாவதியின் வீட்டுப் பக்கம் தற்செயலாகத் திரும்பிப் பார்த்தார். லீலாவதி திண்ணைகளுக்கு நடுவில் நின்று தெருவில் போவோர் வருவோரை கவனித்துக்கொண் டிருந்தது தெரிந்தது.

அவர் உடனே உற்சாகத்தோடு பேசத் தொடங்கி, "என்ன லீலாவதியம்மா, கர்ணாமிருத பாகவதரை வரவேற்பதற்காக நிற்கிருயா? சாயங்காலம் வருவதாய்ச் செய்தி சொல்லி அனுப்பினாரே! வருவார், வருவார், அவசியம் வருவார்; மறக்க மாட்டார்" என்றார்.

அவர் தன்னைப் புரளி செய்கிறார் என்பதை லீலாவதி நன்றாக உணர்ந்தாளாதலால், அவளுடைய முகம் சரேலென்று மாறியது. ஆனாலும் அவள் அவருக்கு எவ்வித மறுமொழியும் கொடாமல் மௌனமாய் நின்றாள்.

பாகவதர்:—நானும் அவருடைய வருகையைத்தான் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறேன்.

லீலாவதி:—(கோபத்தோடு) எதற்காக எதிர்பார்க்கிறீர்கள்? மறுபடியும் அவரோடு சண்டைக்குத் தயாரா யிருக்கிறீர்களோ?

பாகவதர்:—நான் பெரிய சண்டைக்காரன் என்பது உன்னுடைய அபிப்பிராயம்போல் இருக்கிறது. அப்படி நீ நினைப்பது சுத்த தப்பான விஷயம். நான் அவருக்கு ஒரு சந்தோஷச் செய்தி சொல்ல வேண்டுமென்று காத்திருக்கிறேன்.

லீலாவதி:—என்ன சந்தோஷச் செய்தி?

பாகவதர்:—இன்றைய பத்திரிகையில் அது வெளியாயிருக்கிறது. அவர் யாரை மோடனம் பண்ண வேண்டுமென்று துடித்தாரோ அவர் மாண்டுபோய்விட்டார்.

லீலாவதி:—(திடுக்கிட்டு வியப்படைந்து) யார் மாண்டுபோனது?

பாகவதர்:—உன்னுடைய பரம குருவுக்கு ஓர் அணா கொடுத்து அவரைக் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளச் சொன்னாரே போலீஸ் சமய சஞ்சீவி ஐயர். அவர் கப்பலேறி அந்தமான் தீவுக்குப் போனாராம். அங்கே அவரை யாரோ ஒருவன் கத்தியால் குத்தி தூக்கிக் கடலில் போட்டு விட்டானும்.

லீலாவதி:—ஓ! அப்படியா நடந்தது! இந்தப் பத்திரிகையிலா அந்தச் செய்தி வந்திருக்கிறது?

பாகவதர்:—(திண்ணையை விட்டிறங்கி அவளிடம் வந்து பத்திரிகையைக் கொடுத்து) இதோ பார். இந்த விஷயத்தைப் படி.

லீலாவதி:—(வாங்கிப் படித்துவிட்டு அவரிடம் திருப்பிக் கொடுத்தபடி) ஐயோ பாவம்! இரண்டு உயிர்கள் அநியாயமாய் அழிந்து போயின.

பாகவதர் :—(திரும்பவும் தமது திண்ணையை அடைந்து) இதைப் படித்தால், கர்ணமிருத பாகவதர் உண்மையில் விசனப் படுவாரா, சந்தோஷப்படுவாரா என்பது தெரியவில்லை! தம்மை அவ மானப்படுத்தியவர் இறந்து போனதைப்பற்றி ஒருபுறத்தில் சந் தோஷமும், அவரை மோடனம் பண்ணும் திருப்தி தமக்கில்லாமல் போனதைப்பற்றி விசனமும் அடைவா ரென்பது நிச்சயம்.

லீலாவதி :—அவர் எந்த விதமான உணர்ச்சியை வேண்டுமா னாலும் கொள்ளட்டும். எனக்கென்ன உங்களுக்கென்ன! இதைச் சொல்லுவதற்காகவா அவருடைய வருகையை எதிர்பார்க்கிறீர்கள். அவர் மாத்திரம் இதைப் படித்திருக்க மாட்டாரா?

பாகவதர் :—இதோடு இன்னொரு விஷயமும் இருக்கிறது.

லீலாவதி :–அது இன்ன விஷய மென்பதைச் சொல்லலா மல்லவா!

பாகவதர் :—ரகஸியமான விஷயங்களை யெல்லாம் பகிரங்க மாய்ச் சொல்லுவார்களா?

லீலாவதி :—உங்களுக்கும் அவருக்கும்தான் பாம்புக்கும் கீரிக் கும் இருக்கும் அன்னியோன்னிய உணர்ச்சி இருந்து வருகிறதே! இருவருக்குள்ளும் ரகஸியமான விஷயங்கள் என்ன இருக்கப் போகின்றன.

பாகவதர் :–இல்லாமலா சொல்லுவேன். அதிருக்கட்டும். நான் ஓர் அவசர காரியத்தை உத்தேசித்து கொஞ்சம் வெளியில் போய் வர வேண்டும். அதற்குள் அவர் வரும்பட்சத்தில் நான் சொல்லச் சொன்னதாக அவரிடம் ஒரு சங்கதியைத் தெரிவிக்கிறாயா?

லீலாவதி :—என்ன அது?

பாகவதர் :—வேறொன்றுமில்லை. அவருடைய 144 என்னை ஒன்றும் செய்ய முடியாதென்றும், அதன் தைரியத்தினால் அமித மான இறுமாப்புக் கொள்ளவேண்டாமென்றும் நான் சொன்னதா கச் சொல்.

லீலாவதி :—(வியப்போடு) 144 என்பது என்ன! கி. பு. கோ. 144-வது பிரிவுப்படி நீதிபதிகள் தடை யுத்தரவு போடுவதாக பத் திரிகைகளில் படிக்கிறோமே அதுவா? அவர் யார் பேரிலாவது அவ் விதமான உத்தரவு பிறப்பிக்க முயற்சி செய்கிறாரா?

பாகவதர் :—அதல்ல அந்த நம்பரை நீ அவரிடம் சொன் னால் அவருக்கு உடனே விஷயம் விளங்கிப்போகும்.

லீலாவதி :—நான்தான் அதைக் கொஞ்சம் தெரிந்து கொள் ளக் கூடாதா? 144 என்பது ரூபாயா, வீட்டு நம்பரா, அல்லது, வேறு ஏதாவது வஸ்துவா?

பாகவதர் :—நான் 144 என்ற எண்ணைக் குறித்தவுடன், உனக்கு ஏன் இவ்வளவு ஆவல் உண்டாக வேண்டாம்?

லீலாவதி :—நீங்கள் அதைச் சொன்னவுடன், எனக்கு உடனே ஒரு விஷயம் நினைவுண்டாயிற்று. அதனால்தான் கேட்டேன்.

பாகவதர் :—அது என்ன விஷயமோ ?

லீலாவதி :—நீங்கள் மாத்திரம் பூடகமாய்ப் பேசலாம் ; நான் பேசக் கூடாதா ?

பாகவதர் :—தாராளமாய்ப் பேசலாம்—என்றார்.

அப்போது உள்ளே இருந்து ராமநாதையர் திண்ணைக்கு வந்தாராதலால், பாகவதர் அதற்குமேல் பேசாமல் நிறுத்திக் கொண்டார். அதே காலத்தில் ஒரு மனிதன் ஸைக்கில் வண்டியில் விசையாக வந்து வண்டியை லீலாவதியின் வீட்டுத் திண்ணையில் சார்த்தினான். அவனைக் கண்டவுடன் லீலாவதி முகத்தெளிவும் ஊக்கமும் கொண்டு அவ்விடத்தைவிட்டு நடைக்குப் போய்விட்டாள்.

ஸைக்கில் வண்டியில் வந்த மனிதனும் உடனே லீலாவதியின் வீட்டிற்குள் நுழைந்தான். அவனுடைய வயது சுமார் முப்பதிருக்கலாம்.

அந்த மனிதன் லீலாவதியின் வீட்டிற்குள் போனதைக் கீழ்ப்பார்வையாக கவனித்துக் கொண்டிருந்த கீதாமிருத பாகவதர், "என்ன, ராமநாதையரவாள், எங்கேயும் வெளியில் போகவில்லையா ? முகம் உறக்கமா யிருக்கிறதே! கொஞ்சம் உலாவி நல்ல காற்றை சுவாசித்தால், தெளியுமே !" என்றார். ராமநாதன் ஆற்றங் கரைப் பக்கம் போய் வரலாமென்றுதான் புறப்பட்டேன். நீங்கள் எங்கேயும் வெளியில் போகவில்லையா ?" என்றார்.

பாகவதர், "இல்லை" என்றார்.

"சரி; அப்படியானால் நான் போய் உலாவிவிட்டு வருகிறேன்" என்று கூறியபடி ராமநாதன் வெளியில் போய்விட்டார்.

உடனே பாகவதர் எழுந்து லீலாவதியின் வீட்டை யடைந்து நடையில் போய் நின்று உள்புறத்தில் என்ன பேசினார்கள் என்பதை கவனித்தார்.

லீலாவதி :—(வியப்போடு) ஓகோ ! பெண் வேஷத்தில் இங்கே வந்தவன் போலீஸ்காரனா ?

ஸைக்கில் ஆள் :—அவன் இரகஸியப் பொலீஸ் இலாகா ஸப்-இன்ஸ்பெக்டர் சுப்பையாவாம்.

லீலாவதி :—அவனை நான் அனுப்பியதாகச் சொன்னதெல்லாம் சுத்தப் பொய். அந்த வீட்டின் அடையாளத்தை அவன் எப்படித் தெரிந்துகொண் டிருப்பான் !

ஸைக்கில் ஆள் :—அதுதான் எங்களுக்கும் ஆச்சரியமா யிருக்கிறது ! அது விஷயமாய் உங்களை எச்சரித்துவிட்டுப் போவதற்காக என்னை அனுப்பினார்கள். இங்கே பாகவதராகவும், கிழவனாகவும்,

சிஷனுகவும் வந்தவர்கள் எல்லோரும் அநேகமாய்ப் போலீஸாராய்த் தானிருக்க வேண்டும். நீங்கள் இப்போது சொன்ன விவரங்களை யெல்லாம் நான் போய் அங்கே சொல்லுகிறேன். பக்கத்து வீட்டுக் காரர் 144 என்பதைப் பற்றிச் சொன்னதையும் சொல்லுகிறேன். நீங்கள் ஜாக்கிரதையா யிருங்கள். நான் போகலா மல்லவா? வேறு விசேஷ மில்லையே?

லீலாவதி:—அந்த சுப்பையாவை என்ன செய்திருக்கிறீர்கள்?

ஸைக்கில் ஆள்:—அவன் இனி வெளியில் வரமுடியாதபடி பத்திரப் படுத்தி இருக்கிறார்கள்.

லீலாவதி:—சரி; நீ போ—என்றாள்.

அவ்வளவோடு அவன் அவளை விட்டு இப்பால் வந்து நடைக் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தான். அப்போது கீதா மிருத பாகவதர் அங்கு காணப்படவில்லை. அந்த ஆள் தெருவை அடைந்தவுடன், அவனுடைய முகம் விகாரமாய் மாறிப்போயிற்று. அவன் உடனே உட்புறம் ஓடி வந்து லீலாவதியை நோக்கி, "என் ஸைக்கிலை யாரோ கொண்டுபோய்விட்டார்களே! திண்ணையில் சார்த்தி இருந்தேன். இதற்குள் எவனோ அதை எடுத்துக்கொண்டு போய் விட்டானே!" என்றான்.

அதைக் கேட்ட லீலாவதி ஆச்சரிய மடைந்தவளாய், "யாராவது விளையாட்டிற்காவது கொஞ்ச தூரம் போய் வரலா மென்று ஏறிக்கொண்டு போனாலும் போயிருக்கலாம். பக்கத்து வீட்டுத் திண்ணையில் இருக்கிறவர்களைக் கேட்டுப் பார்த்தாயா?" என்று கூறியபடி அவனுடன் வெளியில் வந்தாள். இருவரும் வீதி யின் இரண்டு பக்கங்களிலும் உற்றுப் பார்த்தனர். ஸைக்கிலில் எவரும் போகவுமில்லை; வரவுமில்லை. லீலாவதி, "பக்கத்து வீட்டுத் திண்ணையில் இருந்தவர்கள் உள்ளே போய்விட்டார்கள்போ லிருக் கிறது. நீ போய் அவர்களிடம் கேட்டுப்பார்" என்றாள்.

உடனே அந்த ஆள் அடுத்த வீட்டிற்குச் சென்று நடையில் நின்று, "சாமீ, சாமீ," என்று இரண்டு முறை கூப்பிட, "யார் அது?" என்று கேட்டுக்கொண்டு பாகவதர் வெளியில் வந்தார்.

ஸைக்கில் ஆள்:—நான் சற்றுமுன் என்னுடைய ஸைக்கிலை பக்கத்து வீட்டுத் திண்ணையில் சார்த்திவிட்டு ஒரு காரியமாய் உள்ளே போனேன்; வெளியில் வந்து இப்போது பார்க்கையில் ஸைக்கில் காணப்பட வில்லை. நீங்கள் திண்ணையில் இருந்தீர்களே. யாராவது ஸைக்கிலை எடுத்ததைப் பார்த்தீர்களோ என்று கேட்கலா மென்று வந்தேன்.

பாகவதர்:—நான் பார்க்கவில்லையே; நான் அப்போதே உள்ளே போய்விட்டேனே! எவனாவது போலீஸ்காரன் அதைக் கொண்டு போனாலும் போயிருக்கலாம்.

ஸைக்கில் ஆள் :—போலீஸ்காரன் ஏன் எடுக்கிறன்?

பாகவதர்:—லைசென்ஸ் நம்பர் உள்ள தகடு இல்லையோ என்னவோ!

ஸைக்கில் ஆள் :—தகடு இருந்ததே! அநியாயமாய் 40 ரூபாய் ஸைக்கில் போய்விட்டதே!

பாகவதர்:--நீ போலீஸ் ஸ்டேஷனில் போய் எழுதி வை. போலீஸார் அதைக் கண்டுபிடித்துக் கொடுக்கக் கடமைப் பட்டவர்கள்.

ஸைக்கில் ஆள் :—சரி; அப்படித்தான் செய்ய வேண்டும்—என்று கூறியபடி வெளியில் வந்து மறுபடியும் லீலாவதி யண்டை சென்று உதட்டைப் பிதுக்கி, "அவர் உடனே உள்ளே போய் விட்டாராம். போலீஸாரிடம் பிராது கொடுக்கச் சொல்லுகிறர்" என்றன்.

லீலாவதி, "சரி; வீட்டுக்குப் போ. ஸைக்கிலை எடுத்தவன் எப்படியும் அகப்பட்டுக் கொள்வான்" என்றள்.

அதைக் கேட்டுக்கொண்டு அந்த ஆள் அவ்விடத்தை விட்டு நடந்தேபோகத் தொடங்கி, பல தெருவுகளைக் கடந்து முடிவாக ஒரு தெருவை யடைந்து 144ம் நம்பர் வீட்டிற்கு எதிரில போய் வீதியின் இரண்டு பக்கங்களிலும் தனது பார்வையைச் சுழற்றினன். ஏனென்றல் தன்னை எவரேனும் கவனிக்கிறர்களா என்பதை நிச்சயித்துக் கொண்டு உள்ளே போகலாம் என்று கருதி அவன் அப்படிச் செய்தான்.

அப்போது வீதியில் ஜனங்கள் போவதும் வருவதுமாயிருந்தனராலும், எவரும் தன்னை கவனித்ததாக அவனுக்கு சம்சயம் உண்டாகவில்லை யாதலால், அவன் கதவிலிருந்த ஒருவிசையை அழுத்திவிட்டு நிற்க, அடுத்த நிமிஷம் கதவு திறந்து கொண்டது. அவன் உள்ளே சென்றவுடன் கதவு மறுபடி தாளிடப் பெற்றது.

ஆனல், அப்போது எதிர்த்த வீட்டுத் திண்ணையில் ஒருவர் உட்கார்ந்துகொண் டிருந்ததை அந்த ஆள் கவனிக்கவில்லை. அவர் துருக்க சாதியைச் சேர்ந்த ஒரு ஹக்கீம் என்பது கண்கூடாகத் தெரிந்தது. ஹக்கீம் என்பவா வைத்தியர். அவர்களுடைய வைத்திய முறையை யூநானி வைத்தியம் என்றும் சிலர் குறிப்பதுண்டு. துருக்க ஹக்கீம்களில் சிலர் அபார சாமர்த்தியம் வாய்ந்தவர்களாயிருந்திருக்கிறர்கள். ஹிந்து வைத்தியர்கள், இங்கிலீஷ் வைத்தியர்கள் ஆகியோரிடம் இல்லாத சில புதுமையான மருந்துகளும், வைத்திய சிகிச்சை முறைகளும் அவர்களிடம் இருக்கும். தாதுபுஷ்டி சம்பந்தமாக அவர்கள் தயாரிக்கும் மருந்துகள் அற்புத சக்தி வாய்ந்தவைகளா யிருப்பதுண்டு.

அந்த வகுப்பைச் சேர்ந்த ஹக்கீம் ஸாயப் ஒருவர் நாம் மேலே குறித்த ஆள் வீட்டிற்குள் நுழைந்து மறைந்துபோன பின்

மெல்ல எழுந்து, ஏதோ வீட்டின் அடையாளத்தைத் தெரிந்து கொள்ள மாட்டாமல் தடுமாறுகிறவர் போல் அந்த வீதியில் இங்கு மங்குமாய்ப் போய்வந்து வீதியில் ஜன நடமாட்டம் இல்லாத சமயம் பார்த்து, 144-ம் நம்பர் வீட்டின் கதவண்டை போய் நின்று அதை இரண்டு மூன்றுதரம் தட்டினார்.

சுமார் ஐந்து நிமிஷகாலத்தில் அந்தக் கதவு திறக்கப்பட்டது. அதைக் கால்பாகம் திறந்து பிடித்துக்கொண்டு வழியை மறைத்துக் கொண்டு நின்ற ஓர் ஆள் அவரைப் பார்த்தான். அவர் தலையில் பச்சை நிறமான துணியால் ஆன ஒரு பெரிய தலைப்பாகையை வைத்துக் கொண்டிருந்தார். கழுத்தில் தேன் நிறமுடைய மணிகள் கோக்கப்பட்ட ஒரு மாலை காணப்பட்டது. அவர் தமது கண்களில் மை தீட்டிக்கொண்டிருந்தார். சிறியதாயிருந்த அவருடைய தாடியில் செம்பட்டை நிறம் ஏற்றப்பட்டிருந்தது. அவருடைய கை விரல்களில் சில மாந்திரீக மோதிரங்கள் காணப்பட்டன. அவருடைய கண்கள் முக்கால் பாகம் மூடப்பட்டிருந்தன. அவர் உறங்குகிறவர்போல் கீழ்ப்பார்வையாகவே பார்த்தார். வெள்ளை நிஜார், கருப்பு நிறமுடைய நீண்டசட்டை முதலியவை அவருடைய உடம்பை மறைத்துக்கொண்டிருந்தன. அவருடைய இடது பக்கத்தில் ஒரு மருந்துப்பெட்டி காணப்பட்டது. இரண்டு கைகளிலும் ஊதா நீலம் முதலிய நிறங்களில் சில மருந்து சீசாக்கள் இருந்தன. அவற்றிற்குள் தேன்போலவும், நெய்போலவும், ஜலம் போலவும் திராவகங்களும், கிருதங்களும், எண்ணெய்களும் காணப்பட்டன.

அவ்வித அலங்காரங்களோடு நின்ற ஹக்கீம் ஸாயப்புவைக் காணவே, அந்த ஆள் அமைதியாகவும் மரியாதையாகவும் பேசத் தொடங்கி, "ஸாயப் ஐயா, நீங்களா கதவைத் தட்டினீர்கள்?" என்றான்.

ஹக்கீம்:—ஆமப்பா; நான் தான் தட்டினேன். இங்கே வேறே யாருமில்லையே. கதவைத் தட்டிய விஷயத்தில் உனக்கு சந்தேகம் ஏற்படக் காரணமில்லையே!

ஆள்:—ஏன் தட்டினீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?

ஹக்கீம்:—(ஆத்திரத்தோடு பேசத் தொடங்கி) என்னைப் பார்த்தால வைத்தியர் என்பது தெரியவில்லையா? எனக்கு என்ன வேண்டும் என்று கேட்கிறாயே? நான் பிச்சை கேட்க வந்திருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டாயா? இன்னொரு தரம் அந்த மாதிரி கேட்காதே. உங்களிடம் நான் பிச்சை கேட்பதற்காக வரவில்லை. நோயாளிக்கு மருந்து கொடுத்து அவருடைய தொந்தரவை நீக்குவதற்காக வந்திருக்கிறேன். நான் எதையும் வாங்க வரவில்லை. மற்றவருக்குக் கொடுப்பதற்கு மருந்துகளோடு வந்திருக்கிறேன்.

நான் தர்ம வைத்தியம் செய்கிறவன். எவரிடத்திலும் ஒரு சல்லி கூட வாங்கமாட்டேன்.

ஆள்:—ஏன் கோபமாய்ப் பேசுகிறீர்கள் ஸாயப்; நான் உங்களை அவமரியாதைப் படுத்தவில்லை. நீங்கள் கதவை இடித்த காரணத்தைச் சொல்லுங்கள்.

ஹக்கீம்:—அப்தல் வஹாப் ஸாயப் இங்கேதானே இருக்கிறார்? அவருக்கு உடம்பில் அசௌக்கியம் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்களே! அவரை நான் பார்க்க வேண்டும்.

ஆள்:—இங்கே ஸாயப் யாரும் இல்லையே! இது ஹிந்துக்களின் வீடல்லவா!

ஹக்கீம்:—என்னப்பா நீ சொல்வது வேடிக்கையாயிருக்கிறதே! நான் இந்தத் தெருவுக் கோடியில் ஒருவரிடம் விசாரித்தேன். அப்தல் வஹாப் ஸாயப் 144 ம் நம்பர் வீட்டில் இருக்கிறார் என்று சொன்னார். இந்தத் தெருவில் ஒரு வீட்டில் விசாரித்தேன். இந்த வீட்டைக் காட்டி, இதில் ஸாயப் குடியிருப்பதாகச் சொன்னார்கள் நீ இல்லை என்கிறாயே!

ஆள்:—நான் சொலவதை நம்பமாட்டேனென்கிறீர்களே; இங்கே ஸாயப் எவரும் இல்லை.

ஹக்கீம்:—அம்மன் கோவிலண்டை ஓர் அம்மாள் சொன்னார்களே!

ஆள்:—அம்மன் கோவிலண்டையிலா? அங்கே நீங்கள் ஏன் போனீர்கள்?

ஹக்கீம்:—அம்மன் கோவில் சந்நிதித் தெருவில்தான் என்னுடைய மருந்துக் கடை இருக்கிறது.

ஆள்:—அந்த மாதிரி உங்களிடம் சொன்ன அம்மாள் யார்?

ஹக்கீம்:—அந்தக் கோவில் தாசி.

ஆள்:—அது நிஜமல்ல. விளையாட்டுக்காக யாராவது அப்படிச் சொல்லி இருப்பார்கள்.

ஹக்கீம்:—இல்லை அப்பா, நான் அந்த அம்மாளுக்கு நாடி பார்த்து, மருந்து கொடுத்தேன். அவர்கள் என்னிடமா விளையாடுவார்கள்.

ஆள்:—இங்கே ஸாயப் யாரும் இல்லை.

ஹக்கீம்:—சரி; அப்பா, அப்படியானால், நான் போகிறேன். எனக்கா கவலை? நோயாளிக்கல்லவா கவலை இருக்க வேண்டும். அது போகட்டும். உன் முகம் ஏன் இப்படி வெளிறாயிருக்கிறது? உனக்கு இப்போது உடம்பு சரியாயில்லை. உன் கையை இப்படிக் கொடு. நாடி பார்க்கலாம்.

ஆள்:—ஆம். என் உடம்பில் கொஞ்சம் தொந்தரவு இருக்கிறது. என்னவென்று சொல்லுங்கள்—என்று கூறி தனது கையை நீட்டினான்.

ஹக்கீம் தமது கைகளிலிருந்த வஸ்துக்களைத் திண்ணையில் வைத்துவிட்டு, தாமும் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு, அவ்னையும் உட்காரச் செய்து, அவனுடைய கையைப் பிடித்து இரண்டு நிமிஷகாலம் அவனுடைய நாடியைப் பரீட்சித்துப் பார்த்துவிட்டு, "பித்த நாடி கொஞ்சம் தூக்கலாயிருக்கிறது. அதனால் கொஞ்சம் தொந்தரவு ஏற்பட்டிருக்கலாம். அதற்கு இதோ ஒரு மருந்து கொடுக்கிறேன். சாப்பிட்டால், உடனே குணம் உண்டாய்விடும். கொடுக்கிறேன் சாப்பிடுகிறாயா?

ஆள்:—கொடுங்கள்—என்றான்.

உடனே ஹக்கீம் ஸாயப் ஒரு சூரணத்தில் ஒரு சிட்டிக்கை எடுத்து அவனிடத்தில் கொடுத்து அதை வாயில் போட்டு விழுங்கச் செய்தார். அது இளம் புளிப்பாயிருந்ததாகையால், அதை அந்த ஆள் சுலபத்தில் மென்று விழுங்கிவிட்டான். இதோ ஒரு தைலம் இருக்கிறது. இது ஆக்கிராண தைலம். இதை மேல் உதட்டில் கொஞ்சம் தடவிவிடுகிறேன். சகலமான தொந்தரவுகளும் உடனே நீங்கிப் போகும்---என்று கூறி, அத் தைலத்தைக் கை விரலால் தொட்டு அவனுடைய மேல் உதட்டில் தடவி விட்டார். அது முகருவதற்கு சுவாரஸ்யமாயிருந்ததாகையால், அவன் உர் உர் என்று நன்றாக அதன் மணத்தை ஒரு நிமிஷகாலம் இழுத்தான். இழுக்கவே உடனே அவனுடைய மூளை கலங்கி சுழல வாரம்பித்தது. "மயக்கம் வருகிற மாதிரி இருக்கிறதே" என்று கூறியபடி அந்த ஆள் சுவரைப் பிடித்துக்கொண்டு சாய முயன்றான். அவனுடைய உடம்பு அப்படியே துவண்டு திண்ணையில் நீண்டுவிட்டது.

ஹக்கீம் ஸாயப், "என்ன அப்பா, உடம்பு எப்படி இருக்கிறது?" என்றார். மறுமொழி கிடைக்கவில்லை. உடனே ஸாயப் மருந்துகளை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்து, வெளிக்கதவை உள்புறத்தில் தாளிட்டுக்கொண்டு அப்பால் பார்க்க, இரண்டாவது கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. அவர் ஓசையின்றி உள்ளே சென்று, அங்கிருந்த தாழ்வாரத்தின் வழியாய்க் கூடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

அப்போது சமீபத்தில் சிலர் பேசிய குரலோசை கேட்டது. "அந்தப் போலீஸ் நாய் ஏன் பொட்டைச்சி மாதிரி வேஷம் போட்டுக்கொண்டான். அவனுடைய மண்டையை உடை" என்றான் ஒருவன்.

இன்னொருவன், "அதெல்லாம் சரியல்ல. பழுக்கக் காய்ந்த இரும்பை அவனுடைய கண்களில் சொருகுங்கள்" என்றான்.

ஹக்கீம் ஸாயப் ஓசை செய்யாமல் திருடனைப்போல் இருளில் தடவிக்கொண்டே, அவர்கள் பேசிய இடத்தை நோக்கிச் செல்லத் துடங்கினர்.

# சமய ஆராய்ச்சி

## 5 - வது அத்தியாயம்

### இந்திரன், மோக்ஷம் முதலியவை

(முன் தொடர்ச்சி)

இந்திரனுகிய வியாழனைக் குறித்து நாம் இன்னம் சில முக்கிய மான விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவைகளை நாம் விவரிக்குமுன் இன்னொரு முக்கியமான விஷயத்தை இங்கு குறிப் பிடுவோம்.

முன் அத்தியாயங்களில் நாம் கைலாசம், சுவர்க்கம் முத லியவைகளைப் பற்றி ஆராய்ந்த காலத்தில், ஒன்பது கிரகங்களின் குறிகளான புஷ்பங்களை யெல்லாம் தெரிந்துகொண்டோம். சுக்கிர னுடைய மலர் வெண்தாமரை என்றும், அது பெண் தன்மை யுடையதாகையால், அதுவே சரஸ்வதி என்றும், இந்திர சரஸ்வதி யென்றும் குறிக்கப்படுகிற தென்றும், அது பெரும்பாலும் ஸ்திரீ சம்போகத்தைத் தரும் ரதிதேவி யாதலால், புதன், ராகு ஆகியவற் றிற்குரிய வித்தை, பாடல், ஞானம் முதலிய குணங்களை சுக் கிரன் மீது சுமத்தியிருப்பது வானசாஸ்திரத்திற்கு முரணுன தென்றும் நாம் கூறி, அவ்விஷயத்தை விரிவாக விளக்கி யிருக் கிறோம்.

அந்த சந்தர்ப்பத்தில் நாம் இன்னொரு முக்கியமான விஷ யத்தைத் தெரிவிக்கவில்லை. மகா விஷ்ணுவின் பத்நியான இலக்ஷ்மி செந்தாமரை மலரில் இருப்பவள் என்று சாஸ்திரங்கள் கூறுகின் றன. பத்மாசனி, பத்மாவதி என்பன இலக்ஷ்மியின் பெயர்கள். பத்மாசனி என்னும் பெயரை, பிராம்மணர்களில் வைஷ்ணவர்கள், மாத்வர்கள் ஆகியோருடைய ஸ்திரீகள் வைத்துக்கொண் டிருக் கிறுர்கள். பத்மாவதி என்னும் பெயரை மாத்வ ஸ்திரீகளே பெரும் பாலும் வைத்துக் கொள்ளுகிறுர்கள். வைஷ்ணவ ஸ்திரீகள் பத்மா வதி என்ற பெயரை வைத்துக்கொள்வ தில்லை. இரண்டு பெயர்க

ளும் அர்த்தத்தில் சிறிதளவு வித்தியாசப்படுவதாகவும் நாம் கருத லாம். இரண்டின் வித்தியாசத்தையும் ஓர் உதாரணத்தைக்கொண்டு நாம் விளக்கலாம். நாம் நம்முடைய வீட்டில் ஒரு மணைப் பலகை யில் உட்கார்ந்திருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். நாம் எங்கே இருக்கிறோம் என்னும் கேள்விக்கு இரண்டு விதமாக நாம் மறுமொழி கொடுக்கலாம். நாம் வீட்டில் இருக்கிறோம் என்றும் சொல்லலாம்; நாம் மணைப் பலகையில் இருக்கிறோம் என்றும் சொல்லலாம். ஆனால் வீடு சகலமான பொருள்களையும் தனக்குள் அடக்கிக்கொண் டிருப்பது. மணைப்பலகை வீட்டிற்குள் அடங்கிய ஒரு சிறிய வஸ்து. ஆகையால், நாம் எங்கே வசிக்கிறோம் என்றால், வீட்டில் வசிக் கிறோம் என்று சொல்வோமே யன்றி மணைப்பலகையில் வசிக் கிறோம் என்று சொல்லமாட்டோம். பத்மாசனி என்பது செந் தாமரைப் பூவை ஆசனமாக் உடையவள் என்ற பொருளைத் தரு கிறது. இங்கே செந்தாமரை ஒரு மணைப்பலகையின் நிலைமைக்கு சமமாகிறது; பத்மாவதி என்பது, செந்தாமரைப் பூவில் வசிப்பவள் என்ற பொருளைத் தருகிறதாகையால், அது வீட்டிற்கு சமமாகி றது. முன்னது, இலக்ஷ்மிக்கு மணையைத் தவிர இன்னம் இதர இடங்களு மிருக்கின்றன என்ற கருத்தைத் தருகிறது; பின்னது, இலக்ஷ்மிக்கு செந்தாமரை மலரே வீடாகையால், அதைத் தவிர வேறு இடம் இல்லை என்ற கருத்தைக் கொடுக்கிறது.

செந்தாமரை என்பது எதைக் குறிக்கிறது என்பதை நாம் தெரிந்து கொண்டால், இந்த வித்தியாசத்தின் நயம் நன்கு விளங்கும்.

நாம் வான சாஸ்திரத்தின்படி கிரகங்களுக்குரிய புஷ்பங் கள் இன்னின்னவை என்று முன்னரே தெரிவித்ததில் செந் தாமரை என்பது சூரியனுக்குரிய மலர் என்று கூறியிருக்கிறோம். வான சாஸ்திரத்தில் சூரியனுடைய நிறம் சிவப்பு என்றும் சொல் லப்பட் டிருக்கிறது. எனவே, இலக்ஷ்மியோடு சம்பந்தப் படுத்தப் படுகிற செந்தாமரை மலர் சூரியன் என்றே நாம் அநுமானிக்க வேண்டிய தாகிறது. இலக்ஷ்மி புருஷாம்சமானவள் என்றும் நூல் கள் கூறுகின்றன; ஏனென்றால் சூரியன் புருஷாம்சம் வாய்ந்தவன். அதனால் இலக்ஷ்மி அவ்வாறு குறிக்கப்படுகிறாள். இப்போது, பத்மா சனி, பத்மாவதி என்ற பெயர்களில் உள்ள செந்தாமரைக்கு பதி லாக சூரியனை வைத்துப் பார்த்தால், இரண்டு பெயர்களுக்கும்

உள்ள வித்தியாசம் எப்படிப்பட்டது என்பது உடனே விளங்கிப் போம். சூரியனை ஆசனமாக வுடையவள் என்றால், இந்த எல்லை யற்ற ப்ரபஞ்சமாகிய வீட்டில் சூரியனாகிய மணையின்மேல் இலக்ஷ்மி இருக்கிறாள் என்ற பொருளை நாம் கொள்ளலாம். சூரியனைத் தவிர ப்ரபஞ்சத்தின் இதர பாகங்களும், அவளுடையவை, அவளுடைய பழக்கத்தில் இருப்பவை என்ற பொருளை அது தரும். சூரியனில் வசிப்பவள் என்ற பொருள், அதைத் தவிர இதர பாகத்தில் இலக்ஷ் மிக்கு வாச சம்பந்தமில்லை யென்ற பொருளைத் தரும்.

நாம் ஏற்கனவே இன்னொரு முக்கியமான விஷயத்தைத் தெரிந்துகொண் டிருக்கிறோம். அதாவது, சூரியனுக்கு அதி தேவதை சிவன் என்பது. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களில் அழித்தல் தொழிலே சிவனுக் குரியது என்று புராணங்கள் கூறுகின்றன. சகலமான செல்வங்களையும் கொடுப்பவளான இலக்ஷ்மியே அழித்தல் தொழிலை நடத்தும் சிவன் என்பது எப்படிப்பொருந்தும் என்னும் கேள்வி உண்டாவது சக ஜமே. சகலமான செல்வங்களும் சூரியனிடத்தி லிருந்தே உண்டா கின்றன வென்பது பிரத்தியக்ஷமாய்த் தெரியும் விஷயம். அது அக்னிமயமானதா யிருப்பதால், அது, கிட்டநெருங்கினால் அழிக் கும் தன்மை உடையது என்பதும் நிதரிசனமாகத் தெரியக் கூடி யதே. வான சாஸ்திரத்தின்படியும் சூரியன் குரூர சுவபாவ முடைய வன் என்று கருதப்படுகிறான். சூரியன் மூலக்கோளாதலால், சகல மான தாதுக்களும் உற்பத்தியாவதற்கு சூரியன் மூலாதாரமான தென்பதும் தெரிகிறது. சரீரகாரகன், அல்லது காயன் என்று சூரி யன் குறிக்கப்படுகிறது. அதாவது, சகலமான ஜீவ ஜெந்துக்களின் சரீரங்களையும் சூரியன் பாதுகாப்பவன். காயத்திரி தேவி சூரியனுக் குள் இருப்பதாகக் கருதப்படுகிறாள். ஸ்திரீ, என்பது திரி என்று மாறுவதுண்டு. 'திரு' என்பது சகலமான தெய்விகச் செல்வத் தையும் குறிக்கும் சொல். அதை யுடையவர் திரி. திரி என்றசொல் ஆணையும் குறிக்கும், பெண்ணையும் குறிக்கும். திரு என்பது திரி என்று மாறி, இதர பாஷைகளில் ஏராளமாய்ப் பிரயோகப்பட்டிருக் கிறது. உதாரணமாக, பாதிரி என்ற சொல்லை நாம் எடுத்துக் கொள்வோம். 'பா' என்பது சநியைக் குறிக்கும் சொல். சநி இர வில் தந்தையாதலால், 'பா' என்பது தந்தையைக் குறிக்க உபயோ கிக்கப்படுகிறது. பாதிரு (Father), பாதிரி என்பன தந்தையாகிய

திருவாளர் என்ற பொருளைத் தருகிறது. அதேபோல, 'மா' என்பது சந்திரனைக் குறிக்கிறது. அது இரவில் 'தாய்' ஆகையால், மாதிரு (Mother), மாதிரி என்பன தாயாகிய திருவருட்செல்வியைக் குறிக்கின்றன. தாயின் மீது மோகம் கொள்கிறவன் மாதிரி காமி என்று குறிக்கப்படுகிறான். இதேபோல 'இரு' என்ற சொல்லும் 'இரி' என்று பிரயோகிக்கப்படுகிறது. 'இரு' என்பது பெரிய, அல்லது, இரட்டிப்பு மரியாதைக்குரிய என்னும் பொருளைத் தருகிறது. 'இரி' என்றால் பெரியவர் என்ற கருத்தைக் கொடுக்கிறது. கன்னடத்தில், "ஏன் பெரியவரே?" என்பதற்கு "ஏனிரீ?" என்கிறார்கள். ஏன், இரீ என்பன ஏனிரீ என்று புணர்ந்திருக்கின்றன.

இது நிற்க, இனி காயத்திரி என்பதை கவனிப்போம். காயம் என்பது சரீரம், திரி என்பது திருவருளைக் கொடுக்கும் ஸ்திரீ. காயத்திரி என்பதற்கு ப்ரபஞ்சத்தில் அடங்கிய சரீரங்களையெல்லாம் காப்பவளான இலக்ஷ்மி என்பது பொருள். வடசொல் என்று கருதப்படும் ஸ்ரீ என்பதற்கு, இலக்ஷ்மி, பாக்கியம் என்னும் அர்த்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ப்ரபஞ்சத்தில் நமக்குக் கிடைக்கும் செல்வமெல்லாம் சரீரங்களை போஷிப்பவையாகையால் அதற்கு அவசியமான சகல தாதுக்களுக்கும் மூலாதாரமாயிருப்பவள் சூரியாசனத்தில் இருக்கும் காயத்திரி தேவியாகிய இலக்ஷ்மி. இலக்ஷ்மியை ஸ்ரீதேவியென்றும் குறிப்பதுண்டு. மூத்தவள் மூதேவி என்றும், இளையவள் ஸ்ரீதேவி என்றும் குறிக்கப்படுகிறார்கள். எல்லோரும் உயிரற்றுத் துயிலும் காலமாகிய இரவு மூதேவி என்றும், சூர்ய தேஜஸோடு விளங்கும் உயிர்க் காலமாகிய பகல் ஸ்ரீதேவி என்று குறிக்கப்பட்டிருக்கலாம். இலக்ஷ்மியை பின்னைப்பிராட்டி என்றும் குறிப்பதுண்டு. பின்னால் உற்பத்தியாகும் நாயகி என்பது அதன் கருத்து. 'இ' என்ற எழுத்து இலக்ஷ்மியைக் குறிப்பது என்று நூல்கள் சொல்லுகின்றன. இதை வைத்துக்கொண்டு பார்த்தால், முக்கியமான ஒரு மர்மம் நமக்கு விளங்குகிறது. வடசொல்லாகிய ஸ்ரீ என்பதை நாம் எடுத்து ஆராய்வோமானால், அதன் வடிவம் புதிதாகத் தோன்றினாலும், அதன் பத அர்த்தம் நமக்கு ஆச்சரியத்தை உண்டாக்குவதாயிருக்கும். ஸ்ரீ என்ற சொல்லை நாம் உச்சரிக்கும்போது, அது சிறி என்று த்வனிக்கிறது. சிறி என்ற சொல் சிறு+இ என்னும் சொற்களால் ஆனது. 'இ' என்பது இலக்ஷ்மியைக் குறிப்பது. இளையவளான இலக்ஷ்மி

சிறிய இ, அல்லது, சிறு இ என்று குறிக்கப்படுகிறுள். அது ஸ்ரீ என்ற ஒரு புதிய வடிவத்தில் காணப்படுகிறது.

சிவனை ஸ்ரீகண்டன் என்ற பெயரால் குறிப்பதுண்டு. அதாவது, இலக்ஷ்மியைத் தொண்டையில் வைத்திருப்பவன் என்பது அதன் கருத்து. சிவன் என்பது சூரியனுடைய அதிதேவதையானுல், நமக்குத் தெரியும் சூரியவட்டம் அவனுடைய வாய் என்று கருதப் படுகிறது; தொண்டை வாய்க்கு அடுத்தாற்போல் உள்பக்கத்தில் இருக்கும் உறுப்பு. ஆகையால் சூரியவட்டத்திற்குள் இருக்கும் செல்வமே இலக்ஷ்மி என்ற கருத்தை ஸ்ரீகண்டன் என்ற பெயர் காட்டுகிறது.

எனவே, சூரியவட்டத்தை நாம் ஸ்ரீவாய் என்றும் குறிக்கலாம். அதாவது, இலக்ஷ்மியின் வாய், அல்லது, இலக்ஷ்மியின் செல்வம் நமக்கு வரும் வாய் என்பது அதன் கருத்து.

'ஸ்ரீ' என்பதை 'சி' என்று மாற்றி எழுதுவதும் உண்டு. ஸ்ரீ வில்லிபுத்தூர் என்பதை சீ வில்லிபுத்தூர் என்று குறிக்கிறுர்கள். ஸ்ரீமான் என்பது சீமான் என்று மாறுகிறது. ஸ்ரீநிவாசன் என்பது சீநிவாசன் என்றுகிறது. ஸ்ரீதாய் என்பது சீதா(ய்) என்று மாறுகிறது. அதுபோல ஸ்ரீவாய் என்பது சீவாய் என்று மாறு கிறது. வாய் என்பது ஆதிகாலத்தில் 'வா' என்றே பழக்கத்தில் இருந்திருக்கிறது. ஆகையால் சீவாய் என்பது சீவா என்று இருந் திருக்கிறது. தெலுங்கில் அரிச்சுவடி கற்க ஆரம்பிக்கும்போது, ஓம் நா மஹ, சீவா யஹ என்றே ஆரம்பிக்கிறுர்கள். இதில் சீவாய் என்ற சொல்லே சிவனைக் குறிக்க உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அது சீவா என்றும், சுருக்கமாய் சிவா என்றும் பழக்கத்தில் இருந்திருக் கிறது. இதற்கு இலக்ஷ்மியின் வாய், அல்லது, திருவாய் என்பது கருத்து. வைஷ்ணவர்களுடைய தமிழ்வேதம் திருவாய்மொழி என்று குறிக்கப்படுகிறது.

இவற்றுல் நாம் தெரிந்துகொள்வதென்னவென்றுல், சைவர்கள், சூரியனுக்குள்ளிருக்கும் செல்வத்தையும், சக்தியையும் 'சிவா' என்று கருதி, அதற்குப் பக்கத்தில் உலாவுவதும், விஷ்ணு அம்சம் பொருந்தியதுமான புதனை சம்சாரமாக்கி, அதைப் பார்வதி என்று குறிக்கிறுர்கள். சூரியனுடைய குரூரத் தன்மையாகிய அழிக்கும் குணத்தை அதற்குப் பிரதான அம்சமாக எடுத்துக் கொண்டிருக் கிறுர்கள்.

வைஷ்ணவர்கள் சூரியனுக்குள் இருப்பது இலக்ஷ்மி என்று கருதி, அதை வியாழ பகவானுக்கு அந்தராத்மாவான நாராயண னுக்கு பத்நியாக்கி யிருக்கிறார்கள். சூரியனுடைய குரூர குணமான அழிக்கும் தன்மையை அவர்கள் பிரதானமாக வழிபடாமல், அதி லிருந்து வரும் நன்மைகளை மாத்திரம் உருவகப்படுத்தி யிருக்கிறார் கள். சூரிய நாராயணன் என்று ஸ்மார்த்தர்கள் பெயர் வைத்துக் கொள்ளுவார்கள்; வைஷ்ணவர்கள் அதே கருத்தை இலக்ஷ்மி நாரா யணன் என்ற பெயரால் குறிக்கிறார்கள்.

சூரியன் காலபுருஷனுடைய மார்பு என்று கருதப்படுகிறதாக நாம் ஏற்கனவே தெரிந்துகொண் டிருக்கிறோம். மகாவிஷ்ணு இலக்ஷ்மியை மார்பில் தரித்துக்கொண் டிருக்கிறார் என்பது அதையே குறிக்கிறது. மாரி அம்மன் என்பது மழைக்கோளாகிய சுக்கிரனைக் குறித்தாலும் குறிக்கலாம், அல்லது, மார்பில் உள்ள சூரிய லக்ஷ்மியைக் குறித்தாலும் குறிக்கலாமென்று நாம் முன்னே ரிடத்தில் குறித்தோம். ஆவணி மாதத்தின் இராசி சிங்கராசி. சூரி யன் சிங்க ராசியில் ஆட்சி புரிபவன். மாரியம்மன் கோவில்களில் ஆவணி மாதத்திலேயே வருஷ உற்சவம் கொண்டாடப்படுகிறது. அதுவுமன்றி ஞாயிற்றுக் கிழமைகளிலேதான் அம்மன் விசேஷ மாய்க் கொண்டாடப் படுகிறது அம்மனுடைய தேர் முதலியவை களும் ஞாயிற்றுக் கிழமையிலேதான் இழுக்கப்படுகின்றன. ஞாயிற் றுக்கிழமை சூரியனுடைய தினம். முக்கியமாய் கண்களை இழந்த வர்கள், வைசூரி நோயால் மெலிந்தவர்கள் முதலியோரே மாரியம்ம னுடைய கிருபையை நாடுகின்றனர். இவைகளுக்கும் சூரியனுக்கும் நெருங்கிய சம்பந்த மிருக்கின்றன. இக்காரணங்களால் மாரி அம்மன் என்பது அநேகமாய் சூரியனைத்தான் குறிக்கலா மென்ற அநுமானம் ஏற்படுகிறது.

இலக்ஷ்மி என்பதைத் தமிழில் இலக்குமி என்று மாற்றி எழுதுவது வழக்கம். கும்மி, குமி என்பது இளைய நங்கை என்ற பொருளைத் தரும். சிறுமிகள் கை கொட்டிப் பாடிக்கொண்டு சுற்றிச் சுற்றி வருவது 'கும்மியடித்தல்' என்று குறிக்கப்படுகிறது. அதாவது, சிறுமியர் கைகளை அடித்துக்கொண்டு பாடுதல் என்பது அதன் கருத்து. கும்மி என்பதன் சுருக்கமே குமி என் பது. இலக்குமி என்றால், இல்லத்தின் இளையவள் என்பது கருத்து. இந்த ப்ரபஞ்சத்தின் கோவாகிய கடவுளுக்கு இந்த ப்ரபஞ்சமே

இல்லம். பூலோகத்தில் உள்ள அரசர்களுக்கெல்லாம் மேலான அரசனுன கடவுள் பெருமான் என்ற பெயரால் குறிக்கப்படுகிருன். பெருமான் என்பதற்கு பெரிய அரசன் என்பது கருத்து. அத்தகைய பெரிய கோவிற்கு இந்த ப்ரபஞ்சமே இல்லம். அந்த இல்லத்தின் இளைய நங்கை இல்லக் கும்மி, அல்லது, இலக்குமி என்று குறிக்கப்படுகிருள்.

இவ்வாறு இலக்குமி என்பது சரியான கருத்தையே தருகிறதாலும், அது இலக்ஷ்மி என்ற சொல்லில் இருந்து மாறிய சொல் அல்லவென்று நாம் துணிந்து கூறலாம். தமிழின் எழுத்தான 'ழ' என்பதும், வடசொல்லின் எழுத்தான 'ஷ' என்பதும் ஒரே எழுத்துதான். உதாரணமாக, வடமொழியில் மேஷம் என்பதற்கு ஆடு என்பது பொருள். தமிழில் மேழம் என்பது ஆட்டைக் குறிக்கிறது. விஷயம் என்பது தமிழில் விழயம் என்ருகிறது. விழைதல் என்ருல் விரும்புதல் என்பது பொருள். 'விழயம்' என்ருல், விரும்பத்தக்கது என்ருகிறது. விரும்பத்தக்கது எதுவோ அதுவே விஷயம். தமிழில் நிழற்று என்பதற்கு 'சொல்லப்பட்டது' என்பது பொருள்; அது நிஷத்து என்று வடமொழியில் இருக்கிறது (உதாரணம் உபநிஷத்து.) ஒன்ருேடு ஒட்டிக் கொண்டு அதை இழுப்பது ஈஷணம் என்று குறிக்கப்படுகிறது. இவ்வாறு தென் மொழியின் 'ழ' காரமும், வடமொழியின் 'ஷ' காரமும் ஒன்றே தவிர வேறல்ல.

வடமொழியில் ஓலைகளில் எழுதும் சௌகரியத்திற்காக சிலகூட்டெழுத்துக்களை சுருக்கமாய் எழுதும் பொருட்டு அநேக யுக்திகளை அநுஷ்டித்திருக்கிருர்கள். கரகம் என்ற சொல்லில், க, ர, என்ற ஒவ்வொன்றிலும் உள்ள உயிரெழுத்தான அகாத்தை ஒரே இடத்தில் போட்டு 'க்ர' என்று மாற்றி, க்ரகம் என்று எழுதியிருக்கிருர்கள். க்ரகம் என்ருல் வீடு, ஆகாயத்தில் உள்ள கோள் முதலியவற்றைக் குறிக்கிறது. பாமர ஜனங்கள் கரகம் எடுத்து ஆடுகிருர்கள். அது ஆகாயத்தில் உள்ள கோள்களில் ஒன்றைத் தலைமேல் சுமந்து கொண்டாடுவதைக் குறிக்கிறது. சரவணம் என்பதை ச்ரவணம் என்றும், வரதர் என்பதை வ்ரதர் என்றும் எழுதுவார்கள். அதேபோல, வடமொழியின் க்ஷ(க்ஷ)என்ற சொல் தமிழில் க்ழ ஆகிறது. இலக்ஷ்மி என்பதை நாம் விரிவாய் எழுதினுல் அது இலக்ழமி (இலக்கிழமி) என்று மாறுகிறது. கிழமை என்ருல் சொந்தம் என்பது பொருள். வபதானவரை

நாம் கிழவர் என்று குறிக்கிறோம். அதாவது, அவர்களே வீட்டின் சொந்தக்காரர் என்பதைக் குறிக்கும் மரியாதைப் பாங்கில் வயதான வர் கிழவர் என்று குறிக்கப்படுகிறார்கள். கிழவர் என்பதில் உண்மையில் வயதின் முதிர்ச்சியைக் காட்டும் குறிப்பே இல்லை. ஞாயிற்றுக் கிழமை, திங்கள்கிழமை என்பவை முறையே சூரியனுக்கு சொந்தமானது, சந்திரனுக்கு சொந்தமானது என்ற அர்த்தத்தையே தருகிறது. ஆதிகாலத்தில் அரசர்கள் 'கிழார்' என்று குறிக்கப்பட்டனர். ரஷ்யா தேசத்து சக்ரவர்த்தியின் பெயர் கிஸார் (Czar) அது கிழார் என்பதின் திரிபு. பர்ஷியதேசத் தரசர்கள் கிஷார்க் கிஷேஸ் (Xerxes) என்று பெயர் வைத்துக்கொண் டிருந்தார்கள். அதாவது, அரசர்களுக் கெல்லாம் அரசர் என்பது அதன் பொருள்.

'மாக்ஷிமை' என்பது தமிழில் மாக்கிழமை என்று மாறும். மாக்ஷிமை பொருந்திய ஐயா என்பதற்கு, சகல உரிமையும் உடைய தலைவன் என்பது கருத்து. மேல்நாட்டார் மாக்ஷ் முல்லர் (Max Muller) என்று பெயர் வைத்துக்கொள்ளுகிறார்கள். அது மாக்கிழ முல்லர் என்றாகிறது. முல்லர் என்பது முல்லைப் பூவிற்குரிய வியாழனாகிய சுவணபதியைக் குறிக்கிறது. சகல உரிமைகளையும் உடையவராகிய சோணாசலம் (வியாழன்) என்பது அதன் அர்த்தம்.

அதேபோல இலக்கிழமி என்பது, வீட்டின் சொந்தக்காரி என்ற பொருளைத் தருகிறது. வீடு என்பது ப்ரபஞ்சம், மோக்ஷ வீடு ஆகிய யாவும் அடங்கியது. அதன் கிழமியே இலக்கிழமி. அது இலக்ஷ்மி என்று சுருக்கமாய் எழுதப்பட்டிருக்கிறது. இலக் கிழமி என்பதற்கும், இலக்குமி என்பதற்கும் வித்தியாசம் இருப் பது இப்போது நன்கு விளங்கும். ஒரு குடும்பத்தில் தாய்க்கும், மகளுக்கும் என்ன வித்தியாசமோ, அந்த வித்தியாசம் இவ்விரண் டிற்கும் இருப்பதைக் காணலாம். வீட்டிற்கு உரிய சொந்தக்காரி, வீட்டின் இளைய நங்கை என்னும் சொற்களில் எது சிறப்பானது என்பது தானாகவே விளங்குமாதலால், அதை நாம் மேலும் விளக்குதல் மிகையாகும்.

அநந்தமாய்ப் பரவி கிடக்கும் கடவுளுடைய இல்லத்தின் கிழமியாகிய தாய்க்கு, செந்தாமரை போல் இருக்கும் சூரியன் ஓர் ஆசனம். அவளுடைய பாக்கியத்தைப் பொழியும் சூரிய வட்டமாகிய வாயே ஸ்ரீவாய் அல்லது சிவாய். அதுவே சிவா என்று குறுகி இருக்கிறது.

# தேகாரோக்கிய தத்துவம்

## அத்தியாயம்—6

## IV. உதிரமய கோசம்

### 1. இரத்தம்

மனித சரீரத்தில் இரத்தம் எவ்விடத்தில் உற்பத்தியாய், குழாய்களின் மூலம் எந்தெந்த வழிகளால் பரவி, எவ்விதமான வேலையைச் செய்கிறது என்பனபோன்ற விவரங்களை நாம் உதிரமய கோசம் என்னும் பகுதியில் தெரிந்துகொள்ளுகிறோம்.

உதிரமய கோசத்தைக் காட்டும் படம் ஒன்று தமிழ்ப் பெரு மாட்டியின் முதல் ஆண்டில் வெளியான தேகாரோக்கிய தத்துவம் 16-வது பக்கத்திற்குப் பின்னால் சேர்க்கப்பட் டிருக்கிறது. அதில் நம் சரீரத்தில் மார்பெலும்புக் கூண்டிற்குள் இடது பக்கத்தில் ஒரு சிறிய வாழைப் பூவைப்போல் காணப்படும் உறுப்பே நமது இரு தயம். இருதயமே நமது உயிர்நிலை என்பதும், அது நின்று போனால் உடனே நம் உயிர் நின்றுபோய் விடும் என்பதும் சர்வசாதாரண மாய் எல்லோருக்கும் தெரிந்த விஷயங்கள்.

இருதயத்திலிருந்து ஒரு விதமான குழாய்களின் மூலம் இரத் தம் நம் உடம்பு முழுதும் பரவி, இன்னொருவிதமான குழாய்களின் மூலம் திரும்பி மறுபடியும் இருதயத்திற்கே வந்து, திரும்பத் திரும்ப போய் வந்து பிரதக்ஷிணம் செய்துகொண்டே இருப்பதனாலேயே நம் உயிர் நிலைத்திருக்கிற தாகையால், இரத்த ஓட்டமே ஜீவாதார மான அம்சம். ஆகையால் நாம் முதலில் இரத்தம் என்பது என்ன வென்பதைத் தெரிந்துகொண்டு, அதற்குமேல், அதோடு சம்பந்தப் படும் உறுப்புகளை யெல்லாம் கவனிப்போம்.

நாம் சாதாரணமாகப் பார்க்கையில் இரத்தம் சிவப்பு நிற மானதா யிருக்கிறதானாலும், அதை நாம் பூதக்கண்ணாடியின் உதவி யால் பார்ப்போமானால், நிறமற்ற ஊன் தண்ணீர்போன்ற ஒருவித ரஸத்தில், திவலை திவலையாகத் தோன்றும் செம்மஞ்சள் நிறமான ஒரு வஸ்து ஏராளமாய் மிதந்துகொண் டிருப்பதை நாம் காணலாம். இரத்தத்தின் அடிப்படையான ஷை ரஸம் இங்கிலீஷில் பிளாஸ்மா (Plasma) என்று குறிக்கப்படுகிறது; அதில் பல வஸ்துக்கள்

கரைந்திருக்கின்றன வாகுலும், அதற்கு சுயமாகவே எவ்வித நிறமு மில்லை. அது பார்வைக்கு தெளிவாய் இருப்பதன்றி, ஜலத்தைவிடத் தடிப்பானதா யிருக்கிறது. அதற்குள் கணக்கற்று நிறைந்து கிடக்கும் செம்மஞ்சள் நிறமான திவலைகளின் நிறமே ஷை ரஸத்திலும் பிரதிபலித்துத் தோன்றுகிறதாகையால், சாதாரணப் பார்வைக்கு எல்லாம் சிவப்பாய்த் தோன்றுகின்றன.

(i) பிளாஸ்மா என்னப்படும் தண்ணீரில் திவலை திவலையாய் நிறைந்திருக்கும் வஸ்து (ii) கார்பஸில்ஸ் (Corpuscles) என்று குறிக்கப் படுகிறது. அவற்றிலும் இரண்டுவிதமான கார்பஸில்ஸ் இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். சில கார்பஸில்ஸ் செம் மஞ்சள் நிறமுடையவை, சில வெள்ளையா யிருப்பவை. செம்மஞ் சள் நிறமுடையவைகளை சுருக்கமாய் சிவப்பு கார்பஸில்ஸ் என்றே குறிப்பது வழக்கம். அவைகள் 500 இருந்தால், வெள்ளை கார்ப ஸில் ஒன்று இருக்கும்.

## (i) சிவப்பு கார்பஸில்ஸ் (The Red Corpuscles)

சிவப்பு கார்பஸில் ஒவ்வொன்றும் வட்ட வடிவமாயும், இரண்டு பக்கங்களிலும் ஏந்தலான குழிவுக ளுடையதாயும் இருக் கும்; அதாவது, ஓரங்களில் தடிப்பாயும், நடுவில் இலேசாயும் இருக்கும் காசுகள் எப்படியோ அப்படியே சிவப்பு கார்பஸில்ஸ் இருக்கும். ஓர் அங்குலத்தை 3200 பகுதிகளாய்ப் பிரித்தால், எவ் வளவு நீளம் தேறுமோ, அவ்வளவே, ஒரு சிவப்பு கார்பஸில் வட் டத்தின் சுற்றளவு இருக்கும். அந்த சுற்றளவில் கால் பங்கே, கார்பஸிலின் கனம்.

இரத்தத்தில் சிவப்பு கார்பஸில்ஸ் இருப்பது கி. பி. 1674-ம் வருஷத்திற்கு முன்பு வரையில் கண்டுபிடிக்கப்படவில்லை; அதற்குப் பிறகே கண்டுபிடிக்கப் பட்டது. ஒரு குண்டூசியின் தலை எவ்வளவு பருமனிருக்கிறதோ அவ்வளவு பருமனுள்ள இரத்தத்தில் சுமார் 50 லக்ஷம் கார்பஸில்ஸ் இருக்கலாமென்று கணக்கிட்டுருக்கிறார்கள். மோரை விட வெண்ணெய் அதிக கனமானதா யில்லாமையால், அது மோருக்குள் மிதப்பதை நாம் காண்கிறோம். அதேபோல, பிளாஸ்மா ரஸத்தைவிட கார்பஸில்ஸ் அவ்வளவு அதிக கனமா யில்லாமையால், அவைகள் அடியில் படியாமல் மிதந்துகொண்டே இருக்கின்றன. நாம் பூதக் கண்ணாடியால் பார்த்தால், காசுகளை நாம் ஒன்றன்மே லொன்றாய் அடுக்கி வைப்பதுபோல, சிவப்பு கார்ப ஸில்ஸ் பெரும்பாலும் அடுக்கடுக்காய்ச் சேர்ந்தே நகரும் சுவபாவ முடையவையாய்த் தோன்றும். சில விளிம்புகளின்மேல் உருண்டு போகும். சில சப்பையாகவே காணப்படும். அவைகள் மிருது வாகவும், சுலபத்தில் துவண்டு கொடுப்பதாகவும் இருக்குமாதலால்,

இரத்த ஓட்டத்தில், ஒன்றோடொன்று மோதும்போது அவைகளின் வடிவம் பல மாதிரியாக மாறும்; ஆனாலும், இடைவெளி ஏற்படும்போதெல்லாம் அவை தமது இயற்கையான வட்ட வடிவமாகவே மாறிப் போம். ஒரு கார்பஸிலின் சுற்றளவை விட சிறியதாயிருக்கும் இடைவெளிக்குள்கூட கார்பஸில் நுழைந்து செல்லும். சிவப்பு கார்பஸில் பஞ்சுபோல இலேசாயும், சுலபத்தில் வளைந்து கொடுக்கக் கூடியதாயுமிருக்கும் ஒரு வஸ்துவால் ஆனது. அது ஸ்டிரோமா (Stroma) என்று குறிக்கப்படுகிறது. அதற்கு சுயமாகவே நிறம் இல்லை. அதன் பின்னல்களுக்குள் வைக்கப்பட்டிருக்கும் இன்னொரு வஸ்துவே நிறத்தை உண்டாக்குவது. அது ஹேமோக்ளாபின் (Haemoglobin) என்று குறிக்கப்படுகிறது. இது ஆக்ஸிஜன் என்று குறிக்கப்படும் பிராண வாயுவைப் பிடித்து இழுத்துக்கொள்ளும் சக்தி வாய்ந்தது. நாம் சுவாசிக்கும் பிராண வாயு நம்முடைய மார்பிற்குள் இரண்டு பக்கங்களிலும் அமைந்துள்ள சுவாசாசயப் பைகளுக்குள் போகிறது. அங்கு பரவி இருக்கும் இரத்தக் குழாய்களில் உள்ள ஹேமோக்ளாபின் என்னும் வஸ்து அங்கு வரும் பிராண வாயுவைக் கவர்ந்து எடுத்துக் கொண்டு இரத்தத்தின் மூலம் உடம்பு முழுதிலும் சென்று உபயோகப்படுத்துகிறது. அந்த நிலைமையில் அது ஆக்ஸி ஹேமாக்ளாபின் (Oxyhaemoglobin) என்று குறிக்கப்படுகிறது. அப்போது அது பிரகாசமான சிவப்பு நிறமுடையதா யிருக்கும். அதனிடம் உள்ள பிராண வாயு தீர்ந்து போனால், அது மறுபடி ஹேமாக்ளாபின் நிலைமையை அடைந்துவிடும்.

சிவப்பு கார்பஸிலின் உள்ளே இருக்கும் ஹேமாக்ளாபின் என்னும் நிற வஸ்துவை நாம் விலக்கிவிடலாம். அப்படி விலக்கிய பிறகு, ஸ்டிரோமா என்னும் அதன் வீடான பஞ்சுப் பின்னல் மாத்திரம் தனிப்பட்டு நிற்கும். அந்த நிலைமையில் அதற்கு எவ்வித நிறமும் இல்லை. இரத்தத்தோடு நாம் தண்ணீரைக் கலந்தால், ஸ்டிரோமா என்னும் பஞ்சுப்பின்னல் தண்ணீரை இழுத்துக்கொண்டு உருண்டையாய் உப்பிக்கொள்ளும். அந்த இரத்தத்தில் சிறிதளவு உப்பைச் சேர்த்தால், தண்ணீர் பிரிந்து வந்துவிடும்; ஸ்டிரோமா மறுபடி சுருங்கிப்போகும்.

## (ii) வெள்ளை கார்பஸில்ஸ் (The White Corpuscles or Leucocytes.

இவைகள் வட்டமான காசுவடிவமா யிராமல் தாறு மாறான வடிவமுடையவையாயும், பலவகையான பருமன் உடையவையாயும் இருக்கும். வெள்ளைக் கார்பஸிலின் சராசரி சுற்றளவு ஓர் அங்குலத்தில் 2500ல் ஒருபங்கு நீளம் இருக்கும். வெள்ளை கார்பஸில்ஸ்,

பெரும்பாலும், சிவப்பு கார்பஸில்ஸை விட பெரியவையாகவே இருக்கும். சில சம அளவுடையவையாகவும், சில சிறியவையாயும் இருக்கும். சில உருண்டையா யிருக்கும்; அவற்றின் வஸ்து முத்து முத்தாய் இருப்பதுபோலத் தோன்றும். சிலவற்றின் வடிவம் மாறுதலடைந்து கொண்டே இருக்கும். சிவப்பு கார்பஸில்களுக்கும் வெள்ளை கார்பஸில்களுக்கும் நிறம் வடிவம் முதலிய வற்றைத் தவிர வேறு சில முக்கியமான வித்தியாசங்களும் இருக்கின்றன. சிவப்பு கார்பஸில்ஸ் இதர வஸ்துக்களால் நெருக்கப்பட்டு அதனால் வளைந்து கொடுத்து வேறு வடிவங்களை அடைந்தாலும், அவை மறுபடி தமது பழைய வடிவத்தை அடைந்துவிடும். ஆனால், வெள்ளை கார்பஸில்ஸ் தாமாகவே பலவிதமாக மாறிப் போகின்றன. அதுவுமன்றி, அவற்றில் பிசுக்கு அதிகமிருப்பதால், அவை அங்கங்கு நிலைத்து நிற்கின்றன. பிளாஸ்மா எங்கெங்கு கொண்டு போகிறதோ அங்கு சிவப்பு கார்பஸில்ஸ் போகின்றன வன்றி, சுயேச்சையாய்ப் போகும் தன்மை சிவப்பு கார்பஸில்ஸ்களுக்கு இல்லை. ஆனால் வெள்ளை கார்பஸில்ஸ்கள் தாமாகவே ஓரிடத்திற்குப் போகவும், வடிவத்தை மாற்றிக்கொள்ளவும் கூடியவையா யிருக்கின்றன. வெள்ளை கார்பஸில்ஸ் சில சமயங்களில் இரத்தக் குழாயை விட்டு வெளியிலேயே வந்துவிடுமாம். சில சமயங்களில் அவற்றின் ஒரு பாகம் இரத்தக் குழாய்க்குள்ளும், ஒரு பாகம் வெளியிலும் இருக்குமாம். அவை இரத்தக் குழாயை விட்டு வெளியில் வந்த பிறகு பார்த்தால் இரத்தக் குழாயில எவ்வித துவாரமும் இராதாம். அவை எப்படித்தான் வெளியில் வந்தனவோ என்னும் மர்மம் கண்டுபிடிக்கக் கூடாத விந்தையாக இருக்குமாம். இந்த மாதிரி வெள்ளை கார்பஸில்ஸ் சுயேச்சையாய் இயங்குவது அமைபாய்ட் (Amaeboid) என்று குறிக்கப்படுகிறது. ஒவ்வொரு வெள்ளை கார்பஸிலும் பிரத்யேகமான உயிருடைய ஒரு தனி ஜெந்துபோல் சம்பூர்ணமான மூலாதார உறுப்பாய் அமைந்திருக்கிறது. இது களி, அல்லது, கூழ்போல் இருக்கும் ஒருவித வஸ்துவால் அமைந்திருக்கிறது. அது இங்கிலீஷில் புரோடோப்ளாஸம் (Protoplasm) என்று குறிக்கப்படுகிறது. சிவப்பு கார்பஸில்களின் கட்டிடமான ஸ்டிரோமாவும், வெள்ளை கார்பஸிலுடைய கட்டிடமான புரோடோப்ளாஸமும் வெவ்வேறு வஸ்துக்களால் ஆயிருக்கின்றன. புரோடோப்ளாஸம் என்னப்படும் ஜீவ அணுவு, மணிகள் அடர்ந்த ஒரு கதிர்போல் இருக்கும். அதற்குள் என்ன இருக்கிறதென்பது தெளிவாய்த் தெரியாது. தண்ணீரையாவது, காடியையாவது அதில் கொஞ்சம் விடுத்தால், அதன் உள்ளீடு தெளிவாய்த் தெரியும். அதன் உள்புறத்தில் தடிப்பாகவும், அழுத்தமாகவும் இருக்கும் ஓர் உறுப்பு நன்றாகத் தெரியும். அது நூக்ளியஸ் (Nucleus) என்று குறிக்கப்படுகிறது. அதை அந்த ஜீவ அணுவின்

உயிர்நிலை என்று நாம் கருதலாம். இவ்விதமான நூக்ளியஸ் மனிதர்களுடைய சிவப்பு கார்பஸில்ஸ்களில் இல்லை. குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும் உயர்தர மிருகங்களுடைய சிவப்பு கார்பஸில்ஸ்களிலும் நூக்ளியஸ் இல்லை. ஆனால், பறவைகள், ஊர்வன, மீன்கள் ஆகிய ஜெந்துக்களின் சிவப்பு கார்பஸில்ஸ்களில் முட்டை வடிவமான ஒவ்வொரு பெரிய நூக்ளியஸ் உண்டு.

இரத்தம் உடம்புமுழுதிலும் சுலபத்தில் பரவும்பொருட்டே, அது ஜல வடிவமாயமைந்திருக்கிறது. அதற்காக பிளாஸ்மா என்னப்படும் தண்ணீர் பெரும்பாகமாய் அமைக்கப்பட் டிருக்கிறது. நாம் உண்ணும்ஆகாரம் ஜீரணமாக்கப்பட்ட பிறகு அந்த ஸத்தை பிளாஸ்மாவே தள்ளிக்கொண்டு போய் உடம்பு முழுதிலும் பரப்புகிறது; உடம்பு முழுதிலும் சேதாரமாய்க் கெட்டுப்போகும் வஸ்துக்களை கிட்னீஸ் (Kidneys) என்று குறிக்கப்படும் குண்டிக்காய், சுவாசப் பைகள், ஈரல் குலை, தோல் முதலியவைகளுக்குக் கொண்டு போகின்றது. அங்கிருந்து அவை வெளிப்படுத்தப்படுகின்றன. சிவப்பு கார்பஸில்ஸ்களில் உள்ள ஹேமோக்ளாபின் என்னும் வஸ்து நாம் சுவாசிக்கும் பிராண வாயுவை நமது சுவாசப் பைகளிலிருந்து எடுத்துக் கொண்டுபோய் உடம்பு முழுதிலும் உள்ள தசைகளிலெல்லாம் சேர்க்கிறது. வெள்ளை கார்பஸில்ஸ் இரத்தத்தில் சேரும் அசுத்தங்களையெல்லாம் அழித்து, அதை சுத்தி செய்து, உடம்பில் நோய் உண்டாகாதபடி தடுக்கின்றன. இரத்தம் உடம்பு முழுதும் எப்போதும் பிரதக்ஷிணம் செய்துகொண்டே இருப்பதால், உடம்பின் எல்லா பாகங்களிலும் சூடு ஒரே சீராய் இருந்துகொண் டிருக்கிறது.

இரத்தத்தில் உள்ள சிவப்பு கார்பஸில்ஸின் ஜீவிய வரலாற்றை நாம் கவனித்தால், அது மிக சுவாரஸ்யமான விஷயமாயிருக்கும். நம் உடம்பிலுள்ள நீளமான எலும்புகளின் நடுவில் உள்ள ஸத்தான பாகத்தில் சிவப்பு கார்பஸில்ஸ் உற்பத்தியாகி இரத்தத்தில் சேர்ந்துகொள்ளுகின்றன. அவை பிராண வாயுவை உடம்பு முழுதும் பரப்பிப் பரப்பி முதிர்ச்சியடைந்து அழிந்துபோகக்கூடிய நிலைமையில் இரைப்பைக்கு அடியில் இடது பாகத்தில் உள்ள நுரையீரலில் போய் உயிரை விடுகின்றன.

இவ்வாறு அழிந்துபோகும் கார்பஸில்ஸ்களி லிருந்ததுப், செம்மஞ்சள் நிறத்தை உண்டாக்குவதுமான வஸ்து ஈரல் குலைக்கும், குண்டிக்காய்க்கும் போவதால், அவற்றிலிருந்து முறையே உற்பத்தியாகும் பித்தநீரும், மூத்திரமும் செம்மஞ்சளான நிறமுடையவையா யிருக்கின்றன.

நம் உடம்பில் தேவை ஏற்படுமோனால், ஆயிரக்கணக்கான சிவப்பு கார்பஸில்ஸ் மிக துரிதத்தில் உற்பத்தியாகிவிடுமாம். உடம்பில் இரத்தம் ஏராளமாக சேதமாகிவிடும் பட்சத்திம், ஒரு நிமிஷத்திற்கு, பதினேழரைக் கோடி சிவப்பு கார்பஸில்ஸ் வீதம் உற்பத்தியாவதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

மனிதனுக்கு இரத்த சோகை, பாண்டு ரோகம் முதலியவை உண்டாகும்போது, அவனுடைய உடம்பு வெளிறடைந்துவிடுகிறது. அவனுடைய இரத்தத்தில் போதிய அளவு சிவப்பு கார்பஸில்ஸ் இல்லாமல் போவதாலும், செம்மஞ்சள் நிறத்தை உண்டாக்கும் வஸ்து டி கார்பஸில்ஸ்களில் குறைந்து போவதாலும், இரத்த சோகை முதலிய நோய்கள் உண்டாவதாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள். இம்மாதிரி நிறத்தை உண்டாக்கும் வஸ்துவில் இரும்பு கலந்திருப்பதாகவும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகையால், இரத்த விருத்திக்கு மருந்து சாப்பிடுகிறவர்கள் அயசிந்தூரம், அயதிராவகம், அயக்காந்த சிந்தூரம் முதலிய மருந்துகளை உட்கொள்ளுகிறார்கள். மேல் நாட்டு வைத்திய முறையிலும் இரத்த சோகைக்கு இரும்பு சம்பந்தமான மருந்தையே கொடுக்கிறார்கள். இளைத்தவன் இரும்பைத் தின்னு என்பது நம் நாட்டு சித்த வைத்தியர்கள் அநுபவத்திற்குக் கொணர்ந்த சாதாரணமான பழமொழி.

சரியான புஷ்டியைக் கொடுக்கக்கூடிய ஆகாரம் இல்லாமையாலும், தேவையான அளவு சுத்தமான காற்று இல்லாமையாலும், சிறுவர் சிறுமியருக்கு இரத்த சோகை சர்வ சாதாரணமாய் உண்டாகிறது.

இரத்தத்தில் சிவப்பு கார்பஸில்ஸ் இருப்பதாகக் கண்டுபிடித்ததற்கு வெகு காலத்திற்குப் பிறகே வெள்ளை கார்பஸில்ஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது கி. பி. 1773-ம் வருஷத்திற்குப் பிறகே பின்னது கண்டுபிடிக்கப்பட்டது. அவைகளை நாம் வெள்ளை கார்பஸில்ஸ் என்று குறித்தாலும், அவைகளுக்கு எந்த நிறமு மில்லை. அவைகளின் வடிவம் மாறியபடியே இருக்கும். ஒரு மயிரிழை கனமுள்ள இரத்தக் குழாயிலிருந்துகூட அவை எப்படியோ வெளியில் வந்து, அவைகள் எந்த இடத்தில் தேவையோ அங்கே போய்விடும் விசித்திரமான இயல்பு அவைகளிடம் அமைந்திருக்கிறது.

வெள்ளை கார்பஸில்ஸின் முக்கிய வேலை உடம்பில் வியாதிக் கிருமிகள் சேராதபடி பாராக் கொடுப்பது போன்றது. அவ்விதமான கிருமிகள் எவையேனும் இரத்தத்தில் கலந்துகொண்டால், அவைகளை வெள்ளை கார்பஸில்ஸ் அழித்து இரைப் பைக்குள் மறு

படி அனுப்பியோ, அல்லது, தங்களோடு சேர்த்துக்கொண்டோ, அவைகளுடைய கெடுதலை நீக்கிவிடுகின்றன. இந்த வகையில் அவைகள் வேலை செய்து, முடிவில் தாங்களே அழிந்துவிடுகின்றன.

இம்மாதிரி அழிந்து போகும் வெள்ளை கார்பஸில்ஸ்கள் சீழ் வடிவமாய் நம் உடம்பிலிருந்து வெளியாகி விடுகின்றன. உடம்பில் நுழைந்துகொள்ளும் வியாதிக் கிருமிகளை அழிப்பதில் தாங்களும் அழிந்து, தோலிற்கு அடியில் சொரி, சிரங்கு, கட்டி ஆகிய பல வடிவங்களில் தோன்றி, அவை உடையும்போது சீழ் வடிவமாய் வெளிப்பட்டுப் போகின்றன.

எனவே கார்பஸில்ஸ் பிராண வாயுவை எடுத்துக்கொண்டு போய் விநியோகம் செய்வது, உடம்பைப் பாதுகாப்பது ஆகிய இரண்டு முக்கியமான வேலைகளைச் செய்கின்றன. இரத்தத்தில் உள்ள ஜல வடிவமான பகுதி ஜீரணமான ஆகார ஸத்தை உடம்பு முழுதும் பரப்பி, எல்லா இடங்களிலும் உண்டாயிருக்கும் அழிவடைந்த வஸ்துவை கழிவிலாகாவுக்கு மாற்றுவது, உடம்பின் சூட்டை சமநிலைமையில் வைப்பது ஆகிய காரியங்களைச் செய்கிறது.

இரத்தத்தில் இன்னொரு முக்கியமன குணம் இருக்கிறது. அது, சரியான நிலைமையில் உள்ள குழாயில் இருக்கும் வரையில் இரத்தம் ஜலவடிவமாய் இருக்கிறது. ஆனால் இரத்தக் குழாயை விட்டு, அது விலகி வெளிப்படுமானால், அது களிபோல் கெட்டியாகி தோய்ந்துப்போகிறது. அதற்கு மேலும் கொஞ்சநேரம் கழிந்தால், அது கல் போல் இறுகிப்போகும். அது ஒரு பாத்திரத்தில் இருந்தால், பாத்திரத்தைக் குப்புறக் கவிழ்த்தால் கூட, இரத்தக் கட்டி கீழே விழாது.

ஆனால் அதற்குப் பிறகு ஒருமணி காலம் கழியுமானால், அதிலிருந்து, மஞ்சள் நிறமுடைய ஊன் தண்ணீர் கசிந்து வெளிப்படத் தொடங்கும்; அது கசியக் கசிய, இரத்தக்கட்டி சுருங்கி சிறுத்துக் கொண்டே போகும்.

இரத்தம் குழாயை விட்டு வெளிப் பட்டவுடன் எதனால் தோய்ந்து இறுகிப்போகிறது என்ற சம்சயம் எவருக்கும் உண்டாகலாம். ஆரோக்கியமான நிலைமையி லிருக்கும் மனிதருடைய இரத்தத்தின் ரஸபாகமான பிளாஸ்மாவில் ஆல்பூமின், பிப்ரிஜேஜன், கால்ஸியம் என்னும் வஸ்துக்கள் இருக்கின்றன. அவையன்றி, இரத்தம் சிந்தப்பட்டவுடன், அதிலுள்ள சில வெள்ளை கார்பஸில்ஸ் பிளந்து போவதால் அவற்றிற்குள்ளிருக்கும் வெள்ளைக் கருவும் வெளிப்படுகிறது. இவை எல்லாம் நுரைத்துக்கொண்டு நூல்நூற்றுக் கொள்ளு

கின்றன. அப்படி ஏற்படும் நூல் பின்னல் கார்பஸில்களை யெல்லாம் ஒன்ருய்ச் சேர்த்து இறுக்கிப்பிடித்துக் கொள்ளுகிறது. அதற்குள் இருக்கும் ஜலபாகம் கசிந்து ஊன் தண்ணீராய் வெளிப்படத் தொடங்குகிறது.

இந்த மாதிரி குழாயிலிருந்து இரத்தம் வெளிப்பட்டவுடன் அது கட்டிப்போகும் குணமுடையதா யிருப்பது மிக முக்கியமான ஒரு பெரிய நன்மை. அந்த நன்மை இயற்கையிலேயே அமைந்திருக்கிறது. நம் உடம்பில் எங்கேயாவது கத்திவெட்டு ஏற்பட்டால், இரத்தம் கொஞ்சநேரம் வழிகிறது, பிறகு தானுகவே நின்று போகிறது; எதனுல் நின்றுபோகிறது? வெட்டு வாயில் இரத்தம் கட்டிக்கொண்டு இறுகிப்போவதால், வழி அடைபட்டுப் போகிறது. இரத்தம் தானுகவே கட்டிக்கொள்ளாததா யிருந்தால், உடம்பில் உள்ள இரத்தம் முழுதும் வெளியில் வந்துவிடு மாதலால், மனிதருடைய உயிருக்கு அபாயம் நேருவது நிச்சயம். எவருக்கேனும் இரத்தக்காயம் ஏற்படும் பட்சத்தில், இரத்தம் தோய்ந்து கட்டிப் போயிருப்பதை நாம் அப்படியே விட்டு, அதற்குமேல் மருந்துபோட வேண்டும். இரத்தம் தோய்ந்திருப்பதை விலக்கினுல் குழாய் திறந்து கொள்ளும்; உடனே மறுபடி இரத்தம் வெளிப்படத் தொடங்கும்.

சில மனிதர்களுடைய இரத்தம் சுலபத்தில் கட்டிக்கொள்வதில்லை. அப்படிப்பட்டவருக்கு இரத்தக் காயம் ஏற்படுமானுல் அவர்களுடைய இரத்தம் ஏராளமாய் வெளிப்பட்டுவிடு மாதலால் அவர்கள் பிழைப்பது அரிதாய்விடும். எனவே, குழாயை விட்டு வெளிப்படும் இரத்தம் உடனே இயற்கையிலேயே தோய்ந்து இறுகிப் போகும் குணமுடையதா யிருப்பது ஜீவ ஜெந்துக்களின் உயிரைக் காப்பதற்காக ஏற்பட்ட அபாரமான ஓர் இயற்கை அநுகூலமென்றே நாம் கருதவேண்டும்.

கட்டிப்போன இரத்தத்திலிருந்து வெளிப்படும் ஊன் தண்ணீரை நாம் பூதக்கண்ணுடியால் பார்த்தால், அதில் கார்பஸில்ஸ் இல்லை என்பது நன்ருகத தெரியும். ஊன் தண்ணீரில் சில உப்புகள், இரண்டு விதமான வெள்ளைக்கரு, ஜலம் ஆகிய வஸ்துக்கள் அடங்கி இருக்கின்றன.

தோய்ந்து கட்டிப்போன இரத்தத்தில் இருந்து கசியும் ஊன் தண்ணீரைப் பிழிந்துவிட்டு மற்ற பாகத்தை பூதக் கண்ணுடியின் உதவியால் பார்த்தால், ஏராளமான சிவப்பு கார்பஸில்ஸ், சில வெள்ளை கார்பஸில்ஸ் ஆகியவை சிலந்திக் கூண்டில் காணப்படுவன போன்ற நூல்களால் பந்துபோல் கட்டப்பட் டிருப்பதை நாம் நன்ருகக் காணலாம்.

# விக்ஞான வினு விடை

## அத்தியாயம்—8

### சூடு

(முன் தொடர்ச்சி)

வினு:—சூட்டைப் பரப்பும் குணத்தினுல், வஸ்துக்கள் எப்படிப் பிரிக்கப்பட்டிருக்கின்றன?

விடை:—ஒரு வஸ்து, அதன் ஒரு பாகத்தில் உறைக்கும் சூட்டை அதன் இதர பாகங்களுக்கோ, அல்லது, அதைத் தொடும் இதர வஸ்துவிற்கோ மிக சீக்கிரத்தில் பரப்பிவிடக் கூடியதா யிருந்தால், அது குட் கண்டக்டர் (Good Conductor) என்று குறிக்கப்படுகிறது. அப்படிப் பரப்பி விடாத வஸ்து பியாட் கண்டக்டர் (Bad Conductor) என்று குறிக்கப்படுகிறது. கண்டக்டர் என்ருல் பரப்புவது, வியாபிக்கச் செய்வது, அல்லது, அனுப்புவது என்பது கருத்து. குட், பியாட் என்ருல், முறையே, சிறந்த, இளப்பமான என்னும் பொருள்களைத் தருகின்றன. வெள்ளி, தாமிரம், தங்கம், பித்தளை, ஜிங்க், இரும்பு, ஈயம் முதலிய உலோகங்கள் சூட்டை நன்ருகப் பரப்பும் குணமுடையவை. உலோக மல்லாதவையான கண்ணுடி, காகிதம், துணி, கட்டை, கல், தந்தம் முதலிய கெட்டி வஸ்துக்கள் இந்த விஷயத்தில் இளப்பமானவைகள்.

வினு:—ஜல வடிவ வஸ்துக்களிலும், காற்று வடிவ வஸ்துக்களிலும் இவ்வித வித்தியாசம் உண்டோ?

விடை:—உண்டு. ஜல வடிவ வஸ்துக்களில் பாதரஸம் சூட்டை நன்ருகப் பரப்பக்கூடியது. தண்ணீர், எண்ணெய் முதலியவை இளப்பமானவை. காற்று வடிவமான வஸ்துக்கள் சூட்டைப் பரப்புவதே இல்லை.

வினு:—சூட்டைப் பரப்புவதில் சிலாக்கியமான வஸ்துக்கள் யாவும் ஒரேவிதமாக சூட்டைப் பரப்புகின்றனவோ?

விடை:—இல்லை; அவை வித்தியாசப்படுகின்றன. இரும்பைக் காட்டிலும், ஜிங்க் சிலாக்கியமானது; ஜிங்கைவிடப் பித்தளை, பித்தளையைவிட தங்கம், தங்கத்தைவிட தாமிரம், தாமிரத்தைவிட வெள்ளி என்னும் வரிசைக் கிரமத்தில் ஒன்றைவிட அடுத்தது சிலாக்கியமானது. இதை நாம் பரீட்சித்தே கண்கூடாய்ப் பார்க்கலாம்.

வினா:—எப்படி?

விடை:—அரை அங்குலப் பருமனும், இரண்டடி நீளமும் உள்ள ஒரு தாமிரக் கம்பியை நாம் எடுத்துக்கொள்ளுவோம். அதே பருமனும், நீளமும் உள்ள ஓர் இரும்புக் கம்பியையும் எடுத்துக் கொள்ளுவோம். ஒரு கட்டையின் மேல், சுமார் ஒரு முழ உயரம் நிறுத்தப்பட்டுள்ள கால்களின்மேல் ஷை கம்பிகளை ஒன்றுக்குப் பிறகு மற்றொன்றாய் நீளத்தில் வைப்போம். ஷை கட்டையின் நடு பாகத்தில் ஒரு கம்பியின் ஒரு நுனியும், இன்னொரு கம்பியின் ஒரு நுனியும் ஒன்றையொன்று தொட்டுக்கொண் டிருக்கவேண்டும். மற்ற இரண்டு நுனிகளும் இரண்டு கோடிகளிலும் இருக்கும். இரண்டு நுனிகள் ஒன்றாய்ச் சேருமிடத்தில் ஷை கம்பிகளின் அடியில், நெருப்பு ஜ்வாலையை வைத்து சூட்டை ஏற்றுவோம். அந்தச் சூடு இரண்டு நுனிகளிலும் சமமாக உறைத்து, இரண்டு கம்பிகளின் கோடி வரையில் பரவும். அப்போது நாம் அரக்குத் துண்டுகளில் இரண்டை எடுத்து, ஒன்றை ஒரு கோடியிலும், இன்னொன்றை இன்னொரு கோடியிலும் கம்பிகளின்மேல் வைப்போம். அப்போது நெருப்பு ஜ்வாலை இருக்குமிடத்தி லிருந்து இரண்டு அரக்குத் துண்டுகளும் சம தூரத்தில் இருக்கும். ஆனால் கம்பிகளில் சூடு ஏற ஏற, தாமிரக் கம்பியின்மேல் உள்ள அரக்கு மிக சீக்கிரத்தில் உருகத் தொடங்கும். இரும்புக் கம்பியின்மேல் உள்ள அரக்கு உருக அதிக நேரம் பிடிக்கும். இதிலிருந்து நமக்குத் தெரிவ தென்னவென்றால், இரும்புக் கம்பியின் வழியாக சூடு பரவுவதைக் காட்டிலும், தாமிரக் கம்பியின் வழியாக சூடு அதிக சீக்கிரத்திலும், உரமாகவும் பரவுகிறது என்பது சந்தேகமறத் தெரியும். இதுபோல மற்ற கம்பிகளையும் வைத்து, தாரதம்மியத்தை நாம் தெரிந்து கொள்ளலாம். இதை நாம் இன்னம் பல உதாரணங்

களால் விளக்கலாம். நமது ஸ்திரீகள் அடுப்பில் உள்ள இரும்புச் சட்டியைக் கையால் தூக்க முடிகிறதில்லை. ஆனால், கல் சட்டி, மண் பாண்டம் முதலியவற்றை பெரும்பாலும் கையால் தொட்டு இறக்கிவிடுகிறார்கள். ஏனென்றால், கல், மண் முதலியவை சூட்டைப் பரப்புவதில் இளப்பமானவை. அதேபோல கண்ணாடிக் குழாய், அல்லது, கண்ணாடிக் கம்பியை நாம் ஒரு பக்கத்தால் பிடித்துக்கொண்டு இன்னொரு முனையில் சூட்டை ஏற்றலாம். சூடு பரவாது. கம்பளி, பட்சி இறகுகள் முதலியவை சூட்டைப் பரப்பும் இயல்பில் மிகவும் இளப்பமானவை. அதனாலேயே, மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் கம்பளமும், இறகுகளும் இயற்கையிலேயே போர்வைகளாய் அமைந்திருக்கின்றன. ஒரு மிருகத்தின் சரீரத்தில் உள்ள சூடு, அதைச் சுற்றிலும் இருக்கும் வஸ்துக்களை விட அதிகமாய் இருக்குமானாலும், அந்தச் சூடு குறைந்து போகாமல், உரோமம், கம்பளம் முதலியவை காத்துக்கொண் டிருக்கின்றன. ஆகவே சில வஸ்துக்கள் சூட்டைப் பரப்பும் குணத்தில் இளப்பமானவையா யிருப்பதால் நமக்குப் பலவிதமான அநுகூலங்கள் ஏற்படுகின்றன.

வினா:—என்னென்ன அநுகூலங்கள்?

விடை:—சூட்டைப் பரப்புவதில் இளப்பமானவையா யிருக்கும் வஸ்துக்கள் இரண்டு விதத்தில் உபயோகப்படுகின்றன. உதாரணமாக பிளானல் துணியை எடுத்துக் கொள்வோம். அதை நாம் ஒரு வஸ்துவின்மேல் சுற்றி வைத்தால், அது அந்த வஸ்துவின் சூடு போய் விடாமல் காக்கிறதன்றி, வெளியுலகத்து சூடு அதற்குள் நுழையாமலும் தடுக்கிறது. குளிர் காலத்தில் நாம், பிளானல் சட்டையை அணிகிறோம்; கம்பளிப் போர்வையைப் போர்த்திக் கொள்ளுகிறோம். ஏனென்றால் நம்முடைய உடம்பில் உள்ள சூடு போய்விடாமல் இருக்கும் பொருட்டு நாம் அப்படிச் செய்கிறோம். ஐஸ் கட்டியை நாம் பிளானல் துணி, அல்லது, மரத் தூளால் மூடி வைக்கிறோம். ஏனென்றால், வெளியில் உள்ள சூடு அதில் உறைக்காமலும், அதை உருக்கிவிடாமலும் இருப்பதற்காக நாம் அவ்வாறு செய்கிறோம். காற்று வடிவமான வஸ்துக்கள் சூட்டைப் பரப்புவதில் மிகமிக இளப்பமானவை. சூட்டைப் பரப்பும் இயல்பு தாமிரத்திற்கு எவ்வளவு இருக்கிறதோ

அதில் ஆயிரத்தில் ஒரு பங்குதான் சாதாரண வாயுவிற்கு அந்த இயல்பு அமைந்திருக்கிறது. பிளானலுக்குள் நாம் ஐஸ் கட்டியைச் சுற்றி வைத்தால், வெளியுலகத்தின் சூடு ஐஸ் கட்டியில் உறைக்காமல் தடுப்பது பிளானல் மாத்திரமல்ல. பிளானலின் இழைகள் இறுகலாயிராமல் இலேசாய் செய்யப்பட் டிருப்பதால், அவைகளுக்கு நடுவில் சாதாரண வாயு நிறைந்திருக்கிறது. அது சூட்டைப் பரப்புவதில் இளப்பமான தாகையால், வெளியுலகத்து சூடு ஐஸ் கட்டியில் உறைக்காமல் தடுக்கிறது. இதேபோல மரத்தூளிற்குள்ளும் காற்று சம்பந்தப்பட் டிருப்பதால் அது வெளியுலகத்து சூடு உள்ளே தாக்காமல் தடுக்கிறது.

வினு:—சூடு மாத்திரம்தான் பரவுகிறதோ? குளிர்ச்சி பரவுகிறதில்லையோ?

விடை:—ஒரு வஸ்து சூட்டை அதிக சீக்கிரமாய்ப் பரப்பி விடக்கூடியதா யிருந்தால், அதன்மேல் நாம் நமது கையை வைத்தவுடன் நமது கையின் சூட்டை அது சிதற அடித்துவிடுகிற தாகையால், அது குளிர்ச்சியா யிருப்பதாய் நாம் உணருகிறோம். குளிர் காலத்தில் நம்முடைய அறையில் உள்ள எல்லா வஸ்துக்களும் ஜிலுஜிலுப்பா யிருக்கின்றன. அந்த அறையில் நெருப்பே இல்லை என்று வைத்துக்கொள்வோம். எல்லா வஸ்துக்களும், ஒரே அளவான குளிர்ச்சி யுடையவைகளாய் இருக்கவேண்டும். ஆனால் நாம் தொட்டுப் பார்த்தால், வஸ்துக்களின் ஜிலுஜிலுப்பு சிலவற்றில் அதிகமாயும், சிலவற்றில் குறைவாயும் இருக்கும்.

வினு:—அந்த மாதிரி வித்தியாசம் எதனால் ஏற்படுகிறது?

விடை:—ஒரு வஸ்து சூட்டைப் பரப்புவதில் சிலாக்கியமானதா யிருந்தால், நாம் தொட்டவுடன், நம் கையின் சூட்டை அது மிக சீக்கிரத்தில் நெடுகப் பரப்பிவிடுவதால், அது ஜிலு ஜிலுப்பா யிருக்கிறது. இன்னொரு வஸ்து அந்த குணத்தில் இளப்பமானதா யிருப்பதால், நம் கையை வைத்தால், கையின் சூட்டை அது பரப்பாமல் தொடும் இடத்தில் மாத்திரம் தேக்கிவிடுவதால் அந்த வஸ்துவின் ஜிலுஜிலுப்பு நம் கையில் குறைவாக உறைக்கிறது. குளிரா யிருக்கும் ஒரு நாளில், ஓர் அறைக்குள் இருக்கும் எல்லா வஸ்துக்

களிலும் ஒரே அளவான குளிர்ச்சி ஏறி இருக்கவேண்டு மானுலும், நாம் ஓர் இரும்புக் கரண்டியைத் தொட்டால் அது தேள் கொட்டு வதுபோல் இருக்கும்; ஒரு விறகை அல்லது கம்பளிப் போர்வை யைத் தொட்டால் அது அவ்வளவு துன்பகரமானதாயிராது. ஏன்? இரும்பு அதன்மேல் உறைக்கும் சூட்டை ஒரே இடத்தில் தேக்கா மல் மிக சீக்கிரத்தில் பரப்பிவிடுகிறது. கம்பளி, அல்லது, கட்டை அதன்மேல் உறைக்கும் சூட்டைப் பரப்பாமல் அப்படியே தடுத்துத் தேக்குகிறது. நாம் இரும்பு முதலிய வஸ்துக்களை நெருப்பிற்குப் பக்கத்தில் கொஞ்சநேரம் வைத்த பிறகு, இரும்பைத் தொட முயன்ருல், நாம் தொட முடியாதபடி அதில் சூடு ஏறிப் பரவிப் போயிருக்கும். கட்டையை நாம் சாதாரணமாகத் தொடலாம். அதில் சூடு ஏறிப் பரவி இருப்பதில்லை. இரும்பைவிட, தாமிரமும், தாமி ரத்தைவிட வெள்ளியும் அதிக விரைவில் சூட்டைப் பரப்புகிற வஸ்துவாதலால், அவ்வாறு அதிக சிலாக்கியமாயிருப்பவைகளை நாம் தொட்டால், அவற்றில் ஜிலுஜிலுப்பு அதிகமாயிருப்பதாக நாம் உணருவோம். ஆகையால் எல்லாவற்றிலும் எது தொடுவதற்கு அதிக ஜிலுஜிலுப்பா யிருக்கிறதோ, அது சூட்டைப் பரப்புவதில் எல்லாவற்றையும் விட அதிக சிலாக்கியமானதென்று நாம் அநுமா னித்துக் கொள்ளவேண்டும்.

வினு :—தர்மாஸ் பிளாஸ்க் (Thermos Flask) என்னப்படும் சீசாவில் ஊற்றி வைக்கப்படும் காப்பி, தண்ணீர் முதலியவை சூடாக இருந்தால், சூடாகவே இருக்கின்றன; குளிர்ந்தவையா யிருந்தால், அதே நிலைமையில் இருக்கின்றனவே; அதன் காரணமென்ன?

விடை :—தர்மாஸ்-பிளாஸ்க் என்று குறிக்கப்படும் சீசாவில் உத்தியோகஸ்தர்கள் தமது காரியாலயத்திற்குப் போகும்போது காப்பி, வென்னீர் முதலியவற்றைக் கொண்டுபோவது பலருக்கும் தெரிந்த விஷயம். சிலர் அதை வீடுகளிலும் உபயோகப்படுத்து கிருர்கள். இரண்டு கண்ணுடி சீசாக்கள் ஒன்றுக்குள் ஒன்ருய் வைக் கப்பட் டிருப்பதுபோல் அது செய்யப்பட்டிருக்கும். இரண்டிற்கும் நடுவில் இடைவெளி இருக்கும். முகம் பார்க்கும் கண்ணுடியின் பின்புறத்தில் எப்படி பாதரஸத்தைப் பூசி மறைத்திருப்பார்களோ அப்படி ஷை இடைவெளியின் இரண்டு பக்கச் சுவர்களிலும் பாத

ரஸத்தைப் பூசி மறைத்திருப்பார்கள். முகம் பார்க்கும் கண்ணுடி யில் போகும் வெளிச்சம் அப்புறம் போகாமல் எப்படித் தடைப் பட்டுத் திரும்பி வருகிறதோ, அதேபோல, வெளிச்சத்தின் கிரணம் சீசாவிற்குள்ளிருந்து வெளியிலோ, வெளியுலகத்திலிருந்து சீசாவிற் குள்ளோ போகாமல் தடுக்கப்பட்டுப் போகிறது. அதுவுமன்றி, இரண்டு சீசாக்களுக்கும் நடுவில் உள்ள இடைவெளியில் உள்ள காற்று அடியோடு வெளியேற்றப்படுவதால் அங்கு எவ்வித வஸ்துவு மில்லாமல் வெறுவெளியே இருப்பதால், அணுக்களின் மூலம் சூடு பரவுவதற்கு மார்க்கமே இல்லாமல் இரண்டும் அலாக்காக இருக் கின்றன. ஆதலால், இந்த சீசாவிற்குள் சூடான வஸ்து விடப்பட் டால், அதன் சூடு வெளியில் பரவிப் போகாமல் அப்படியே இருக் கிறது. குளிர்ச்சியான வஸ்துவை வைத்தால், வெளியுலகத்து சூடு அதில் உறைப்பதற்கு வகையில்லை யாதலால், அதன் குளிர்ச்சி மாருமல் இருக்கிறது.

இதேபோல, சூட்டைப் பரப்பாத வஸ்துக்களை உபயோகப் படுத்தி, பலவிதமான சாதனங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. உலோகங்களால் செய்யப்பட்ட பாத்திரங்கள், ஆயுதங்கள் முதலிய வற்றின் சூடு கையில் உறைக்காமல் இருக்கும் பொருட்டு, அவற்றின் பிடிகள் சூட்டைப் பரப்பாத கட்டை, தந்தம், எலும்பு முதலிய பலவிதமான வஸ்துக்களால் செய்யப்பட் டிருக்கின்றன. சில சம யங்களில் கைப்பிடிகளும் உலோகங்களால் ஆனவையா யிருக்கும்; ஆனால் அடி பாகத்தில் இருக்கும் உலோகத்தோடு அவை சம்பந்தப் படாமல் அலாக்காக இருக்கும்படி இடையில் சூட்டைப் பரப் பாத வஸ்துக்களைப் பொருத்தி இருப்பார்கள். செங்கல்லைவிட, கருங்கல் சூட்டைப் பரப்புவதில் சிலாக்கியமான தாகையால், செங் கல் சுவர்களைக் கொண்ட வீட்டைவிட, கருங்கல் சுவர்களை உடைய வீடு வெயில் காலத்தில் அதிகப் புழுக்கமானதாயும், குளிர் காலத் தில் அதிக குளிர்ச்சியுடையதாயு மிருக்கும். மரக்கட்டை சூட்டைப் பரப்புவதில்லை யாகையால், குளிர்ச்சியான நாடுகளில் மரத்தாலேயே வீடுகளைக் கட்டிக்கொள்ளுகின்றனர். ஏனென்றால், அவற்றிற்குள் இருக்கும் மனிதர்களுடைய சூடு, வெளியுலகத்துக் குளிரினால் சித றிப் போகாமல் மரம் காத்துக்கொண் டிருக்கும். பனிக்கட்டி சூட்

டைப் பரப்பும் தன்மை யுடைய தல்ல. ஏனென்றுல், அதற்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கும் சாதாரண வாயு சூடு பரவுவதைத் தடுக்கிறது. குளிர்ச்சியான தேசங்களில், அறைகளில், முன்னும் பின்னுமாய் இரண்டு ஜன்னல்கள் பொருத்தப் பட்டிருக்கும். ஏனென்றுல், அவைகளுக்கு இடையில் அகப்பட்டுக் கொண்டிருக் டிருக்கும் காற்று, அறைக்குள் இருக்கும் சூட்டைக் காத்துக் கொண்டிருக்குமாம்.

சில சமயங்களில், தடிப்பான கண்ணுடி சீசாக்கள் சூட் டண்டை காட்டப்பட்டவுடன் உடைந்துபோவதை நாம் காண்கி ரும். கண்ணுடி சூட்டை வாங்கிப் பரப்பிவிடும் தன்மை உடைய தல்ல. திடீரென்று அதன் ஒரு பாகத்தில் சூடு தாக்குமானுல், அது அதே இடத்தில் இருந்து கொண்டு அந்த இடத்தை உப்ப வைக் கிறது. ஆகவே அந்த பாகம் இதர பாகத்திலிருந்து பிளந்துகொண்டு விலகிவிடுகிறது. கண்ணுடி தடிப்பா யில்லாமல் இலேசாய் இருந் தாலும், சூடு திடீரென்று அமிதமாய் உறைக்காமல், கொஞ்சம் கொஞ்சமாய் உறைத்தாலும், சூடு, கண்ணுடியின் எல்லா பாகங் களிலும் சமமாய்ப் பரவுவதற்கு அவகாசம் ஏற்படும். அப்போது அது உடையாது. அதே போல, சூடாயிருக்கும் கண்ணுடி வஸ்துவைக் குளிர வைப்பதிலும் அபாயம் உண்டு. குளிர்ச்சி எல் லாப் பாகத்திலும் சமமாகவும், மிதமாகவும் உறைக்கும்படி செய்யா மல், ஒரே பக்கத்தில் அமிதமான குளிர்ச்சியை ஊட்டினுல், அந்தப் பக்கம் மாத்திரம் திடீரென்று சுருங்குவதால், அது உடைந்து போகும். குக்கர் (Cooker) என்று சொல்லப்படும் புதுமாதிரி சம யல் பெட்டி, வென்னீர் தயாரிக்கும் பாத்திரம் முதலியவை மேலே குறிப்பிடப்பட்ட யுக்திகளைப் பயன்படுத்தியே அமைக்கப்பட் டிருக் கின்றன. சாதாரணமாய் நம் வீடுகளில் உபயோகிக்கப்படும் அடுப்பு திறப்பா யிருப்பதால், கட்டைகள் எரிவதால் உண்டாகும் சூட்டில் ஒரு சிறிய பாகமே மேலே இருக்கும் பாத்திரத்தில் உறைக்கிறது. ஆகையால், நம் சமயல் முடிய அதிக காலம் பிடிக்கிறது. ஆகவே மூடப்பட்டிருக்கும் பாத்திரத்தின் அடியிலேயே தணலைப் போட்டு, அந்தத் தணலின் சூடு சிதறிப்போகாமல் இருக்கும்பொருட்டு, சூட் டைத் தேக்கும் வஸ்துவை அதைச் சுற்றிலும் பொருத்தினுல்,

[handwritten call numbers]


சொற்பமான தணல்களில் இருந்து உண்டாகும் சூட்டைக் கொண்டே மிக சீக்கிரத்தில் சமயல், வென்னீர் முதலியவை தயாராகி விடுகின்றன. இதனுல் விறகுச் செலவும் குறைகிறது; மிக சீக்கிரத்திலும், அதிக பிரயாசை இன்றியும் நம் காரியம் முடிகிறது. மேல் நாட்டார் நார்வீஜியன் குக்கிங் பாக்ஸ் (Norwegian Cooking Box) என்று குறிக்கப்படும் ஒரு பெட்டியின் உதவியால் சமயல் வேலையை சுலபப்படுத்தி இருக்கிருர்கள். பெல்ட் கியாப் (Felt Cap) என்று சொல்லப்படும் ஒருவித குல்லாவை நாம் பார்த்திருக்கிறோம். அது மிருதுவான ஒருவித கம்பளியினுல் செய்யப்பட்டது. அந்தக் கம்பளி சூட்டைப் பாப்பும் தன்மை யற்றது. அந்தக் காரணத்தினுலேயே அது குல்லாவாய் உபயோகிக்கப் படுகிறது. ஏனென்ருல், உஷ்ண தேசத்தில் சூரியனுடைய உக்கிரம் நம் தலையில் உறைக்காமல் அது தடுக்கிறது. குளிர் தேசத்தில் மனிதருடைய தலையின் சூடு தணிந்து போகாமல் அது காக்கிறது. அந்தக் கம்பளியை உபயோகித்து நார்வீஜியன் சமயல்பெட்டி செய்யப்பட் டிருக்கிறது. அந்தப் பெட்டியின் உட்புறம் முழுதும் தடிப்பான பெல்ட் கம்பளியால் போர்த்தப் பட்டிருக்கும். கடிகாரம் வைக்கப் படும் பெட்டிகளுக்குள் வெல்வெட் மெத்தையும் நடுவில் குழிவான இடமும் இருப்பது போல் ஷி பெட்டியின் நடுவில், மூடியோடுகூடிய ஒரு பாத்திரத்தைப் பொருத்துவதற்கு குழிவான ஒருபாகம் இருக்கும். அந்தப் பாத்திரம் அதற்குள் பொருத்தப்பட்டுப் போனுல் அதைச் சுற்றிலும் பெல்ட் கம்பளி மெத்தை போர்த்திக்கொண் டிருக்கும். அந்தப் பாத்திரத்துக்குள் கீழ் பாகத்தில் தணல், மேல் பாகத்தில் சமைக்கப்பட வேண்டிய பதார்த்தம் முதலியவற்றை வைக்கும்படி சில அந்தஸ்துகள் இருக்கும். தணலைப் போட்டு, பதார்த்தத்தை வைத்து, பாத்திரத்தை மூடி, பெட்டியையும் மூடிவிட்டால், சமயல் மிக சுலபத்தில் பூர்த்தியாகிவிடுமாம்.

இவ்வாறு, சூடு பரவாமல் தடுக்கும் வஸ்துக்களை எண்ணிறந்த இயந்திர தந்திரங்களிலும், ஆயுதங்களிலும் பொருத்தி, பல வகைகளில் உபயோகப்படுத்தி இருக்கிருர்கள். அவைகளை நாம் அநுபவத்திலேயே தெரிந்துகொள்ள வேண்டும்.

199436